# மல்லிகை

'MALLIKAI' PROGRESSIVE MONTHLY MAGAZINE

ஆசிரியர்: டொமினிக் ஜீவா



87 APRIL

3/50

*With the Best Compliments from:*

**MANOHARAN & VETTIVEL**

ENGINEERS - CONTRACTORS

Managing Partners :
MR. S. K. MANOHARAPOOPAN
MRS. M. KARUNADEVY

Head Office :
53, KANDY ROAD,
JAFFNA - SRI LANKA,
phone : 23870

Branch Office
57, AMBALAVANAR ROAD
JAFFNA - SRI LANKA,
Phone : 24377

மல்லிகை

''ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
யாதியினைய கலைகளில் உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவார்''

'Mallikai' Progressive Monthly Magazine

**207** ஏப்ரல் — 1987

வெள்ளி விழாவை நோக்கி...

# 22-ஆவது ஆண்டு

**அன்பர்கள் அனைவருக்கும்**
**தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களை உங்கள் அனைவருக்கும் கூறிக்கொள்ளுகின்றோம்.

ஏப்ரல் மாத இதழ், பல நெருக்கடிகளுக்குள்ளும் தாங்கொணாத கஷ்டங்களுக்கும் மத்தியில் வெளிவந்து உங்களது கரங்களில் தவழ்கின்றது.

தேசத்தின் நாலு பகுதிகளில் இருந்து பல இலக்கியச் சுவைஞர்கள் மல்லிகையுடன் இன்று தொடர்பு கொள்ள முயன்று வருகின்றனர். பல புதிய முகங்கள். கலை ஆர்வத்தினால் உந்தப் பெற்று இலக்கிய முகாமில் தம்மையும் ஓர் அங்கமாக இணைய அவாவுற்றுள்ளனர். ஆக்கத் தரமும் சிருஷ்டி வேகமும் படைத்த இவர்களில் பலரை இனங்கண்டு உற்சாகப்படுத்த வேண்டிய காலத்தின் தேவை எம்முன்னாலுள்ளது.

கடந்த காலங்களில் மல்லிகை இளந் தலைமுறையினரை உருவாக்கி மக்கள் மத்தியில் உலவ விட்டதைப் போன்று, இன்னும் பலரை உருவாக்க வேண்டிய சாத்தியப்பாடு இன்று நம் முன்னுள்ளது. அந்தச் சமுதாயக் கடமையைச் செவ்வனே செய்வோம் என உறுதி கூறுகின்றோம்.

இவ் வருடம் ஜூலை முதலாந் திகதி பிரபல எழுத்தாளர் 'வரதர்' அவர்களின் பிறந்த தினம். அதையொட்டி சிறுகதைப் போட்டியொன்றும் இடம் பெறவுள்ளது. அடுத்த இதழில் போட்டி விவரங்கள் வெளியிடப்படும்.

அட்டையில்: அ. செ. மு. அவர்களுக்கு விழாவில் பொற்கிழி வழங்கும் காட்சி. நடுவில் அ. செ. மு. கீழே விழாவிற்கு வந்திருந்த கனவான்கள்,

— ஆசிரியர்

# மல்லிகைப் பந்தலின் கொடிக்கால்கள்



திரு. சி, சிவலிங்கம்

முன்னர் அடிக்கடி கொழும்பு போகும் காலங்களில் ஐந்தாங்குறுக்குத் தெருவிலுள்ள சிற்றம்பலம் கடையின் மேல் மாடியில் வசிக்கும் வானொலி நாடகக் கலைஞர் யேசு இரத்தினத்தைக் சாயங்கால வேளைகளில் சென்று கண்டு கதைப்பது வழக்கம்,

அந்தச் சமயத்தில் கடையின் காசுப் பட்டறையில் ஒருவர் இருந்து வியாபாரம் சம்பந்தமாகப் பேசிக் கொண்டிருப்பார். கடை முதலாளி என்பது மாத்திரம் எனக்குத் தெரியும். என்னைக் கண்டு சொண்டுக்குள் சிரிப்பார். நானும் சிரித்து வைப்பேன்.

ஒருநாள் கதையோடு கதையாக நண்பர் யேசு இரத்தினம் இவரைப்பற்றிச் சொன்னார்: 'சிவலிங்கம் ஒரு அருமையான தனிப் பிறவி. ஆட்களை ஒரு பார்வையிலேயே படம் பிடித்து விடுவார். ஒருவரை அவரது மனதிற்குப் பிடித்துவிட்டால் ஆயிரம் உதவிகளைச் சிமிக்கிடாமல் அவருக்குச் செய்யும் உயர்ந்த சுபாவம் கொண்டவர். அவரை நீங்கள் சந்தித்துக் கதைப்பது நல்லது' என்றார்.

பின்னர் அறிமுகமானோம். பழகப் பழக நண்பர் சிவலிங்கத்தின் மனிதாபிமானப் பண்புகள் என் இதயத்தைத் தொட்டன. இவரது துணைவியாரும் ஓர் எழுத்தாளர். மரகதா சிவலிங்கம் என்ற பெயரில் மல்லிகையில் எழுதியுள்ளார். மிகுந்த இலக்கிய ஆர்வம் மிக்கவர்.

அதிகமாகப் பேசமாட்டார்; மௌனி. ஆனால் அவதானிப்பு மிக்கவர். இவரது பார்வையை விட்டு எதுவுமே தப்பாது. இப்படியானவர்களின் இனிய நட்பை எண்ணி மனசில் அசைபோடும்போது ஒரு நிறைவு தெரிகின்றது. சிற்றிலக்கிய ஏடுகளுக்கு விளம்பரம் தந்துதவப் பல விற்பனை நிலையங்கள் முன்வருவதில்லை. காரணம் அது வீண் விரயம் என்ற மனப்பான்மைதான். தரமான இலக்கியச் சஞ்சிகையில் வெளியிடப்படும் விளம்பரங்கள் காலங் காலமாகப் பல்வேறு நூலகங்களில் வாழ்ந்து வரும் என்பதைப் பல வர்த்தகங்கள் எண்ணிப் பார்ப்பதேயில்லை. இதை நன்குணர்ந்து தனது நிறுவன விளம்பரத்தை மாதாமாதம் மல்லிகையின் பின் உள்ளட்டையில் தந்து தன்னளவில் இலக்கியப் பங்களிப்புச் செய்யும் இவரை என்றுமே மறக்க இயலாது.

— டொமினிக் ஜீவா



## நீதியை நிலை நிறுத்த விசாரணை தேவை!

30 – 3 – 87 அன்று யாழ்ப்பாண நகரத்து அரசினர் ஆஸ்பத்திரியில் மிகக் கொடூரமான சம்பவம் ஒன்று அரங்கேறி முடிந்தது.

கோட்டையில் இருந்து ஏவப்பட்ட ஷெல் ஆஸ்பத்திரி 19-ம் வார்ட்டினினுள் விழுந்து பயங்கரமாக வெடித்ததின் காரணத்தினால் ஒன்பது பேர் உடனடியாகக் கொல்லப்பட்டனர். இதில் அநேகர் நோயாளிகள்; சிலர் ஊழியர்கள். இன்னும் பலர் படுகாயமடைந்து அவதிப்பட்டனர்.

உலக மகா யுத்த காலத்தில் கூட, மருத்துவ கூடங்கள் பாதுகாப்பு வலயங்களாகக் கணிக்கப்பட்டு, பிரத்தியேகமாக அவை பாதுகாக்கப்பட்டன.

ஆனால் இன்று நோயாளிகள் தங்கிச் சிகிச்சை பெறும் மருத்துவ நிலையங்கள் கண் மண் தெரியாமல் தாக்கப்படுவது தினசரி நிகழ்ச்சியாக நடந்தேறி வருகின்றது,

இந்த ஆஸ்பத்திரி இத்துடன் ஏழாவது தடவையாக தாக்கப்பட்டுள்ளது.

இந்த மனிதக் கூட்டுக் கொலை நடந்தேறியுள்ளதைக் கண்டித்து மனித உணர்வுகள் இன்னமும் வற்றி விடாதவர்கள் தமது ஆன்மிக எதிர்ப்பைப் பகிரங்கமாக வெளியிட வேண்டும்.

அரசு இந்த மிலேச்சத்தனத்தை மூடி மெழுகப் பார்க்கின்றது. தவறான தகவல்களை வெகுசன தகவல் சாதனங்கள் மூலம் பரப்பி இந்த நாசகரமான நிகழ்வை நியாயப்படுத்த முனைகின்றது.

உயிரைப் பாதுகாக்க ஆதரவு தேடி வந்த நோயாளிகள் தமது சரணாலயத்திலேயே துடிக்கத் துடிக்கக் கொல்லப்படுவதென்பது சர்வதேச மிலேச்சத்தனமாகும். இது இந்த மண்ணில் வாழும் தமிழ் மக்களுக்கென்றே திட்டமிட்டுச் செய்யப்படும் கொடூரமாகும்.

இந்தக் கொடுமையை உரத்த குரலில் கண்டிக்கின்றோம்.

மனித குலமே, நாகரிக சமுதாயமே வெட்கித் தலைகுனிய வைக்கத்தக்க இத்தகைய இழி செயல் இனிமேலும் இந்த மண்ணில் இடம் பெறாத வகையில் நேர்மையான விசாரணை ஒன்றை உடன் நடத்த வேண்டுமெனவும் அரசைக் கோருகின்றோம்.

# சோமகாந்தனின் சிறுகதைகள்

— ச. முருகானந்தன்

ஈழத்தின் நவீன இலக்கிய வளர்ச்சிப் பாதையில் '950 களின் பிற்பகுதியிலும், 1960 களிலும், இலக்கியத்தின் சமூக இயைபும் உணர்விறுக்கமும், வளர்ந்து வரும் சமூக ஜனநாயகப் பாட்டின் தேவைகட்கியைய, சமகால இயைபிலேயே தங்கியுள்ளது என்ற கருத்து இலக்கிய ரீதியாக முன்வைக்கப்பட்டபோது, அக்கருத்தை ஏற்றுக்கொண்டு, சமூகத்தைப் பிரதிபலிக்கும் ஆக்கங்களை எழுதிய இலக்கியவாதிகள் பட்டியலில் சோமகாந்தனுக்கு முக்கிய இடமுண்டு. டானியல், கத்தசாமி, கதிர்காமநாதன், டொமினிக் ஜீவா, காவலூர் இராஜதுரை, சில்லையூர் செல்வராஜன், செ. கணேசலிங்கன். செங்கை ஆழியான், வரதர், சொக்கன், தளையசிங்கம், நடராஜன், நாகராஜன், செம்பியன் செல்வன், எஸ். பொ., செ. யோகநாதன், நீர்வை பொன்னையன், அன்புமணி, மாத்தளை கார்த்திகேசு, முருகபூபதி போன்றோர் அக்கால கட்டத்தில் வேகமாகவும் ஆழமாகவும் எழுதிவந்தார்கள். இவர்களது ஆக்கங்கள் இலக்கியத்தின் சமூகவியல் அமிசத்தை வலியுறுத்துவனவாக அமைந்திருந்தன.

சோமகாந்தன் அக்காலகட்டத்தில் கனதியான பல கதைகளைப் படைத்து, கைலாசபதி போன்றோரின் ஆய்வுகளில் இடம் பெற்றிருந்தும் கூட, இன்றைய தலைமுறையினர் பலரும் அண்மைக் காலம் வரை அவரது இலக்கிய ஆளுமையைச் சரியாகத் தெரிந்திருக்காமைக்கு இரு காரணங்களைக் குறிப்பிடலாம். ஒன்று, அவரது பதினைந்து வருட அஞ்ஞாதவாசம்; மற்றது உதிரிகளாகப் பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவந்த அவரது சிறுகதைகள் தொகுதியாக வெளியிடப்படாமை.

மல்லிகைப் பந்தலில் முதல் சிறுகதைத் தொகுதியாக வந்திருக்கும் சோமகாந்தனின் 'ஆகுதி' சிறுகதைத் தொகுதி மூலம் அவரது இலக்கிய ஆளுமையை விமர்சகர்களும், வாசகர்களும், புரிய எழுத்தாளர்களும் புரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிட்டியிருக்கிறது.

இலக்கியப் படைப்புகள் மூலம், மானுட ஜாதியை முனைப்புறுத்தி நோக்குவதன் மூலம் மனிதன் தன்னைத்தானே அறிந்து கொள்ளலாமாதலால் இலக்கியம், மனிதனை மனித நிலைப்படுத்தும் நடைமுறையில் மிக முக்கியமான ஓர் இடத்தினைப் பெறுகின்றது. சிறந்த மொழித்திறனுடனும், சமூகப் பார்வையுடனும் மகத்தான இன்ப நுகர்வையும் அளிக்கக்கூடிய பல சிறுகதைகள் 'ஆகுதி'



தொகுதியில் இடம்பெற்றிருப்பதால், ஒவ்வொரு கதையைப் படித்து முடிந்ததும் நீண்ட நேரம் அந்நினைவுகளிலேயே மூழ்கியிருக்கிறோம். கலைச்செல்வி காலம் தொட்டு முரசொலி காலம் வரையிலான மூன்று தசாப்தங்களிலும் சோமகாந்தனின் இலக்கியப் பணிகள் தொடருகின்ற போதிலும் கூட, அறுபதுகளிலேயே ஆக்க இலக்கியத் துறையில் அதிக ஈடுபாடு கொண்டவராகக் கதாசிரியர் மிளிர்ந்தவராதலினால் இத் தொகுதியிலுள்ள பல கதைகள் அறுபதுகளின் அறுவடையாகவே இருக்கின்றன. ஆகுதி, விடியல் ஆகிய இரு கதைகள் மாத்திரமே எண்பதுகளின் ஆக்கமாக இடம் பெற்றிருப்பினும் கூட, அவைகூட அறுபதுகளையே அடியொற்றி நிற்பதை அவதானிக்க முடிகிறது.

பொதுவாகப் பல கதைகள் அறுபதுகளில் எரியும் பிரச்சினைகளை அணுகியிருந்தபோதிலும், அப் பிரச்சினைகள் பலவும் இக்கால கட்டத்திற்கும் வேண்டியனவாகவே உள்ளன. இலக்கியம் என்பது சமூக இயைபுடையனவாகவும், சமகாலப் பிரச்சினைகள் பற்றியனவாகவும் அமைதல் வேண்டும் என்ற இலக்கியக் கொள்கை நிலை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளப்படும் இக். கால சட்டத்தில், எண்பதுகளில் வெளிவந்திருக்கும் இத் தொகுப்பில் எரியும் இனப் பிரச்சினை – போராட்டம் தொடர்பான ஒரு சிறுகதை தானும் இல்லை என்பது சற்று ஏமாற்றமளிக்கிறது.

கதைகளுக்குள் நுழையும்போது, அதன் ஆரம்பமே வாசகனை ஈர்க்கும் வண்ணம் அமைந்திருப்பது சிறப்பம்சம். சொற்சிக்கனமும், கனதியான விடயங்களை எளிமையான வசனங்களில் பதிய வைக்கும் திறமையும், கதைக்களத்தோதடு ஒத்த உவமானங்களும், சில அழகான சொற்சிலம்பங்களும் கதைகளுக்கு அழகான, தனித்துவமான மொழிநடையைக் கொடுக்கிறது. மண்வாசனை மிளிரும் களத்தில், பாமர மொழி நடையில் பாத்திர வார்ப்புக்கள் யதார்த்தமாக உலாவி வருகின்றன. கதைகளின் இறுதி வரிகள் சில்லையூர் செல்வராசன் குறிப்பிடுவது போல, அநாயாசமாகக் கொழுவி இழுத்து மடக்கும் மின்னல் எறிப்பாக, அலாதியாக ஒவ்வொரு கதைகளிலும் விழுந்திருப்பது சிறப்பம்சமாகும். கதாசிரியர் நடையிலும், உத்தியிலும் தனக்கென்று ஒரு பாணியைக் கடைப்பிடித்துள்ளமையால், இது அவரது கதைதான் என்று வாசகனால், பெயரைப் பாராமலே சொல்லிவிட முடிகிறது. அழகிய நடை மனதில் சட்டென்று பதிவு கொள்கிறது.

இவரது கதைகள் வர்க்க முரண்பாடுகள், சாதிப் பிரச்சினை, அலுவலக சூழ்நிலைகள், குடும்பச் சிக்கல்கள், இனக் கலவரம் என்ற பல துறைகளையும் தொட்டு நிற்கின்றன. மனோ தத்துவ அணுகுமுறையில் சில கதைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பாலியல் விவகாரங்களை உளவியல் ரீதியில் அலசியுள்ளமை நல்ல அணுகுமுறையாகும்.

இவரது எழுத்து வன்மைக்குச் சான்று பகரும் கதையாக 'நிலவோ நெருப்போ?' என்ற சிறுகதையைக் குறிப்பிட்டுச் சொல்ல

லாம். கதையின் முதல் வரியிலேயே தனித்துவமான மொழிநடையும், மண்வாசனையும் ஒருங்கே வாசகனை ஈர்க்கிறது.

'புகையிலைக் கன்றுகள், கொய்யா இலைக் கூட்டை உடைத்துக் கொண்டு கூவத் தொடங்குகிற சேவல் அளவுக்கு வளர்ந்து, தலையை வெளியே எட்டிப் பார்க்கிற காலம்'

தொடர்ந்து கதையைப் படிக்கும்போது ஆசிரியரின் பிறந்த ஊரான கரணவாயின் புகையிலைச் செடிகளையும், குயிலங்குழை வியாபாரத்தையும், அப்பிரதேச பேச்சு வழக்குகளையும் தரிசிக்க முடிகிறது. உப்புக் கடலைத் தழுவிவரும் உப்புக் காற்றையும் புழுதியையும் கூட நேரில் நின்று அனுபவிப்பது போலிருக்கிறது.

சிலேடையாகச் சில விசயங்களைக் கதைக் களத்தோடு சொல்லும் வல்லமை கதாசிரியருக்கு உண்டு. பொன்னுவோ உன்ரை விலைப்பருவங்கள் எப்படி'? இன்னொரு இடம்; 'பொன்னிக்கு வெற்றிலைத் தாகம் குறுக்குக் கட்டு இடுக்கிலிருந்து கொட்டைப் பெட்டியை, விரலைச் செலுத்தி எடுத்து விரிக்கிறாள். கொழுந்து வெற்றிலை முருகேசம்பிள்ளையின் கண்களைக் குத்துகிறது.

இன்னொரு இடத்தில், 'வெற்றிலைக் 'காவி ஏறிய ஈச்சங் கொட்டைப் பற்கள் கெஞ்சுகின்றனவா'? என்கிற இடத்தில் கதா பாத்திரத்தின் உருவை எம்மால் கற்பனை செய்ய முடிகிறது'.

'நம்மைத் தாணுக்கும்... என்ரையையும் தீர்த்துவிட கறிக் கடைக்குப் போகோணும் ' போன்ற 'வசனங்களில்' பிரதேசப் பேச்சு மொழி வளத்தைத் தரிசிக்க முடிகிறது.

'சூம்பி வெளிறிய இப்படிப்பட்ட புகையிலைச் செடிகளைக்கூடப் பதப்படுத்தி உருசி பார்த்த அனுபவங்கள்' என்கிற இடத்தில் நோக்கும் களத்தோடு சொல்லப்படுகிறது.

கதா பாத்திரங்களின் மனோ நிலையை வாசகன் மனதில் நன்கு பதியும்படி பல இடங்களில் எழுத்தில் வடித்துள்ளார். 'சீறியெழுந்த பாம்பு சீற்றம் தணிந்து படத்தை மடக்கித் தன் முன் சுருழுவதைக்கண்ட அருணாசலம், அதை அடித்து ஊனப்படுத்தி, அதன் வாயிலுள்ள பற்களைப் பிடுங்கி எறிந்துவிடவேண்டும் என எண்ணினார்.' என்பது போன்ற பல இடங்கள் மனதில் சரியான தடத்தில் பதிகிறது.

மிகச் சிறப்பாக நடைபோட்ட அவரது 'நிலவோ நெருப்போ?' என்ற சிறுகதை 'நிலவையும் கிளித்துக்கொண்டு பொன்னி என்கிற நெருப்புச் சுடர் விர் என்று விரைந்து மறைகிறது' என்பதோடு முடிந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். அதற்குப் பின் வலிந்து இழுக்கப்பட்ட வர்க்கப் போராட்டம் கதையில் செயற்கைத் தன்மையை ஏற்படுத்தி விடுகிறது. இல்லாவிட்டால் இது ஒரு சிறந்த கதையாக அமைந்திருக்கும்.



'காசுக்காக அல்ல' என்ற இரண்டாவது சிறுகதையும் வர்க்கப் பிரச்சினையை அணுகியிருந்தபோதிலும் பல இடங்களில் இயல்பாக அமைந்திருக்கிறது. குறிப்பாக முடிவு மிகவும் நன்றாக அமைந்திருக்கிறது. வர்க்க முரண்பாடுகளை தனி மனித முயற்சிகளினால் தகர்க்க முடியாது என்பது உண்மைதான். எனினும் கூட, சில மனிதாபிமானமான அணுகு முறைகளினால் முதலாளி வர்க்கத்தினருக்கு உணர்த்திட முடியும் என்பதைக் கதாசிரியர் வலியுறுத்தியிருக்கிறார். 'காசுக்காக அல்ல' கஷ்டப்படுகிற உங்களுடைய மனதின் ஆறுதலுக்காகத்தான் நான் உதவிசெய்தன் ஒரு உயிரின் துன்பத்திற்காக இன்னொரு உயிர் துடித்து இரங்கி உதவுறது மனுஷக்கடமை. அதுக்காகக் கைநீட்டி வாங்கிறது மனுஷத்தனமோ?' என்கிற இடம் மனதில் பசுமரத்தாணி போல் பதிகிறது.

'கண்ணீர் திரையூடாக நோக்கிய அவர் பார்வையில் அங்கு அந்த மனித மீனவன் மட்டுமல்ல, அவனைப்போல் தங்கள் கைகளை மட்டுமே நம்பி வாழும் தொழிலாளிகள் கூட நிற்பதாகத் தெரிந்தது' என்கிற இறுதி வரிகளில் பிரசார வாடை துளிகூடத் தெரியவில்லை-

இன்னொரு வர்க்க, சாதி முரண்பாட்டுச் சிறுகதையான 'வாத்தியார் பேசவில்லை' சிறுகதையில் இனப் பிரச்சினையையும் அணுகியுள்ள போதிலும் கூட கதையில் ஏதோ ஒரு குறை தெரிகிறது.

வர்க்க, சாதி முரண்பாட்டுச் சிறுகதைகளில் அண்மையில் எழுதப்பட்ட விடியல், ஆகுதி முதலானவை முழுமையான நிறைவைத் தரும் சிறுகதைகளாகும். 'விடியல்' சிறுகதை சமகாலத்தோடு ஒன்றி வரவில்லையாயினும் கதையின் உருவும், உள்ளடக்கமும் ஆசிரியரின் அனுபவத்திற்கும், திறமைக்கும் சான்று பகர்கிறது எனினும் தலைப்புக் கதையான 'ஆகுதி' எல்லாவிதத்திலும் சிறந்து நிற்கிறது. ஐயர், தர்மகர்த்தாப் பாத்திரங்கள், கோயில் விவகாரங்கள், பிரதேச வழக்கு யாவுமே யதார்த்தமாக அமைந்துள்ளன. செ. கதிர்காமநாதனின் 'கிராமத்துப் பையன் பள்ளிக் கூடம் போகிறான்', டானியலின் 'போராளிகள் காத்திருக்கின்றனர்', அ. செ. முருகானந்தனின் 'மனித மாடு', தெணியானின் 'தொழும்பு', சுதாராஜின் 'தொங்கல்', வடகோவை வரதராஜனின் 'நிலவு குளிர்ச்சியாயில்லை', செங்கை ஆழியானின் 'உபபங்களி , ஜீவாவின் 'செய்தி வேட்டை', நந்தியின் 'கேள்விகள் உருவாகின்றன', கே. ஆர். டேவிட்டின் 'தனியொருவனுக்கு', காவலூர் ஜெகநாதனின் 'பாய்ச்சல்கள்', பி. எஸ் ராமையாவின் 'கூடைக் கொழுந்து', செ. யோகநாதனின் 'சோளகம்' ச. முருகானந்தனின் 'அலியன் யானை', வ. அ. இராசரத்தினத்தின் 'தோணி' போன்று சோமகாந்தனின் 'ஆகுதி' சிறுகதையும் மிகச் சிறந்த சிறுகதைகளில் ஒன்றாகக் குறிப்பிடக்கூடியதாக அமைந்துள்ளது.

இச் சிறுகதையில் நிகழ்ச்சிகளையும், நிலைமைகளையும் ஓர் எல்லைக்குள் வரையறுத்து, அவ் எல்லைக்குள்ளேயே வாழ்க்கையின் அகண்டத்தை ஆங்காங்கே சிதறிவிழும் வரிகள்மூலம் எழுப்பி விடுகிறார் சோமகாந்தன். நடப்பியல் என்பது வெறும் புற நிகழ்ச்சிகள் மட்டுமல்ல. அப் புற நிகழ்ச்சிகள் மனிதர்களோடு சம்பந்தப் படுவதால்,

அவர்களது மனப்போக்குகளையும் உரிய முறையில் சித்தரித்திருக்கிறார். மொழிநடை, மேலான தத்துவங்கள், சமுதாய நோக்கு, இன்ப நுகர்வு அனைத்துமே ஒருங்கே நிறைந்த சிறுகதை இதுவாகும். பிராமண சமூகத்தோடு கதை நகர்வதால் ல. ச. ரா., தி ஜானகிராமன் முதலானோரின் பாணி நினைவுக்கு வருகிறது. புதுமைப்பித்தனின் வீச்சும் இச்சிறு கதையில் தெரிகிறது. இத்தனைக்கும் மேலாக சோமகாந்தனின் தனித்துவம் புலப்படுகிறது.

'பேய் ஐயர்.. பிணுத்தாதையும். பிழைப்புக்காக வந்த பிராமணிக்கு தான் பெரிய முனிவர் என்ட நினைப்பு. ஏமாற்று, துரோகம், சாபம் இதெல்லாம் கேட்க உமக்கு உரிமையில்லை, இப்பவே திறப்பைத் தந்திட்டு நீர் ஓடும். புது ஐயரைக் கொண்டுவந்து வைக்க எனக்கு வழிதெரியும்' என்று தர்மகர்த்தா ஏசும்போது, ஐயரைப் போலவே நாமும் சிதைபாடுகளில் சிக்குண்டு மூச்சு விட முடியாமல் திணறித் தவிக்கிறோம். மேற்கொண்டு வாசகனின் சிந்தனைக்கு விட்டுவிடுகிறார் கதாசிரியர்.

கதை முடிவைப் பொறுத்த வரையில் இச்சிறு கதையில் வரும் ஐயரை விட 'விடியல், கதையில் வரும் ஐயர் நம்பிக்கை யூட்டுகிறார். கதிரவனின் இளங்கதிர்களில் பிரகாசிக்கும் அவரது திரளான பூணூலும், நெற்றியில் விபூதிப் பூச்சும், சந்தனத் திலகமும், கையில் ஓரிணை எருதுகளும், தோளில் கலப்பையுமாகக் கிளம்பிவிட்ட காட்சி மின்னலாய் மனதில் பல எண்ணங்களை ஏற்படுத்துகிறது. இரு கதைகளிலுமேயே உயர்சாதியினரான 'ஐயர்' சமூகம் கூட நிலவுடைமை வாதிகளிடம் நசுங்கும் அவல நிலையைத் தரிசிக்க முடிகிறது, சாதிச் சாவு மணியில், பொருளாதார் சமத்துவம் முக்கிய பங்காற்றும் என்பதும் புலப்படுகிறது.

அலுவலக சூழ்நிலையில் எழுதப்பட்ட 'அதுவேறு உலகம்', 'மனப்பாம்பு', தெளிவு முதலானவை அலுவலக, கொழும்பு சூழ்நிலைகளை அழகாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன 'மனப்பாம்பு' உளவியல் ரீதியில் அணுகப்பட்ட நல்ல ஒரு சிறு சிறுகதை. உளவியல் ரீதியில் எழுதப்பட்ட 'பவளக்கொடி', ஏமாற்றங்கள் மனித மனதை எவ்வளவு தூரம் பாதிக்கின்றன என்பதை மனதைத் தொடும் வண்ணம் சித்தரிக்கிறது. தெளிவு, குளத்தங்கரை அரசமரம் ஆகியன எழுதப்பட்ட முறையில் மனதைக் கவர்கின்றன. 1957-ம் ஆண்டு இனக் கலவர பின்னணியில் எழுதப்பட்ட 'நாக விகாரை' சிறுகதை ஆட்சியாளரின் பாரபட்சமான அணுகுமுறையையும், பெரும்பான்மையினரின் புரிந்துணர்வற்ற நிலையையும் படம் பிடித்துக் காட்டுகிறது. 'அது வேறு உலகம்' சிறுகதையில் உள்ள நிபாயத்தை ஏற்றுக்கொள்ள முடிகின்ற போதிலும் கூட, இதுவே ஒரு பெண்ணுக்காக இருந்தால் என்ற நியாயமான கேள்வி எழாமலில்லை. கற்பு என்யது ஒரு தலைப் பட்சமானதல்லவே! கோகிலா மகேந்திரன், யோகா பாலச்சந்திரன் போன்றவர்களின் பெண்விடுதலை தொடர்பான முற்போக்குச் சிறு கதைகளின் முன்னே இச்சிறுகதை அடிபட்டுப் போகிறது.

சிறந்த சமூகப் பார்வையும், எழுத்தாற்றலும் கொண்ட சோமகாந்தன் விரைவிலேயே, சமகால இனப்பிரச்சினை தொடர்பான ஒரு காத்திரமான நாவலை எழுதுவாராயின் அவரது பெயர் மேலும் ஸ்திரமடையும். ●



# தொப்பி சப்பாத்துச் சிசு

— சோலைக்கிளி

தொப்பி
காற்சட்டை சப்பாத்து
இடுப்பில் ஒரு கத்தி
மீசை
அனைத்தோடும் பிள்ளைகள் கருப்பைக்குள் இருந்து
குதிக்கின்ற ஒருகாலம் வரும்.

அந்த
தொப்பி சப்பாத்துச் சிசுக்களின் காலத்தில்
பயிர்பச்சை கூட இப்படியாய் இருக்காது
எல்லாம் தருணத்தில் ஒத்தோடும்.

சோளம் மீசையுடன் நிற்காது
மனிதனை சுட்டுப் புழுப்போல குவிக்கின்ற
துவக்கை ஓலைக்குள் மறைத்துவைத்து ஈனும்.

வெள்ளை சிவப்பு இளநீலம் மஞ்சல்
என்று கண்ணுக்குக் குளிர்த்தியினைத் தருகின்ற
பூமரங்கள் கூட
சமயத்திற் கொத்தாற்போல் துப்பாக்கிச் சன்னத்தை
அரும்பி அரும்பி
வாசலெல்லாம் சும்மா தேவையின்றிச் சொரியும்.

குண்டு குலைகுலையாய் தென்னைகளில் தூங்கும்
இளநீர் எதற்கு?
மனிதக் குருதியிலே தாகத்தைத் தணிக்கின்ற
தலைமுறைக்குள் சீவிக்கும்

கொய்யா முள்ளாத்தை எலுமிச்சை அத்தனையும்
நீருறுஞ்சி இப்போது காய்க்கின்ற பச்சைக்காய்
இரத்தம் உறுஞ்சும் அந்நேரம் காய்க்காது.

வற்றாளைக் கொடி நட்டால்
அதில் விளையும் நிலக்கண்ணி
வெண்டி வரைப்பீக்கை நிலக்கடலை தக்காளி
எல்லா உருப்படியும் சதை கொட்டை இல்லாமல்

முகர்ந்தால் இறக்கும் நச்சுப் பொருளாக
எடுத்தால் அதிரும் தெருக்குண்டு வடிவாக
உண்டாக்கிப் பிணமுண்ணும் பேய்யுகத்தை வழிநடத்த...
உள்ளியும் உலுவாலும் சமைத்துண்டு ருசிபார்க்கும்
மனிதர் எவரிருப்பார்?
கடுகு பொரித்த வாசம்தான் இளம்புதற்கும்
ஆட்கள் அன்றிருக்கார்!
இவர்கள்; பொக்கணிக் கொடியோடு பிறந்த ஒருவனைப்
புராதன மனிதர்களாய்ப் போவர். ●

# மனக் கோலங்கள்

வி. பி.

'அம்மா, பிச்சைபோடுங்க' முதன் முதலாக அந்த வீட்டு வாசலில் நிற்கிறுன் ஒரு மனிதன்.

'ஐயோ! உன்ர தொல்லை தாங்க ஏலாது. செல்லுக் கில்லு உன்னப் போல ஆக்களில் விழுந்து தொலைக்காதா? சும்மா இங்க தான் அம்மா, அம்மா எண்டு நெடுக வாறது' எரிந்து விழுந்தாள் அந்த வீட்டு எசமானி.

அதே வீட்டுக்கு அடிக்கடி பணக்கார வாலிபன் நுழைகின்ருன். அப்பொழுது அந்த அம்மா பட்ட பாட்டைப் பார்க்க வேண்டும். வாய் முழுக்கும் பல்.

'ஆ, வாங்க தம்பி. நீங்க இங்க ஒரு நாளுக்கு வராட்டா இந்த வீடு காடு போலத்தான்' என்று துள்ளிக் குதித்தாள்.

மனம் விசித்திரமானது. பற்பல சந்தர்ப்பங்களில் ஆட்களுக்கேற்ப, இடத்திற்கேற்ப மாறுபடும் தன்மையுடையது. சமூக அந்தஸ்திற்காக, போலிக் கௌரவத்திற்காக, அடிமைத்துவத்தில் ஆதிக்கம் செலுத்துவதற்காக உயிர் பிழைத்துக் கொண்டிருக்கும் ஒரு சில 'பெரியவர்களின்' மனக்கோலங்கள் கேவலமானவை. இவர்களில் சிலர் இலட்சம் ரூபா சீதனம் பேசு[ம்] கல்யாணத்தரகர்களாக, வயது வந்த பின்னரும் பிள்ளைகள் தமது வாழ்க்கையைப் பற்றிய முடிவு எடுப்பதற்கு உரிமையற்றவர்கள் என்பதனை நிலைநாட்டுகின்ற மனிதாபிமானமற்றவர்களாக, குலப் பெருமை பேசி குதர்க்கம் செய்யும் துவேஷப் பித்தர்களாக, பணத்திற்காக எதனையும் செய்யப் பின்வாங்காத பணப் பக்தர்களாகச் செயற்பட்டு வருகின்றார்கள். இவ்வாறு பணத்திற்கு, பொருளுக்கு, குலப்பொருளுக்கு, சமூக அந்தஸ்திற்கு, அடிமைப்பட்டு வாழும் இவர்கள் மனிதர்களை அடிமைப்படுத்துவதில், மனிதர்களை மனிதர்களாக வாழவிடாது தடைசெய்வதில் மகா வீரர்களாக விளங்குவதே அபாயகரமானதாகும்.

இத்தகைய போலிகளை இனம் காணுவதோடு இவற்றை இல்லாமல் செய்வதே இன்றைய சமுதாயச் சீராக்கலின் இன்றியமையாத தேவையாகும். முகமூடிகள் கிழித்தெறியப்பட வேண்டும். அன்பு, கருணை, கரிசனை, இலட்சியநாகம், இதயத்தில் ஈரம் இல்லாது பாலைவனங்களாகிவிட்ட மனித மனங்கள் விளைநிலங்களாக மாற்றம் செய்யப்பட வேண்டும்.

எனக்கு நானே அடிமை என்ற நிலை ஒழிய வேண்டும். மற்றவர்களால் எமக்கு இடப்பட்ட அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அடைவதற்கு முன்னர் எம்மாலே எமக்கு இடப்பட்ட அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடைய வேண்டும்; எம்மாலே எமக்கிடப்பட்ட விலங்குகளை உடைத்தெறிய வேண்டும். அறியாமை இருளிலிருந்து யதார்த்தமாக வாழ்க்கையை எதிர்நோக்கும், மாண்புமிகு மனித மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அறிவார்ந்த சூழல் இயல்பாக்கம் தோற்றுவிக்கப்பட வேண்டும். சட்டங்களையும் சம்பிரதாயங்களையும் மையமாகக் கொண்ட வாழ்க்கை, சமூக அமைப்பு மாற்றப்பட்டு மனித மாண்பினை, மனித மகத்துவத்தினை, மனித காருண்யத்தை உச்சப்படுத்துகின்ற வாழ்க்கை நிலை உருவாக்கப்பட வேண்டும். ●



# ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் பத்திரிகைகளின் பங்கு

— ச. முருகானந்தன்

தற்காலத்தில் அனேகமான நாடுகளில் இலக்கியவாதிகள் பெருமளவுக்குப் பத்திரிகைகளுக்கு ஏற்றவாறு எழுத வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இருந்து வருகிறது. இதனால் இலக்கியாசிரியனால் சுதந்திரமாகச் செயற்பட முடிவதில்லை. ஒரு இலக்கிய கர்த்தாவை உருவாக்குவதும், அழிப்பதும் பத்திரிகைகளால் முடியும் என்றிருக்கும் போது இந்த அவல நிலை தொடரவே செய்யும்.

தமிழைப் பொறுத்தவரையில் இந்த அவலநிலை தமிழகத்தில் இருக்குமளவுக்கு இலங்கையில் இல்லை என்பது அதிஸ்டவசமான நிலைப்பாடு என்றே சொல்ல வேண்டும். தினசரிகளாயினும் சரி, சஞ்சிகைகளாயினும் சரி இலங்கையில் ஓரளவுக்காவது எழுத்தாளர்களை மதிக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

நவீன கலை இலக்கிய வடிவங்களும், பத்திரிகைத் தொழிலும் ஓரளவு ஒத்த வயதை உடையன என்பதால், நவீன கலை இலக்கியப் படைப்புக்களின் வளர்ச்சியில் பத்திரிகைகளின் பங்கு மிதமாகவுள்ளது தவிர்க்க முடியாதது. ஓர் இலக்கியப் படைப்பை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதில் பத்திரிகை தான் முதலிடம் வகிக்கிறது. பிரசார வாய்ப்புக்கள் மிகவும் குறைவாக உள்ள எமது நாட்டில், ஒரு எழுத்தாளன் தனது ஆக்கத்தை வாசகர்கள் மத்தியில் கொண்டு செல்வதற்குரிய தொடர்பு சாதனமாகப் பத்திரிகைகள் செயற்படுவதால், அவையே இலக்கியத்தின் வளர்ச்சிப்பாதையை அல்லது வீழ்ச்சிப் பாதையை நிர்ணயிப்பனவாக உள்ளன.

சிறுகதை, நாவல், கவிதை முதலானவற்றை மக்கள் மத்தியில் பிரபலமடையச் செய்யும் வல்லமை பத்திரிகைகளுக்கு இருந்தமையால், நவீன கலை இலக்கிய வளர்ச்சியானது பத்திரிகைத் துறை வளர்ச்சியோடு ஒப்பு நோக்கக் கூடியதாகும்.

இலங்கையில் ஈழகேசரி காலத்தில்தான் நவீன இலக்கிய வடிவங்கள் பிரபலமடைய ஆரம்பித்தன எனலாம். பத்திரிகை ஏற்படுத்திய பிரசுரக் களமானது பலரையும் எழுதவும், வாசிக்கவும் தூண்டியது. கவிதைகளும், சிறுகதைகளும் வாராவாரம் பிரசுரமானதோடு நாவல்கள் தொடர் நவீனங்களாகப் பிரசுரிக்கப்பட்டு வந்தன. சுதந்திரன் பத்திரிகையின் ஆரம்பக் காலம் இலக்கிய வளர்ச்சிக்கு உரமூட்டி. பத்திரிகைகளின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு ஏற்றவாறு இலக்கிய ஆக்கங்களும், வாசகர் வட்டமும் பல்கிப் பெருகின. வீரகேசரி, தினகரன், தினபதி—சிந்தாமணி, ஈழநாடு, ஈழமணி, மித்திரன், ராதா, ஈழமுரசு—மாலைமுரசு, உதயன் — சஞ்சீவி,

முரசொலி என்று ஈழத்தில் தினசரிகள் தொடர்ந்து மலர்ந்தன. இவை வியாபார நோக்குக் கொண்டவையாயினும்கூட இலக்கியவாதிகளையும், இலக்கியப் படைப்புக்களையும் ஊக்குவித்ததோடு தாமும் அதனால் வளர்ச்சி கண்டன. எனினும் வணிக நோக்கினால் இவற்றில் சில இலக்கிய நசிவுக்கும் காரணிகளாகின என்பதையும் மறுத்துரைப்பதற்கில்லை.

நவீன யுகத்தில் பத்திரிகை முக்கிய பங்கு வகிப்பதால் இலக்கியாசிரியனும் பத்திரிகைகளைத் தவிர்த்துவிட முடியாது. ஏனெனில் அவை இலக்கிய வளர்ச்சியில், இலக்கியாசிரியனின் வளர்ச்சியில் பங்காற்றக் கூடியவையாகும்.

ஈழத்து இலக்கிய சிருஷ்டிகர்த்தாக்களின் ஆக்கங்களைப் பிரசுரம் செய்வதுடன், இலக்சியக் கருத்துக்களும், எழுத்தாளர்களின் கனதியான அபிப்பிராயங்களும் மக்கள் மத்தியில் சென்றடைவதற்கு நமது நாட்டுத் தினசரிகள் ஆற்றிவரும் பங்களிப்பு மகத்தானது. இலக்கியச் செய்திகளை முன்பக்கத்தில் பிரசுரித்துக் கௌரவிக்கும் பெருந்தன்மை எமது பத்திரிகைகளுக்கு உண்டு. இலக்கியக் கூட்டங்களின் உரைகளையும், இலக்கியப் படைப்புக்களின் வெளியீட்டு விழாச் செய்திகளையும், படைப்புகளின் மதிப்புரைகளையும், விமர்சனங்களையும் வெளியிட்டு, இலக்கியப் படைப்புக்களைப் பரவலாகப் பலர் அறிந்து படிக்க வழிசெய்து த கின்றன. அரசியல், அதிகாரம், சினிமா என்ற தமிழகப் பத்திரிகைகளின் முக்கோண அமைப்பை மீறி எழுத்தாளர்களின் செய்திகளை முன்பக்கத்தில் வெளியிடுகின்றன. எழுத்தாளன் பரிசு பெறும்போது பாராட்டவும், மரணமுறும் போது அனுதாபத்தைத் தெரிவிக்கவும் கூட எமது பத்திரிகைகள் பின்நிற்பதில்லை. சினிமாக்காரர்களின் படங்களைப் பிரசுரிக்காத யாழ்ப்பாணத்துத் தினசரிகள் எழுத்தாளர்களின் படங்களைப் பிரசுரிக்கிறது. அண்மையில் ஒரு பத்திரிகை, ஒரு சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாப் பற்றி ஒரு சிறப்பு அனுபந்தமே வெளியிட்டுக் கௌரவித்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்க! மேலும் புதிய எழுத்தார்வம் மிக்கவர்களைத் தட்டிக் கொடுக்கும் வண்ணம் அவர்களைப் பற்றிய செய்திகளை வெளியிட்டு உற்சாகமளிக்கின்றன. சஞ்சிகைகள் எழுத்தாளர்களின் படங்களை அட்டையில் அலங்கரிக்க வைத்துச் சிறப்புக் கட்டுரைகளும் வெளியிடுகின்றன. மேலும் ஆய்வுரைகள், விவாதங் முதலானவற்றைப் பிரசுரித்து இலக்கியத்தை வளப்படுத்த உதவுகின்றன. மல்லிகை, பூரணி, மலர், கலைச்செல்வி, தீர்த்தக் கரையினிலே, தாரகை, அலை, புதிசு, கீற்று முதலான பல சிறு சஞ்சிகைகளை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

டானியலும், ஜீவாவும் உபயோகமில்லை; சுதாராஜும், சாந்தனும் தேவையில்லை; நேசனும், மொழிவாணனும் போதும் என்ற நிலை இங்கு இன்னமும் உருவாகாமை நாம் செய்த அதிஸ்டம்தான். எனினும் இலக்கியம் நசிவடைய பத்திரிகைகள் இடமளிக்கும் நிலை உருவாகி வருவதும் மனம் சொள்ளத் தக்கதாகும். தமிழகத்தின் ராஜேந்திர குமார்களும், புஸ்பா தங்கத்துரைகளும், ரங்கராஜர்களும், இந்துமதிகளும் பத்திரிகைகளின் ஆதரவில் வண்ணதாசனையும், பூமணியையும், நாஞ்சில் நாடானையும், அம்பையையும் அட்ரஸ் தெரியாத நிலையில் வைத்திருக்கும் புற்றீசல் புறப்பாடு நிலை, ஈழப் பத்திரிகைத் துறையில் உருவாகாதிருப்பது மகிழ்வைத் தருகிறது.



புதிய எழுத்தாளர்களை உருவாக்குவதில் தினசரிகள் பங்காற்றும் அதே வேளையில், சஞ்சிகைகள் அவர்களை வழிப்படுத்தி வளப்படுத்த உறுதுணை புரிகின்றன.

பல சிறப்பம்சங்களைக் கொண்ட பத்திரிகைகளின் பங்களிப்பில் உள்ள சில குறைபாடுகளைக் குறிப்பிடுவதும் அவசியமாகிறது.

ஒரு எழுத்தாளனின் படைப்பு வெளிவரும் போது ஒரு பிரதி அவனுக்கு அனுப்புவது உலகெங்கும் உள்ள மரபாகும். ஆனால் இதை எமது பத்திரிகைகள் செய்வதில்லை. இதனால் பலர் தமது ஆக்கங்களைத் தரிசிக்கத் தவறி விடுகின்றனர். குறிப்பாகப் பத்திரிகைகள் வராத கிராமங்களில் வாழும் என் போன்ற எழுத்தாளர்கள் இதனால் பாதிக்கப் படுகின்றனர். எனவே பத்திரிகைகள் இதைக் கவனத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டும்.

ஒரு எழுத்தாளனின் ஆக்கம் பிரசுரத்திற்குத் தேர்ந்தெடுக்கப் படாத பட்சத்தில் அது திருப்பி அனுப்பப்பட வேண்டும். எமது நாட்டில் முத்திரை இணைத்து அனுப்பினால் கூட திருப்பி அனுப்பப்படுவதில்லை. பிரதிகள் கூட இதற்கு விதிவிலக்கல்ல என்கிற போது எழுத்தாளனுக்கு விரக்தியே மிஞ்சுகிறது.

மூன்றாவது முக்கிய குறைபாடு. சில பத்திரிகைகள் ஒரு குறிப்பிட்ட வட்டத்தினருக்கு மாத்திரமே களம் அமைத்துக் கொடுக்கின்றன. தமது பத்திரிகைகளில் எழுதுபவர்கள் வேறு பத்திரிகைகளில் எழுதுவதையும் சில பத்திரிகைகள் விரும்புவதில்லை. இந்நிலை விசனிக்கத்தக்க ஒன்றாகும். இன்னும் சில பத்திரிகைகள் புதிய எழுத்தாளர்கள் பக்கம் தலைவைத்துப் படுப்பதேயில்லை.

இலங்கைப் பத்திரிகைகள் பலவும் எழுத்தாளர்களுக்குப் போதியளவு சன்மானம் வழங்குவதில்லை என்ற குறைபாடு நெடுங்காலமாகவே இருந்து வருகிறது. சில பத்திரிகைகள் சன்மானம் வழங்குவதேயில்லை. இன்னும் சிலவற்றால் முடிவதில்லை. ஆனால் இவை எதுவுமே இலங்கையில் இலக்கிய வளர்ச்சியைப் பாதிக்கவில்லை. ஏனெனில் இங்கு யாருமே பணத்திற்காக எழுதுவதில்லை; முழுநேர எழுத்தாளர்கள் எவருமில்லை. இதனால்தானோ என்னவோ இவர்கள் நச்சிலக்கியப் படைப்புகளை ஆக்குவதில் ஆர்வம் காட்டுவதில்லை.

க. நா. சு. குறிப்பிடுவது போல, இலக்கியாசிரியனும் பத்திரிகையும் ஒன்றிற்கொன்று முரண்பட்ட நோக்கம் கொண்டவை எனினும் ஒன்றை ஒன்று தவிர்த்துவிட் முடியாது.

ஆரோக்கியமானதும், ஆக்கபூர்வமானதுமான கருத்துக்களை மக்கள் மத்தியில் எழுத்தாளன் கொண்டு செல்வதற்குப் பத்திரிகை ஒரு சிறந்த தொடர்பு சாதனமாதலினால், ஜீவா குறிப்பிடுவது போல, எழுத்தாளர்கள் இலக்கிய வளர்ச்சியின் ஊக்கியாகப் பத்திரிகைகளைப் பயன்படுத்தும் அதே வேளையில், பத்திரிகைகளும் சரியான திசையில் செயற்பட்டு காலத்தின் சின்னமாய் பிரதிபலிக்க வேண்டும்.

சு. முரளிதரனின்

# 'தியாக யந்திரங்கள்' ஒரு நோக்கு!

— மேமன்கவி

இன்றைய இளைய படைப்பாளி என்று வரும் பலரும் விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் இருப்பதில்லை. செம்மையான விமர்சனக் கருத்துக்கள்தான் செழுமையான ஒரு படைப்பாளியை வழிநடத்த உதவ முடியும் என்பது உண்மையாகும். ஆகவே, எந்தவொரு தரமான விமர்சனத்தையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உள்ள இன்றைய இளைய படைப்பாளியே எதிர்காலத்தில் தேர்ச்சி மிக்க ஒரு படைப்பாளியாக வர முடியும். அந்த அடிப்படையில் காணுமிடத்து விமர்சனத்தை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குமுடைய ஓர் இளைஞராக எனக்குத் தெரிய வருகிறார் சு. முரளிதரன். அண்மையில் அவருடன் நான் நடத்திய நேர உரையாடல்கள் மூலமும், கொழும்பில் 'வகவம்' ஏற்பாடு செய்த அவரது இத்தொகுதிக்கான அறிமுக விழாவில் அவர் ஆற்றிய பதிலுரையும் நான் மேற்சொன்ன கூற்றை நிரூபிக்கும் வகையில் அமைந்தன. அதன் பின்விளைவாக இக்கட்டுரைக் குறிப்பின் மூலம் அவரது 'தியாக யந்திரங்கள்' புதுக்கவிதைத் தொகுதிக்கான எனது பார்வையிலான, ரசனையிலான கருத்துக்களை முன்வைக்கலாம் என்று எண்ணினேன்.

வெறும் அளவு கோல்களை அடுக்கி வைத்து ஒரு படைப்பாளி தனித்துவத்தை சிதைத்துவிடாது (விமர்சனம் என்பது என் வேலையும் அல்ல) என் அனுபவக் கோட்டில் சு. முரளிதரன் படைப்புகள் எழுப்பிவிடும் சிந்தனைகளை முன்வைப்பதே என் நோக்கமாகின்றது. சமகாலப் படைப்பாளி சமூகம் மீது கொண்ட கோபத்தின் விளைவாக அவனிலிருந்து கிளர்ந்தெழும் சிருஷ்டி கலைத்துவம் கலந்த ஓர் அதிர்வை எம்மில் ஏற்படுத்துகிறது. ஏற்படுத்த வேண்டும். அதுவே சிறந்த கலைப் படைப்பாகிறது. இந்த அதிர்வே சமகால கலைப்படைப்புகளின் அதிமுக்கிய தன்மை எனலாம்.

அந்த வகையில் சு. முரளிதரனின் 'தியாக யந்திரங்கள்' தொகுதியிலும் சில படைப்புக்களிலும் சமூகப் பிரக்ஞை கலந்த கலைத்துவ அதிர்வை நான் காண்கிறேன். ஒரு படைப்பாளி தனது சூழலில் மலிந்து கிடக்கும் அவலத்தையோ, இன்பத்தையோ அவன் உள்வாங்கும் வேளையில்தான். அவனிலிருந்து புறவெளிக்குத் தெறிக்கும் கலைப்படைப்பில் அக்கலைஞனின் ஆன்மாவை நாம் தரிசிக்க முடியும். முரளிதரனின் படைப்புகளில் அவரது ஆன்மா தெரிகிறது.

மலையக வாழ்வுச் சூழலோடு பல்வேறு பிரச்சினைகளைத் தனது கவிப்பிடிக்குள் அடக்கியுள்ளார் முரளிதரன். மொத்த 22 முழுக் கவிதைகளிலும் முரளிதரனின் திறன் வெளிப்படாவிடினும் ஒவ்வொரு கவிதைகளிலும் சிற்சில வரிகள் மூலம் அவரது திறன் வெளிப்படுகிறது. மேற்சொன்ன



சமூக பெறுமானம் கலந்த கலைத்துவ அதிர்வை அந்த வரிகள் மூலம் எமக்கு ஊட்டுகின்றார். உதாரணமாக 'போபாலின் புதை குழிகள்' என்ற தலைப்பிலான கவிதை போபாலின் நச்சுவாயு ஏற்படுத்திய அழிவைப் பற்றியது. அக்கவிதையின் இடையில் அவர் கூறுகிறார்,

'உன் செயலால்
கண்களே
கரைந்து வடிகின்றன'

என்று நகரும் கவிதையின் முடிவில்,

'போபாலின் கண்களை நீ
குருடாக்கினாலும்
இப்போ
உலகின் கண்கள்
திறந்துவிட்டன'

என்று முடிக்கிறார். இவ்வரிகள் மூலம் இன்று நச்சுவாயு தொழிற்சாலைகள் மக்கள் நெருங்கி வாழும் பகுதிகளில் அமைக்கக் கூடாது என்று இன்று பரவலாகத் தோன்றியிருக்கும் எதிர்ப்பு அலையை ஒலிபரப்புகின்றார். 'பாரதி' என்ற கவிதையில்,

'சொற்களை
அரிவாளாக்கிக்
செந்தணலையும் சேர்த்து
வைத்து 'பாஞ்சாலி சபதம்'
எனப் படைப்பான்
எனத் தெரிந்திருந்தால்
துச்சாதனன்
துகிலுரியாமலே
விட்டிருப்பான்'

என்று பாரதியின் கவிதைகளின் ஆகர்ஷணத்தை எடுத்துக் காட்டுகிறார். இவ்வாறாக வலது குறைந்தவர்களுக்காய் எழுதிய 'ஒராண்டின் அஸ்தமனம்' என்ற கவிதையை முடிக்காமலே விட்டதன்மூலம் ஊனர்களுக்காய் எழுதிய கவிதையும் ஊனமாகிவிட்டதே என்ற ஏக்கத்தை நமக்குத் தந்துள்ளார்.

முரளிதரனின் சிற்சில கவிதைகள் 70 களின் ஆரம்பத்தில் இலங்கை — இந்திய கவிதைகளில் (குறிப்பாக புதுக்கவிதைகளில்) வெளிப்பட்ட கோஷத்தன்மையுடையவையாக அமைந்துள்ளன. அதற்குக் காரணம் இவரும் 70 களிலே எழுத ஆரம்பித்துவிட்டார் என்பதேயாகும்.

முரளிதரனின் இத்தொகுதியிலுள்ள கவிதைகள் பல்வேறு உணர்வு நிலைக்கு என்னை இட்டுச் சென்றாலும், 'சாபம்' போன்ற கவிதைகள் படித்தவுடன் ஆச்சரியப்பட வைத்தாலும் என்னை மிகவும் ஈர்த்த கவிதை என்றால், அது 'தேசீயம்' என்ற தலைப்பிலான ஒரு கவிதை. ஒரு வெற்றிலையினூடாகத் தேசீயத்தைக் கண்டுபிடித்த முரளிதரன் ஒரு கவி விஞ்ஞானிதான். அக்கவிதை,

'கம்பஹாப் பகுதி
வெற்றிலை—
கண்டிப் புறத்து
பாக்கு—
யாழ்ப்பாணத்து
புகையிலை—
காலிக் கடற்கரைச்
சுண்ணாம்பு
உன்
வாயில் சங்கமிக்க
சிவப்புத் தேசியம்
வெளியேறுகிறது'

இக்கவிதையைப் படித்தபின் வெற்றிலை போட்டுக் கொண்டு முன்னே வரும் மனிதர்களை (வாய்களை) மரியாதையுடன் நோக்கத் தோன்றுகிறது. அடுத்து 'கற்றதனாலே' என்ற கவிதையின் இடையில் வரும் மூன்று வரிகளான,

'மூன்றாம் யுத்தத்தின்
மரண வாரிசுகளான
நாம்'

என்ற வரிகள் மூலம் எதிர்கால

போர் ஆபத்தை உணரும் தன்மையை எம்மில் விதைக்கிறார். இதே தன்மையில் சமாதானத்தை நோக்கி எழுதிய 'சாம்பல் மேட்டு சமாதானங்கள்' என்ற கவிதையிலும் கூட இன்று சமாதானம் அழிந்து கொண்டு போகின்ற போக்கினை கனமான படிமங்கள் மூலம் உணர்த்துகிறார்.

அடுத்து, இத்தொகுதிக்குத் தலைப்பாக அமைந்திருக்கும் கவிதை 'தியாக யந்திரங்கள், இத்தலைப்பே ஒரு கவிதையாக மிளிர்கிறது. மலையக மக்களின் வாழ்வில் இழையோடும் தியாகத்தன்மையையும், உழைத்து உழைத்து தேய்ந்து மனித யந்திரங்களாய் இயங்கிக் கொண்டிருக்கும் தன்மையையும் இணைத்து. அதுவே ஓர் அழகிய படிமமாகி இத்தொகுதிக்குத் தலைப்பாகியுள்ளது நான் அறிந்த வரையிலும் மலையக மக்களைக்கொண்டே இத்தகைய ஒரு படிமத்தை யாரும் முன்வைத்ததாகத் தெரியவில்லை.

இக்கவிதை இறந்து போன ஒரு மலையகத் தொழிலாளியை நோக்கிக் கூறும் தொனியில் அமைந்துள்ளது. இக்கவிதையில் ஆரம்ப வரிகளாகவும், பின் இடைக்கிடையும் பிறட்டு வேலைக்களத்திற்கு அழைத்து அடிக்கப்படும் 'தப்பு' என்ற கருவியின் சப்த வடிவத்தைப் பயன்படுத்தியுள்ளார். மலையக வாழ்வுச் சூழலைக் கற்று உணராதவர்களுக்கு இந்த வடிவம் புரியாத ஒன்றாகவே இருக்கும். ஆனால், அச்சப்த வடிவமோ மலையக உழைப்பாளியின் அன்றாட வாழ்வு ஒலியாகத் திகழ்கிறது. அதனால் தான் அவ்வொலியோடு வரும் அக்கவிதையில் தொழிலாளியே நீ இறந்துவிட்டாய் இனி உழைத்து உழைத்துக் கஷ்டப்படத் தேவையில்லை என்ற உணர்வில்,

'நாளை நீ
பிறட்டுக்குப்
போகத் தேவையில்லை
இனியாவது
நிம்மதியாய் தூங்கு'

என்ற வரிகளோடு கவிதையை முடிக்கிறார். ஆனால், பிறட்டு வேலைக் கள அழைப்பு ச்ப்தத்தை விளக்கும் வகையில் மேலும் சில வரிகளைக் கவிதையோடு முரளிதரன் இணைத்திருந்தால் இன்னும் இக்கவிதை சிறப்பாக அமைந்திருக்கும்.

மேலும், இத்தொகுதியிலுள்ள சில கவிதைகள் சமூகத்தின் மீதான விமர்சனத்தை மிகவும் நிதானத்துடன் முன்வைக்க, சில கவிதைகளில் அவ்விமர்சனம் கடும் கோபத்துடன் வெளிப்பட, அதே சமயம் சில கவிதைகளில் ஒரு இளைஞனின் அவசரமும் தெரிகிறது. உதாரணமாக, 'ஜுவாலையிடம் சொல்கின்றேன்' என்ற கவிதையின் சில வரிகள், 'காம வடிகால்கள்' ஆகியவைகளைச் சொல்லலாம், மொத்தத்தில் ஓர் இளைஞனின் அவசரம், நவீனமயப்படுத்தப்படாத வெளிப்பாட்டுத் தன்மை போன்ற சில குறைகள், 'தியாக யந்திரங்கள்' என்ற தலைப்பிலேயே கவிதையை வெளிப்படுத்திய தன்மை, மலையக சமுதாயத்தின் ஓர் இளைஞனுக்கு இருக்கும் அக்கறையின் காரணமாக 'ஆத்ம சுத்தமாக' சிருஷ்டிக்கப்பட்ட கவிதைகளில் தெறிக்கும் உண்மை ஆகியவைகளின் முன்னே சக்தியிழந்து நிற்க, இன்றைய முரளிதரனே நாளை — இந்தப் பிழையான சமூக அமைப்பின் மீது மலையக மண்ணினூடாக, கோபமான கருத்துக்களை முன் வைக்கப் போகும் ஒரு சிறந்த கவிஞனின் முதல் படியாக எனக்குத் தெரிகிறார்.



# அணு ஆயுதமற்ற உலகம் அடையக்கூடிய லட்சியமே!

அன்வர் முஹம்மத்

1987-ல் உலகம் பிரவேசித்துள்ள வேளையில், அணு ஆயுதப் போர் அச்சுறுத்தலை அகற்ற வேண்டும் என்ற உணர்வு அதிகரித்து வருகிறது. இந்தப் பயங்கரமான அச்சுறுத்தலில் இருந்து மனித குலத்தைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட, வீறுமிக்க சோவியத் அயல்துறைக் கொள்கையை, சமாதானத்தை நேசிக்கும் அனைத்துச் சக்திகளும் ஆதரிக்கின்றன.

அணு ஆயுதப் போர் அபாயத்தை அகற்ற வேண்டுமானால், அதற்கு இந்த 20 ஆம் நூற்றாண்டுக்குள் உலகிலிருந்து அணு ஆயுதங்களை ஒழிப்பது குறித்து சோவியத் யூனியன் அறிவித்துள்ள திட்டம் மிகவும் முக்கியமானது. 1986 ஜனவரி 15 ஆம் தேதி மிகாயில் கோர்பசேவ் வெளியிட்ட அறிக்கையில், அனைத்து அணு ஆயுதங்களையும் படிப்படியாக ஒழித்தல், விண்வெளி ராணுவமயமாக்கப்படுவதைத் தடை செய்தல், ரசாயன ஆயுதங்களை ஒழித்தல், மரபான ஆயுதங்களையும் ஆயுதப் படைகளையும் குறைத்தல் ஆகிய திட்டவட்டமான நடவடிக்கைகள் பிரேரணை செய்யப்பட்டன.

சமாதானத்தின் நலன் கருதி சோவியத் யூனியன் எடுத்துவரும் இத்தகைய துணிச்சலான அயல்துறைக் கொள்கை முன்முயற்சிகள் குறிப்பாக ஒருதரப்பான அணு ஆயுதச் சோதனை நிறுத்தம் போன்ற முயற்சிகள் உலகம் தழுவிய ஆதரவைப் பெற்று வருகிறது. செல்லரித்துப் போன கோட்பாடுகளும், அணு யுகத்துக்கு முந்திய காழ்ப்புணர்ச்சிகளும், எதார்த்தமான, புரட்சிகரமான புதிய சிந்தனைப் போக்குக்கு முன்னால் மடிந்து வருகின்றன. ஆயுதப் போட்டியைத் தூண்டி விடுகிற அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகளின் நடவடிக்கைகளைக் கண்டு உலக மக்கள் வெஞ்சினம் கொண்டுள்ளனர். அணு ஆயுதங்களை ஒழிப்பதற்கான சோவியத் யூனியன் முன்வைத்துள்ள திட்டம், இன்று நாடுகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகளிலும், பல சர்வதேச அரங்குகளிலும் விவாதிக்கப்பட்டு வருகிறது.

ராணுவ மேலாதிக்கம் பெற வேண்டும், விண்வெளியை ராணுவமயமாக்க வேண்டும் என்ற பேராசையின் காரணமாக, ரெய்க்ஜாவிக் பேச்சுவார்த்தையில் படைக்குறைப்பு ஒப்பந்தம் ஏற்படவிடாமல் அமெரிக்கா முட்டுக்கட்டை போட்டதை உலகம் கண்டது. இருந்தபோதிலும் ரெய்க்ஜாவிக் மாநாடு, அணி ஆயுதப் படைக்குறைப்புக் குறித்து உடன்பாடு காண்பது சாத்தியமே என்பதை உலகுக்கு உணர்த்தியது. மேற்கத்திய போர்க் கழுகுகளுக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தை தீவிரப்படுத்த இன்று உலக மக்கள் உறுதி பூண்டுள்ளனர்.

அணு ஆயுதங்களும், வன்முறைகளும் அற்ற உலகை அமைப்பதற்கு வழிகாட்டும் 10 கோட்பாடுகளைக் கொண்ட டில்லிப் பிரகடனம், உலகம் தழுவிய வரவேற்பைப் பெற்றுள்ளது.

எனவே துணிச்சலான, இடையறாத முயற்சிகளை மேற்கொண்டால் உலகில் இருந்து அணு ஆயுதங்களை அகற்றுவது சாத்தியமே.

# இந்திய சினிமாவில் பெண்களின் பிரதிருபமும் அபர்ணா சென்னும்

மூலம்; அஸங்க மௌனராவில
தமிழில்: இப்னு அஸூமத்

ஆசியாவின் பிரபல கலாச்சாரங்களில் ஒன்று இந்தியாவில் உரிமையாக்கப் பட்டிருக்கிறது. இந்தியப் பெண்கள் அவர்களின் கலாச்சாரத்தில் ஒருவித விஷேட பிரதிருபமாகும். நீண்ட காலங்களின் முன்பாக நாம் இந்தியப் பெண்களைப் பற்றி அறிந்து கொண்டது — கேள்விப்பட்டது இந்தியத் திரைப்படங்களின் மூலமாகும். என்றாலும் இவை யதார்த்தமான பெண்களின் தன்மையை உணர்வதற்கு ஏதுவாக இருக்கவில்லை. இத் திரைப்படக்காரர்களால் நிர்மாணிக்கப்பட்டு காட்டப்பட்ட சீதைகள் அல்லாவிடில் கற்பினைக் காக்கும் பத்தினிகள், கணவன்மார்களால் தாசியாக்கப்பட்டே எமக்கு அறிமுகமாயினர். கணவனிடத்தே இருந்து எழுகின்ற எதுவிதமான துன்பங்களாயினும் இப்பெண்கள் அத்துன்பங்களைப் பொறுத்தாகி வாழ வேண்டி இருந்தது.

இப் பெண்களின் தொழில் நிலையானது, வீட்டுக்குள்ளும், பிள்ளைகளைப் பேணி வளர்ப்பதிலும் மட்டுமே எல்லையாகியது. சமுதாயத்திற்கு ஏதேனும் செய்யக் கூடிய பெண்களும் இவர்களின் மத்தியில் இல்லாமலில்லை. எனினும் அன்றிவர்கள் பெற்றிருந்த உரிமையானது நான்கு சுவர்களுக்குள் மட்டுமே எல்லையாகி இருந்தது. இப்படி இருப்பதற்கு அவர்களுக்கு நிலைமை சாதகமாக இருந்தது. இந்நிலையை மீறிய பெண்களைச் சமுதாயம் நிராகரித்தது.

இப்படியானதொரு சமூகப் பின்னணி மட்டும் நடமாடிய நாட்களில் இந்திய சினிமாவானது இந்தியாவின் மகா சினிமாக் கலைஞரான சத்தியஜித்ரே மூலம் யதார்த்த நிலைக்கு வரலாயிற்று. உண்மையான இந்தியப் பெண்களின் சுயரூபம் இவரது திரைப்படங்களில் உயிர் பெற்றது. துன்பங்களை அனுஷ்டிக்கின்ற, வாழ்க்கையின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்ற வன்மையான பெண்கள் இவரது திரைப்படங்களில் கதாநாயகிகளாயினர்.

சத்தியஜித்ரேயின் 'சாருலதா', 'தேவி' போன்ற திரைப்படங்களின் மூலம் பாரம்பரிய சுபாவங்களிலான பழக்க வழக்கங்களுடன் பிணையும், இப்பாரம்பரிய பழக்க வழக்கங்களினால் பீடைக்குள்ளாகும் பெண்ணை அறிமுகம் செய்து வைத்தார்.

மிரிணாள் சென்னின் 'புவான் சோமே', சத்தியஜித்ரேயின் 'அரண்யர் தி ராத்ரி' போன்ற இரு திரைப்படங்களும் கிராமத்துப் பெண்ணையும், நகரத்துப் பெண்ணையும் — இவர்களது வாழ்க்கைத் தரம், பழக்க வழக்கங்களின் நிஜத் தன்மை போன்ற நிகழ்வுகளையும் ஒரு சேரப் படம் பிடித்துக் காட்டின. அத்துடன் சத்தியஜிரேயின் திரைப்படமான 'மஹாநகரும்', 'ப்ரதிவன்தி' என்ற திரைப்படமும் வேலை செய்யும் பெண்கள் பற்றியும் அவர்கள் முகம் கொடுக்க நேரிடுகின்ற விவிதப் பிரச்சினைகளைப் பற்றியும் விரிவாகப் பார்க்க முயற்சி எடுத்திருந்தன.

அன்று திரைப்படங்களின் மூலமாக மட்டுமே நாம் கண்ட இந்தியப் பெண்கள் இன்று புதுமை செய்கின்ற பிரதிருபங்களாக மாறி இருக்கின்றனர். மிக விசேடமாக இந்தியச் சினிமாவில் இவர்கள் புதுமை செய்யப் புறப்பட்டுள்ளனர்.

சத்தியஜித்ரேயின் 'தீன் கன்யா' திரைப்படத்தின் மூலம் யுவதி அபர்ணா தஸ்குப்தா ஒரு முரட்டுப் பெண் பாத்திரமேற்று திரைப்படத் துறைக்குள் நுழைந்தார். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதுகளின் சகாப்தத்தில் இவர் இந்தியாவிலும், வங்காளச் சினிமா உலகிலும் தரமான நடிகையாக பிரபலமானார். இவர் ஹிந்தித் திரைப்படங்கள் சிலவற்றிலும் பிரதான பாத்திரமேற்று நடித்துள்ளார்.

என்றாலும் இன்று அபர்ணா சென் (விவாகத்தின் பின் இவர் அபர்ணா சென்னாக மாற்றம் பெற்றார்) இந்தியாவிலும் மட்டுமன்றி சர்வதேசிய திரைப்படக் கலைஞர்களின் மத்தியிலும் பேசப்படும் அளவுக்கு உயர்ந்துள்ளார், சிறந்த இளம் நடிகையாக அல்ல, தன் முதல் திரைப்படத்தில் உயர்மட்ட நெறியாள்கையைக் கையாண்டு மதிக்கத்தக்கதொரு நிர்மாணிப்பை பிரசித்தப்படுத்திய இயக்குநர் என்ற முறையில்.

அபர்ணாவின் சொந்தப் படைப்பானதொரு சிறுகதையினைப் பின்னணியாக்கி 36 சௌரங்கிலேன் திரைப்படத்தின் திரைக் கதையையும் எழுதி இயக்கினார். முதுமை பெற்ற எண்ங்லோ — இந்திய ஆசிரியையான 'வயலட் ஸ்டோன்ஷெம்' என்பவரின் பாழடைந்து போன தனிமையான வாழ்க்கை இத்திரைப்படத்தின் சாராம்சமாகியது. இத்திரைப்படத்தின் பிரதான பாத்திரத்தை ஏற்று நடித்தவர் இந்தியாவின் பிரபல நடிகரான சஷிகபூரின் மனைவியான ஜெனிபர் கபூர் என்பவர் ஆகும். திரைப்படத்தின் செலவுகளை சஷி கபூர் ஏற்றிருந்தார். இத்திரைப்படத்தின் முழுப் படப்பிடிப்பினையும் வங்காளத்தின் தலைநகரான கல்கத்தாவில் வைத்தே நடத்தினர்.

1981 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள்ளாக அபர்ணாவின் இத்திரைப்படம் வெளிவந்தது. இதனால் கிடைத்த பிரச்சாரம் முழு இந்தியாவிலும் பரபரப்பை உண்டுபண்ண வழி செய்தது. அபர்ணா சென்னியின் மிகத் திறமையான நெறியாள்கையினைக் கண்ட எல்லா ரசிகர்களும், விமர்சகர்களும் உயர் மட்டத்தில் இத்திரைப்படம் பற்றிப் பேசிக் கொள்ள ஆரம்பித்தனர்.

பம்பாயில் உலகப் பிரசித்தி பெற்ற பெண் எழுத்தாளரான தேவயாளி சௌபால் '36 சௌலண்கி லேன்' திரைப்படத்தின் மூலம் அபர்ணா வெளிப்படுத்தி இருந்த கைவண்ணம் தன்னைப் பல நாட்களாகத் தூங்க விடாமல் தொந்தரவு பண்ணிக் கொண்டிருந்ததாகக் கூறியிருந்தார். இத்திரைப்படமானது அந்தளவுக்கு

பிரபலமாகவும், உணர்ச்சிகளை வெளிப்படுத்தக் கூடியதாகவும் அமைந்திருந்தது.

அபர்ணாவின் நெறியாள்கையும், ஜெனிபர் கபூரின் சர்வதேச மட்டப் பிரதிப் பூர்ண நடிப்பும், தேபஸ்றீ ரோஸி எனும் புதிய வங்காள நடிகையும், திரிடிமன் செடர்ஜியும் வெளிப்படுத்திய சிறந்த நடிப்பும். ஹண்ஜி சற்ர குப்தவின் (சத்திய ஜித்ரேயின் 'சாருலதா' திரைப்படத்தின் கலை இயக்குநர்) கலை நெறியாள்கையும் அஷோக் மெஹெறதாவின் உன்னத ஒளிப்பதிவும், 36 — சௌரங்கி லேன் திரைப்படத்தின் வெற்றிக்கு மிகவும் உறுதுணையாயிற்று.

198' இல் பிலிப்பீனின் மணிலா நகரத்தில் நடந்த முதலாவது மணிலா சர்வதேசியத் திரைப்பட விழாவின் போது வழங்கப்படுகின்ற உயரி விருதான 'கோல்டன் ஈகள்' என்ற விருது 36 — சௌரங்கி லேன் திரைப்படத்திற்குக் கிடைத்தது. ஜப்பான், ஹொங்கொங், அவுஸ்திரேலியா, ரஷ்யா, பிரித்தானியா, நியூசிலண்ட் போன்ற நாடுகளின் சிறந்த தரத் திரைப்படங்களைத் தோற்கடிப்பதற்கு அபர்ணாவின் இத் திரைப்படத்திற்குச் சக்தி இருந்தது.

இந்தச் சர்வதேசிய விருதானது இன்னும் விருதுகளின் ஊர்வல வாசலாகியது எனச் சொல்ல முடியும். இந்தியத் தேசிய விருதுகளின் விழாவின் போது எல்லா இயக்குநர்களையும் (சத்யஜித்ரே, ஜீ. அரவிந்தன். வென்னவுன் உட்பட) தோல்வியடையச் செய்து சிறந்த இயக்குநருக்கான விருதினை அபர்ணா சென் தட்டிக் கொண்டார். அத்துடன் சிறந்த ஆங்கிலத் திரைப்படத்திற்குக் கிடைக்கும் விருதும், சிறந்த வர்ணத் திரைப்படத்திற்குக் கிடைத்தது.

மெட்ராஸில் இருந்து வெளிவருகின்ற ஒரு சஞ்சிகை நடாத்திய '981 ஆம் வருட சிறந்த சினிமா நிர்மானங்களுக்கான விருதுகள் வழங்கும் உற்சவத்தில் சிறந்த இந்தியச் சினிமா இயக்குநருக்கான விருதினை அபர்ணா சென் பெற்றுக் கொண்டார். அந்த வருடத்தின் சிறந்த நடிகைக்கான விருதினை ஜெனிபர் கபூர் பெற்றுக் கொண்டார். அதன் பின்பு நடந்த 'பிலிம் பெயர்' விருது விழாவின் போது இவருக்கு விஷேச 'ஜூரி' விருதும் கிடைத்துள்ளது.

தன் முதல் திரைப்பட நிர்மாணிப்பில் விருதுக்குப் பின் விருதுகளைப் பெற்ற அபர்ணா சென், இப்போது தன் இரண்டாவது திரைப்படத்தை நிர்மாணித்து முடித்துள்ளார். 'பெரோமா' அவருடைய சொந்தக் கதையொன்றினைத் தழுவி, அவரே இதற்கும் திரைக்கதை அமைத்துள்ளார். இளமைக் காலத்தினை முடித்துக் கொண்டு நடுத்தரத்திற்கு வந்துள்ள ஒரு தாய் தன்னைவிடக் குறைந்த வயதுடைய ஒரு இளைஞனுடன் ஏற்படுத்திக் கொள்கின்ற உணர்வினைப் பற்றிப் பின்னிப் பிணைந்துள்ளது 'பெரோமா' எனும் இவரது இரண்டாவது திரைப்படம். இக்கதையில் வரும் பெண் இப்படியான ஒரு தடை அன்பை வளர்த்துக் கொள்ள அவளுக்கு நேரிட்ட பின்னணிகளைப் பற்றி இத்திரைப்படத்தின் மூலம் விவரிக்க அபர்ணா முற்படுகிறார்.



இப்படத்தின் முக்கிய பாத்திரத்தில் நடிப்பவர் ஹிந்திச் சினிமாவில் அதி சிறந்த நடிகையான 'ராகி' யாகும். பிரதான ஆண் பாத்திரத்தில் அபர்ணாவின் கணவரான முகுள் ஷர்மா நடிக்கின்றார். அபர்ணாவும் இத்திரைப்படத்தில் ஒரு சிறு வேடத்தில் நடிக்கின்றார். பிரதான பாத்திரமேற்று நடிக்கும் 'ராகி யின் தோழியாக.

'பெரோமா' வில் பிரதான பாத்திரமேற்று அபர்ணாவினால் நடிக்க இயலுமாக இருக்கிறது. எனினும் நெறியாழ்கை என்னும் பாரதூரமான பொறுப்பினை ஏற்றிருக்கும் அவரால் நடிக்கவும் செய்தால் இரு துறையில் எதனையும் ஒழுங்காகச் செய்ய முடியாமல் போவதற்கும் இடம் உண்டு என அவர் குறிப்பிட்டிருக்கிறார். '36 – சௌரங்கி லேன்' திரைப்படத்திற்கு மிக உயர்ந்த பாராட்டுதலகள் கிடைத்தமையால், 'பெரோமா' அதைவிடச் சிறப்பாக அமைய வேண்டும் என்பதே அபர்ணாவின் குறிக்கோளாகும்.

வருகிற ஆகஸ்டில் வெனிஸ்ஸில் நடக்கும் வெனிஸ் திரைப்பட விழாவில் கலந்து கொள்ள இந்தியா இத்திரைப்படத்தைத் (பெரோமா) தேர்ந்தெடுத்துள்ளது.

அபர்ணாசென் இந்தியாவின் புண்ணியததிற்குப் பிறந்திருக்கும் உயர் மட்டக் கலைஞராவார். அன்று தன் நடிப்பால் பார்ப்போரின் இதயங்களைக் கொள்ளை கொண்ட இந்த யுவதி வங்காள நடிகைக்கு இன்று சர்வதேசிய ரீதியில் பெண் சினிமாக் கலைஞர்களுக்கு மத்தியில் முதல் ஆசனத்தில் இடம் உண்டு. ●

---

# இழிவுப் புள்ளிகள்

— மருதமுனை ஹசன்

ஸ்திரிக்கைப் பெட்டி உரசாத
பருத்தித் துணிபோல
என் மனம்
சோர்ந்து சுருங்கி
வாடிக் கிடக்கிறது.

நீலவானும்
மப்பும் மந்தாரமுமாய்
தொங்கித் துயில்கிறது.

முற்றத்தில் நிற்கிறேன்
அரை மதிலைத் தாவி
ஆடி வந்த மென் காற்று
சோபை இழந்த எந்தன்
முகத்தில் விழிக்காமல்
சொல்லாமல் செல்கிறது.


என் இதயப் பூவணையில்
ஆழ் துயிலில் உள்ள
சோகக் குழந்தைகள்
ஒவ்வொன்றாய்க் கண்மலர்ந்து
தேம்பித் தேம்பி
கண்ணீர் உகுந்த நிலை.

அம்மா பூமா தேவியே
உனக்கடியிலும்
நீபயந்த பிள்ளை
ஆழ் கடலிலும்
அணுக்குண்டுச் சோதனைகளாம்.

யாரந்த விஞ்ஞான ராசாக்கள்
கொதிக்கும் இதயத்தின்
ஆவிதனை ஊத
முகம் கொப்பளிக்க.

ஆனாலும் எந்தன்
பனி மனத்தின் வரைபடத்தில்
உயர்வுப் புள்ளிக்கு இடமேது
இழிவுப்புள்ளிக்கே
இறங்கி வருகிறது என் கோபம்
வழமைபோல்.

●



# என் வீட்டிலும் ஒரு அம்மா...

— ஸ்ரீதர் பிச்சையப்பா

சூரிய உதடுகள்
விடியலை உச்சரிக்க
ஆரம்பித்த சப்தத்தால்
காயமடையும் என்
கனவுகள்.

ஒளி விரல்கள் நீண்டு
பூமிவாசலில்
வெளிச்சக் கோலமிட
வெளி ஜன்னலின்
பனித்திரை விலகி
தொலைவின் கேள்விகள்
விடையாகும்.

இருள் கரப்பிடியிலிருந்து
மரங்கள்
ராத்திரிக் கழட்டியெறிந்த
பசுமை ஆடையை
எடுத்து உடுத்திக்கொள்ள

இலைகளின் மேனியில்
காற்றுச் செய்த
குறும்பில் மலர்கள்
வெட்கம் விதைத்ததாய்
பூமியை மாற்றும்

மௌனம் தன்
காதுகளைத் தீட்டிக்கொண்டு
காலையின் இதழ்கள்
இசைக்கப் போகும்
வார்த்தை பூபாளத்திற்காய்
தவமிருக்கும்.

உதய ராகத்தில்
சுருதி சேர்க்க
நிசப்த்த வெளியை
ஒலி அலகால் கிழிக்க
பட்சிகள் சாரீரம்
சாதகம் செய்யும்.

ஈர மஞ்சளைப் பூசிக்கொள்ளும்
கிணற்று முகங்களும் அதில்
நேற்றுகளின் கதைகள்
பரிமாறும் சத்தமும் என்
செவிக்கதவுகளில்
சுப்ரபாதமாய்த் தட்ட.

நிசிநிலாவின் சாபம்
ஆத்மாவின்—
'ஏய் .. . மூதேவி
பன்னிரெண்டு மணிக்குமேல
என்னடா எழுத்து
வேண்டியிருக்கு'
உதயம் பற்றிய என்
கற்பனைகளோடு
லைட்டையும்
அணைத்துப் போவாள்
அம்மா.





# கச்சானே!

— வாசுதேவன்

கச்சானே!
சுயநல விந்தின்
விஸ்பரூபமே!
பிரம்மனின் எதிர்ப்பதமே!

வீசு ..... வீசு .....
உன்னைத் தூக்கி
வீசத்தானே போகிறோம்.

உன் திருவிழாக் காலங்களில்
நம் தெருக்களெங்கும்
மரங்களின் மகரந்தங்கள்.

உன் தரிசன சாபத்தால்
வரங்களையே பறிகொடுக்கும்
மரங்கள்.

தென்றலின் உடன்பிறப்பே
உன்சகோதரி மரங்களுக்கு
ஆபரணங்கள் பொறிக்கிறாள்
நீமட்டுமேன்
அங்கங்களையே பறிக்கிறாய்?

முறியுது கிளைகள்—
ஆயிரமாயிரம்
பூக்களின் சமாதிகளாக!

இலையுதிர் காலமென்று
வசந்தம்
மரங்களோடு நடத்து
ஊடல்தான்
உன் காதலே
மரங்களின்
கழுத்தோடுதானே.

உன்
கால்படும் இடமெங்கும்
காயங்கள்... ..
அந்தக் காயங்களே
புயலின் கருப்பைகள்.

நகங்களும் பற்களும்
உன் நகைகளென்றால்,
புன்னகை என்பது
நீ போட்டிருக்கும் செருப்பு.

கிளைகளை முறிப்பதில் நீ
கெட்டிக்காரனென்றாலும்
வேர்களில் இடறி
விழுவது நீயென்றே
வரலாறு சொல்கிறது.

தழுவ வரும் காற்றென்று
உனை
தப்பாக விளங்கிக் கொள்ளும்
மரங்களுக்காக நான்
மனவருத்தப்படுகிறேன்—

அலைகள் பயிரே களையாகும்
பரிதாபங்கள்.

உதிரும் மரங்களின்
உறுப்புகள் எல்லாம்
விதையாகி மண்ணில்
விழுகின்ற போது—
நீ வீசுவதாலிங்கு
விளைவதே விளைவு

உன்
முற்றுகைக்குள் மூச்சுத்திணறும்
மரங்களை ஒருநாள்
தென்றல் வந்து தத்தெடுக்கும்.

அன்று—
கச்சானே உன் கைமுறியும்
இந்தப் புவியின் மீது
பொய் முறியும்........

அதுவரை —
வீசு . வீசு... உன்னைத் தூக்கி
வீசத்தானே போகிறோம்.

## மணல் மேடுகளும் கல் கோட்டைகளும்!

– வி. ஜெகதீசன்

குண்டுகளின் ஓசையுடன்
கங்குல் விழிக்கும்!
'என்னமோனே சத்தம்'
'அது பொடியள்
அடிக்கிறுங்கள்
பேசாமல் படுங்கோ அப்பா'
பிஞ்சுகளை
பூகம்பங்கள் தாலாட்டும்
நிசப்தத்தைத்
தொலைத்துவிட்டு;
நாட்கள்
நிம்மதியற்றேங்கும்!
ஒவ்வொரு
தம்பதியின் பிம்பங்களிலும்
'ஷெல்' நினைவுகள்
வந்துறுத்தும்;
நகரப்பரப்புகளில்
திடீர்ப் பரபரப்பு!
'வெளிக்கிடுகிறுங்களாம்'!
உயிரைக் கையில்கொண்டு
மானுடங்கள்
முண்டியடிக்கும்!
கடைகள் –
வாயை மூடிக்கொள்ளும்!
கட்டறுந்த மாடுகளாய்
மினிபஸ்கள்
திக்கொன்றுயோடும்
'ஹோர்ன்' ஒலிகள்
சப்தங்களின் வேதமாகும்
'அம்மே...... அம்மே......'
'அம்மா..... அம்மா......'
சப்தக் கதிர்கள்
வான்வெளி சூன்யத்தைக்
கிழிக்கும்
மணல் மேடுகளிலும்
கல் கோட்டைகளிலும்
உதிரம் வழிந்து
உறைந்துபோகும்
மீண்டும் நாளை
குண்டுகளின் ஓசையுடன்
கங்குல் விழிக்கும்!

## ஒரு உவமானம்

– பேருவளை ஐவ்ஸகி

வானுயர்ந்த மாடி
விரிந்த முன்றல்
நீளமாய்த் தெரியும்:

சிவந்து தெறிக்கும்
கன்னியின் இதழாய்
செழித்துச் சிரிக்கும்
மலரிதழ் மீதில்—
கொட்டும்
வெண்பனித் துளிகள்
முத்தங்கள் இடும்.

வசந்த ராகம் மீட்டும்
தரைக் காற்று
தாழம் பூவின் வாசம் கமக்கும்
தோப்பின் நடுவின்—
சிதறும் வர்ணத் துளிகளாக
சிலிர்த்தெழுந்து
வெளியில் தவழவிரும்பும்
சின்னப் பறவைகளுக்குச்
சிறையாய்
சல்லடை வலைகள்
சாவல் புரியும்.

எதிரில்—
கூன்விழுந்த குடில்
கரைபெயர்ந்த சுவர்கள்
முதுமை காட்டும்
குறுகிய முன்றலில்
சொடூர வெப்பம் வாட்டும்
முற்றத்து மல்லிகை
மணக்காது உதிரும்
வான முகட்டின்
சாளரங்கள்
ஒருநாள்
சட்டெனத் திறந்து
கொட்டும் துளிகளில்
சல்லடை வலையாகும்—
எங்கள் வீட்டுக் கூரை.





## அவுஸ்திரேலியாவிலிருந்து முருகபூபதி

கடல் கடந்து — ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால்— பொருளாதாரக் காரணங்களுக்காக வந்த போதிலும் இலங்கை இலக்கிய உலகம் இப்போது எப்படியிருக்கும்? எமது மக்கள் வாழ்வில் நிம்மதிப் பெருமூச்சு எழுமா? என்ற கேள்விகள் அலை அலையாக வந்து மனதில் மோதிக் கொண்டிருக்கின்றன.

வீரகேசரியில் இருந்து நான் விலகியது இலக்கிய உலக நண்பர்களுக்கு முதல் அதிர்ச்சியாக இருக்கலாம்; என்ன செய்வது இரண்டாவது அதிர்ச்சியையும் இப்போது தர நேர்ந்ததையிட்டு கவலைதான். எனினும் மல்லிகை ஆசிரியர் உட்பட இன்னும் சில இலக்கிய நண்பர்களுடன் என் வீட்டில் விருந்துண்டு மகிழ்ந்து பிரிந்தது சற்று ஆறுதலைத் தருகிறது. மல்லிகையின் நண்பர்கள் டாக்டர் வாசுதேவன், பேராசிரியர் இந்திரபாலா, நவசோதி, மாத்தளை சோமு போன்றவர்கள் சிட்னியிலும், கன்பராவிலும் இருக்கிறார்கள். இன்னும் அவர்களைச் சந்திக்கவில்லை. இனிமேல்தான் பார்க்க வேண்டும்.

மல்லிகையை நீர்கொழும்பு முகவரிக்கே அனுப்புங்கள். என் மனைவி அதனை எனக்குச் சேர்ப்பிப்பார். இ. மு. எ. சவின் யாழ் கிளை தொடர்ந்தும் இயங்க வேண்டும். மல்லிகை அதற்குப் பக்கபலமாகத் திகழவேண்டும். மல்லிகைக்கென தனி அச்சு இயந்திரம் வாங்கும் யோசனையைக் கைவிட்டுவிட வேண்டாம்.

தொடர்ந்தும் நான் எழுதிக் கொண்டிருக்க வேண்டும் என்ற மல்லிகை ஆசிரியரின் விருப்பத்தை நான் நிச்சயம் நிறைவேற்றுவேன் அருகிலே இல்லையென்பதால் இலக்கியக்காற்று என்னை நோக்கி வீசாது என எண்ண வேண்டாம். போதியளவு புத்தகங்களுடன்தான் விமானம் ஏறினேன். சிவகங்கை அன்னம் வெளியீடான பால்ராஜ் கென்னடியின் 'வீடு' தொகுப்பை இப்போதுதான் படித்து முடித்தேன். மீண்டும் தொடர்பு கொள்வேன்.

# வரண்ட உள்ளங்கள்

— நாகேசு தர்மலிங்கம்

வழமைக்கு மாறாக அந்தத் தெங்கந்திடல் சிறிய ஒழுங்கைக்குள் அந்தப் பெரிய, அதிக பணம் பெறுமதிவாய்ந்த 'டற்சன்' கார் வந்து நிற்கிறது. குசினிப் பக்கமாக சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த பூரணம் தனது வீட்டு வாசலில் கார்வந்து நின்றதால் அப்படியே அடுப்படி வேலையை விட்டுவிட்டு காரைக் கூர்ந்து நோக்கினாள். இப்படியான கார்கள் இப்போ அந்தக் கிராமத்திற்குப் புதியதில்லை. என்றாலும் இந்தச் சிறிய ஒழுங்கைக்குள் வருவது புதியதொன்றுதான்.

'ஒருவேளை பொடியள் வாறாங்களோ ..? சீ.. இந்த ஏழைக் குடிசைக்கு அவங்கள் ஏன் வாறாங்கள்?'

தட்டியைப் பிடித்துக் கொண்டு காரைப் பார்த்துக் கொண்டு நின்ற பூரணத்தின் உள்மனம் ஒருவித பய உணர்வுடன் உதடுவரை வார்த்தையைத் தள்ளியது.

'தம்பி நீ காருக்குள் இரும் நான் ஒருக்கா இந்த வீட்டுக்குப் போயிற்று வாறன்'

தோளில் சால்வையைச் சரி செய்து கொண்டு காரை விட்டிறங்கிய மாணிக்கத்தார் பூரணத்தின் வீட்டை நோக்கி நடந்தார்.

'ஆரு அண்ணனா? நான் ஆரோ எண்டு பயந்திட்டன். இப்பிடிக் கார் ஒருநாளும் எங்கட படலையிக்க வந்து நிண்டது கிடையாது. வாங்க உள்ளுக்க. வந்து இப்பிடி இந்தத் தடுக்கில இருங்க'

நீண்ட நாட்களுக்குப் பிறகு தனது வீட்டிற்கு வந்த உடன்பிறப்பைக் கண்டதும் செய்வதறியாது உளம் பதைபதைக்க பனை ஓலைத் தடுக்குப் பாயை எடுத்துக் குந்தில் போட்டவாறு பூரணம் கூறினாள்.

கார்ச் சத்தம், வீட்டிற்குள் ஆம்பிளைக் குரல் என்பவற்றைச் செவிமடுத்த பூரணத்தின் மகள் சரசுவும் வீட்டின் பின்புறத்தில் இருந்து இழைத்த பாயையும் ஓலையையும் அப்படியே விட்டுவிட்டு வீட்டின் முன்புறத்துக்கு வந்து தடுக்கில் அமர்ந்திருந்த மாணிக்கத்தாரைக் கண்டதும் அம்மாவின் அண்ணன் என்பதை மிகவும் கஸ்டப்பட்டுக் கற்பனை செய்து அறிந்து கொண்டாள்:

'என்ன சரசு அப்பிடிப் பாக்கிற? இவர் என்ர அண்ணன். உனக்கு மாமா. கொழும்பில பல கடையளுக்கு முதலாளி. யாழ்ப்பாணத்தில் நாவலர் றோட்டில பெரிய வீடும் இருக்கு'



உடன் பிறந்த அண்ணனைப் பற்றி பூரணம் மகள் சரசுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய நிலையே இந்த இரண்டு குடும்பங்களின் ஒட்டுறவை வெளிப்படுத்தியது.

'ஓமம்மா, அப்புவட செத்த வீட்டில சின்னவயதில் இவரைக் கண்டனான். எண்டாலும் எனக்கு ஞாபகம் இருக்கு' வீட்டின் முற்றத்தில் நின்றவாறு சரசு கூறினாள்.

'சரசு போய் மாமாவுக்குத் தேத்தண்ணி ஊத்திக் கொண்டு வாம்மா'

அண்ணன் தனது வீட்டிற்கு வந்துவிட்டர் என்ற அளவிலாத சந்தோஷத்தில் பூரணம் கூறினாள்.

'இல்லைத் தங்கச்சி. எனக்கொரு தண்ணியும் வேணாம். இந்த ஊர் உப்புத் தண்ணியை வாயிலும் வைக்க ஏலாது. சீ... இது என்ன ஊரப்பா? சரியான வெய்யில், குடிக்கத் தண்ணியில்லை. முகம் கழுவினா முகம் எரியுது. என்னெண்டுதான் நீங்க இந்த ஊரில இருந்து சீவிக்கிறீங்களோ கடவுளுக்குத்தான் தெரியும்'

மாணிக்கத்தார் தேநீர் வேண்டாம் என்று கூறியதுடன் தான் பிறந்த அந்தக் கிராமத்தைப் பற்றியும் விமர்சிக்கத் தொடங்கினார்.

'அண்ணி, பிள்ளையள் ஒருவரும் வரவில்லையா? நீங்க மட்டுடதான் வந்தனீங்களா? கார் தானே, அவர்களையும் எங்கட வீட்ட கூட்டிக்கொண்டு வந்திருக்கலாமே'

அண்ணியும், பிள்ளையளும், நானுந்தான் வந்தனாங்கள். அவை அங்க பக்கத்து வீட்டுச் சின்னக் குட்டியைப் பிடிச்சு எங்கட வீட்டைத் தூசிதட்டிக் கூட்டிக் கழுவி வளவையும் துப்பரவாக்கிக் கொண்டு நிக்கினம். அதால நான் தனிய வந்தனான். இந்த ஊர்ச் சனங்களும் சரியான மோசம். ஒரு குடி இல்லாத வளவுக்க இருக்கிற தேங்காய் மாங்காயக் கொண்டு போறதோடை வேலியையும் பிச்சுக் கொண்டு போகுதுகள்' நல்ல காலம் நாங்க அந்த யாழ்ப்பாண ரவுணோட இருக்கிறது. இல்லாட்டி எங்களையும் பிச்சுத் திண்டிடுவாங்கள்'

ஏதோ புதிய இடத்திற்கு வந்தவர் போல் மாணிக்கத்தார் கூறினார்.

'நீங்க விட்ட பிழைக்கு ஏன் ஊரப் பேசுறீங்க. அந்தப் பென்னம் பெரிய வீட்ட றோட்டுக் கரையில கட்டிப்போட்டு ஒரு குடியையும் இருத்தாம வெறும் வீடா விட்டா சனங்கள் அப்பிடித்தான் செய்யும்'

'நீ என்ன பூரணம் சொல்லுற? ஆரயேன் அந்த வீட்டில இருத்தினால் பிறகு அதுகள் எழும்பமாட்டன் எண்டு அடம் பிடிச்சா அது வேற வழக்கு வம்பு எண்டு திரியவேணும். ஏனிந்தக் கரைச்சல் எண்டுதான் வெறும் வீடா விட்டிருக்கிறன்.

படலையைத் திறந்துகொண்டு தனது கீச்சிடும் பழைய சயிக்கிளை உருட்டிக் கொண்டு பூரணத்தின் மகன் சந்திரன் வந்தான். ஒழுங்கைக்குள் நிற்கும் 'டற்சன் சனி' கார் பற்றியும், 'இப்படிக் கார் வைத்திருப்பவர்கள் யார் எங்கள் வீட்டிற்கு வருவார்கள்' என்ற எண்ணத்தில் வீட்டிற்குள் நுழைந்த அவனுக்குத் தாய் மாமன் மாணிக்கத்தாரைக் கண்டதும் அதிர்ச்சியடைந்தான். பல இடங்களில் அவரைக் கண்டிருந்தான். ஆயினும் இந்த வீட்டிற்கு எட்டு வருடங்களுக்கு முன் அப்புவின் செத்தவீட்டிற்கு மட்டுமே அவர் வந்திருந்தார்.

'ஆரு பூரணம் இவன் உன்ர மகனு? ஆள் வளர்ந்து நல்ல இளந்தாரியாயிட்டான், என்ர இரண்டாவது மகள் லதாவுக்கு மூண்டு வயதுக்கு மூப்பு. அவள் மூத்தவள் செல்விக்கு உன்ர மகன் இரண்டுவயதுக்கு இளமை. ஆள் என்ன செய்யிருன்?'

வீட்டிற்குள் வந்த சந்திரனைப் பார்த்துக்கொண்டு மாணிக்கத்தார் கேட்டபோது. தனது பெண் பிள்ளைகளுடன் சந்தரனின் வயதை ஒப்பிட்டுக் கூறியது பூரணத்தின் அடிமனதில் உறைந்திருந்த நப்பாசையின் நரம்பைச் சுண்டிவிட்டது போன்ற உணர்வை அவளுக்கு ஏற்படுத்தியது.

'தம்பி எஸ். எஸ். ஸி. சோதினை எடுத்திட்டு சும்மா இருக்கிருர். உங்கட லதா என்ன மாதிரி அண்ணு? லேடீஸ் கொலிச்சில பிளளை படிச்சது சோதினை பாசா?'

'அவள் இப்பதானே எட்டாம் வகுப்புப் படிக்கிருள். சரி நீ இப்ப உன் புருஷன் ஆறுமுகம் செத்த பிறகு எவ்வளவு கஷ்டப்பட்டு உருக்குலைஞ்சு போய் இருக்கிற. அங்க கொழும்பில என்ர கடைக்கு ஒரு நல்ல ஆள் வேணும். உன்ர மகனை அனுப்பினு எனக்கும் நம்பிக்கையான ஒரு ஆள் கிடைச்ச மாதிரி. உங்களுக்கும் மாதம் மாதம் சம்பளம் அனுப்புவான்தானே'

மாணிக்கத்தாரின் முதலாளிக் கண்ணின் பார்வை வார்த்தையாக வெளிவந்தது.

'அவன் வெளிநாடு போறன் எண்டு சொல்லுறுன் அண்ண. பாப்பம் நான் கேட்டுச் சொல்லுறன்'

அண்ணனின் வார்த்தைக்கு மறுப்புச் சொல்லத் தைரியமற்ற பூரணம் சொன்னுள்.

'நாளைக்கு அம்மன் கோவில் தேர்த்திருவிழாவுக்கு வருவீங்களா?'

'அதுக்குத்தானே நாங்கள் இண்டைக்கு வந்தனுங்க. நாளைக்குத் தேர்த்திருவிழாவை முடித்துக் கொண்டு பின்னேரமே யாழ்ப்பாணம் திரும்பியிடுவம். அங்க வீடு பூட்டிக்கிடக்கிறத்தோட நாய், கோழி எல்லாம் பட்டினியால செத்துப் போயிடும். அதோட பிள்ளையளுக்கும் இந்த ஊர் வெய்யில், உப்புத் தண்ணி பழக்கமில்லை. ஏதாவது வருத்தங்கள் வந்திடும். சரி தங்ச்சி நேரமும் போயிட்டுது நான் போயிற்று வாறன். அண்ணி பிள்ளையளைப் பாக்கிறதெண்டால் நாளைக்குக் கோயிலுக்கு வாங்க' எழுந்து மாணிக்கத்தார் காரை நோக்கி நடந்தார்.

எல்லாவற்றையும் நோட்டம் விட்டுக் கொண்டிருந்த சரசுவும், சந்திரனும் தங்களுக்குள் சிரித்துக் கொண்டே உரையாடினுலும், தாய் மீது சீறிப்பாய்ந்து கதைத்தார்கள்.

'எண அம்மா, உன்ர அண்ணன் சிங்கப்பூரிலேயா பிறந்தவர்? இந்த வரண்ட தீவில்தான் பிறந்தவர் இப்ப வசதி வாய்ப்பு எல்லாம் வந்து அங்க யாழ்ப்பாண ரவுனில் சீவிச்ச உடன் இந்த ஊரை எவ்வளவு இளக்கமாகக் கதைக்கிருர் பார்த்தயாடா சந்திரன்'

இவ்வளவு நேரமும் பொறுத்திருந்து ஆத்திரத்தைக் கொட்டுவது போல் சரசு கூறினுள்.

இவங்கட உறவே எங்கட குடும்பத்துக்கு இருக்கக் கூடாது. எங்கட குடும்பத்துக்கு மட்டுமில்லை இந்தக் கிராமத்துக்குக் கூட இவங்கட காத்துக் கூடப் படக்கூடாது'



அக்காவுடன் சந்திரனும் சேர்ந்து ஆக்ரோஷமாகக் கூறினுன்

'நீங்க என்ன சொன்னுலும் என்ர ஒரேயொரு உடன்பிறப்பு நான் விடமாட்டன்'

ஒருவித பரிதாப உணர்வுடன் பூரணம் கூறினுள்.

'பாத்தாயாக்கா அவற்ற கடைக்கு என்ன வரட்டாம். நான் எங்கயாவது போய் மூடை சுமந்தாலும் இவரட்டப் போக மாட்டன். அடுத்தது அண்ணி பிள்ளையளைப் பாக்கவேணுமெண்டால் நாளைக்கு அங்க கோயிலிற்கு வரட்டாம். அவை 'ருெக் வெல்லர்' பரம்பரை, இங்க எங்கட மண் வீட்டுக்கு வந்தாத் தேய்ஞ்சு போயிடுவினம். ஆரு சரி நாளைக்குக் கோயிலிற்குப் போனு அங்க அவை யாரோடையும் கதைக்கக் கூடாது'

'இதை எனக்குச் சொல்லாத சந்திரன், உன்ர அம்மாவுக்குச் சொல்லு. எவ்வள்வு காலத்துக்குப் பிறகு வந்து தேத்தண்ணி கூடக் குடிக்காமப் போனவற்ற பெண்சாதி பிள்ளையளைக் கண்டவுடன் வலியப் போய்த் தானுக் கதைத்து உறவு கொண்டாடுவா'

அக்காவும், தம்பியும் இப்படி மாறி மாறிக் கூறியது பூரணத்தின் உரோஷ நரம்புகளைத் தட்டி எழுப்பியது. என்ருலும் சகோதர பாசமும் இடையிடையே தலையை நீட்டியது.

★

அந்தக் கிராமத்தின் தெற்குக் கரையில் குடி கொண்டிருக்கும் கண்ணகை அம்மன்கோவில் தேர்த்திருவிழா முடிந்து பல நாட்கள் ஆகிவிட்டன. முன்பைப் போல இப்போ யாழ் பட்டினத்திற்கு இந்தக் கிராமத்தில் இருந்து நேராக நேரடிப் பொழுதில் வாகனத்தில் சென்று வர முடியாது. பழைய கடல், தரைமார்க்கமான பிரயாணங்களையே அப்பகுதி மக்கள் மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. அதாவது பழைய அராலித்துறை முகத்தில் இருந்து தோனியிலும் ஏனைய பகுதிகளை வாகனங்கள் மூலமும் பிரயாணம் செய்யலாம். யாழ் கோட்டைக்கு அண்மையில் பண்ணை வீதி இருப்பதும் அதனுல் அங்கு ஏற்படும் மனிதக் கொலைகளைத் தடுப்பதற்குமே இந்தப் பழைய பாதை இன்று செயல்படத் தொடங்கியது.

'பூரணம், பூரணம் நான் இங்க படலையிக்க நிண்டு தொண்டைகிழியக் கத்திறன். நீ இங்க வீட்டுக்க இருந்து என்ன செய்யிற?' படலையைத் திறந்து கொண்டு ஆலடிச் சந்திச் செல்லாச்சி அக்கா குரல் கொடுத்தாள்.

'ஆரு செல்லாச்சி அக்காவா? அப்பிடி என்ன அவசரம்? எனக்கு சரியான காய்ச்சல், அதுதான் உள்ளுக்க படுத்துக் கிடந்தனுன்.

பழைய சீலையால் உடலைப் போர்த்திக் கொண்டு முற்றத்துக்கு இறங்கியவாறு பூரணம் கூறினுள்.

'அங்க உன்ர அண்ணன்ர வீட்டில ஒரே கண்ணீரும் கவலையுமாக இருக்கினம் இது உனக்குத் தெரியாதா?

'நீ என்னக்கா சொல்லுற? யாழ்ப்பாணம் அவை வீட்டை போயிற்ரு வாற'

'எடி பூரணம், அங்க யாழ்ப்பாணத்திலை உன்ர அண்ணன்ர வீட்டுக்கு மேல ஷெல் விழுந்து அப்பிடியே வீடு தரைமட்டமாயிற்றுதாம். நல்ல காலம் உன்ர அண்ணன், பெண்சாதி, பிள்ளை

யன் நல்லூர்த் திருவிழாவுக்குப் போயிருந்ததால உயிர் தப்பி இந்த அராலிக் கடலுக்குள்ளாலா விழுந்தொழும்பி இஞ்ச வந்து தங்கட வீட்டில இருக்கினம்'

'அய்யோ என்ர நல்லூரானே, அதுகடை உயிர் தப்பினது உன்ர கருணைதானே. எடி சரசு அந்தச் சீலையை எடு நான் இருக்கா அண்ணன் வீட்டை போயிற்று வாறன்'

அவசர அவசரமாகப் பூரணம் வெளிக்கிட்டாள்.

'அக்கா உனக்கொரு விஷயம் தெரியுமே? தாக்குப்பட்டது நம்மட இனம் எண்டாலும் தெய்வம் ஊரை நிந்திச்சவைக்கு ஒரு தண்டனை குடுத்துத்தான் இருக்கு'

அந்தக் கீச்சிடும் பழைய சயிக்கிளை உருட்டியவாறு வந்து கொண்டே சந்திரன் சரசுவிடம் கூறினான்.

'ஓமடா தம்பி இப்ப அந்தக் குடும்பம் ஊரோட வந்திற்றினமாம். இந்த வெய்யில், உப்புத் தண்ணி ஒண்டும் அவைக்கு ஒத்து வராதே என்ன செய்யப் போயினம்?'

மாமாவின் பழைய கதையை மறக்காதவளாய் சரசு கூறினாள்.

'எங்கட ஊர் வரண்டு போனத்துக்கு இப்பதானக்கா எனக்குக் காரணம் விளங்குது. இவங்களைப் போல வரண்டு போன மனம் படைச்சவங்களாலதான் எங்கட ஊர் வரண்டது'

சந்திரன் கூறியதை சரசுவும் ஏற்றுக் கொண்டாள். ●


புதிய இடத்திற்கு மாறியுள்ளது.

**சகல சோவியத் புத்தகங்களும்**
**இங்கே கிடைக்கும்**

உலகப் புகழ் பெற்ற ரஷ்ய நாவலாசிரியர்களின் நாவல், சிறுகதைகள், உயர் வகுப்பு மாணவர்களுக்குத் தேவையான விஞ்ஞான, தொழில் நுட்ப நூல்கள், மற்றும் நவீன வாழ்வுக்குத் தேவையான சகல புத்தகங்களும் இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

**மக்கள் பிரசுராலயம் லிமிட்**

**புத்தகசாலை**

15/1, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

தலைமையகம்;
124, குமாரன் ரத்தினம் ரோட், கொழும்பு-2.




# வடுக்கள் அழிய...

— தெணியான்

பழுத்தல் இலைகள் விழுந்து எல்லா இடமும் ஒரே குப்பை. பூவரசு இப்படித்தான்; எப்போதும் சரை கொட்டினபடி. நிழலுக்காக வைத்த முற்றத்து மரங்கள். எந்த நாளும் கூட்டி அள்ள வேணும்.

இந்தக் குப்பையைக் கூட்டி அள்ளவேணுமென்று யாருக்குக் கவலை. வீடே குப்பையான பிறகு.

அஞ்சாறு நாள், கூட்டி அள்ளி. கோழிச்சனியனும் கண்டடம் நிண்டடம் எல்லாம் போட்டு. சீ! கால் வைக்கேலாது. படுக்கிறதுக்குக் கிடங்கு தோண்டிக் கிடக்கிறது நாய். விளக்குமாற்றைக் கையில் எடுத்து சரையை அவள் தட்டத் தொடங்கினபோது......

தெருப்பக்கம் வேலியோலையில் சரசரப்பு. சயிக்கிளை வேலியோடு யாரோ சார்த்தி இருக்க வேணும். பழைய வேலி பிய்ந்து கொட்டுகிறது. அவள் மனதில் எரிச்சலை மூட்டுகிறது,

படலை திறந்து பொடியன் ஒருவன் உள்ளே வருகிறான்.

சாரம் கட்டின பொடியன்.

'அம்மா, மகன் நாளைக்கு வீட்டுக்கு வாறார்'

நல்லாப் பழகின ஆள்போல உரிமையும் நெருக்கமுமான பேச்சு, பணிவான குரல், குழைந்துவரும் வாஞ்சையான அழைப்பு நெஞ்சைத் தொட்டு, நெஞ்சம் நெகிழ்கிறது.

'அம்மா'...... பெற்ற மகனின் குரலாகப் புல்லரிக்கிறது.

அவனோடு பேச வேண்டுமென்றே மனதில் ஒரு துடிப்பு.

என்னதான் பேசுவதோ! என்று அந்த ஒரு கணச் சிலிர்ப்பில், வார்த்தைகள் சிறைப்பட்டு விளைந்த மௌனத்தின் இதமான ஒரு தவிப்பில்......

எல்லாம் நெஞ்சோடு.. ...... நெஞ்சோடு மொழிந்து கூடிக் குலவும்போது ...

அவன் தரித்து நிற்க வேணுமே!

காட்சிக்காக, மின்னலை வானத்தில் ஒட்டிவைக்க முடியுமா?

அன்போடு ஒரு சொல் ..... ஒரேயொரு சொல்தானும் பேசி மனதில் மகிழ முடியாமல் போனதில், அந்த ஒரு கணம் தவறிப் போனதில் மனம் நோகிறது.

அவன் சொல்லிக் கொண்டு போய்விட்டான்.

'மகன் வீட்டுக்கு வாறாணும்'

இதையெல்லோ நம்பட்டுமாம்! எப்படி இருக்கிறது?

நம்பியவை எல்லாம் நாசமாகப் போன பிறகு..., இதுக்கொரு நம்பிக்கை!

'நான் நம்பமாட்டன் ... நம்பமாட்டன். அவன் வரமாட்டான்'

அவன் வரவேண்டுமென்று உள்ளூர ஏங்கும் மனந்தான் இப்படி அடித்துக் கொள்ளுகின்றது.

நம்பி இருந்த கணவன் மலை போலச் சரிந்தபிறகு, நம்பிக்கையை மனதில் வளர்த்த மகன் ஒரு வார்த்தை சொல்லாமல் போன பிறகு, கனவிலும் கருதி இருக்காத விதமாக மகளும் கெட்டுப்போன பிறகு.. ...

எப்படி அவள் மனம் நம்பும்?

●

வேகமாகப் பெருகி வந்த சத்தம் பட்டென்று அமுங்கி, கதவு திறந்து மூடும் சத்தம் எழுகிறது.

மறுகணம் மீண்டும் அந்த இரைச்சல் ஓசை கெம்பிக் கிளர்ந்தெழுகிறது.

தெருப் புழுதியை வாரி இறைத்து அந்த வெள்ளை வான் கரைந்து கரைந்து செவிக்கப்பால் விலகி விலகி ஓடுகிறது.

வெள்ளாப்பு வெளிச்சம் விரைந்து பரவ ஆரம்பித்திருக்கும் வேளை.

நிதமும் வெள்ளாப்புக்கு முன்னமே நித்திரை முறிந்து போகும் அவளுக்கு. அதன் பிறகும் சும்மா பாயிலே கிடந்து புரண்டு புரண்டு எவ்வளவு நேரமென்று உழத்துவது?

உன்மத்தம் பிடித்தவள் போல எழும்பிக் குந்தி இருக்கிறதுதான். சில சமயம் வீட்டுத் தாழ்வார ஓலைக்குக் கீழே வந்து, படலைப் பக்கம் வெறித்து பரக்கப் பரக்கக் குந்தி இருப்பதற்கு 'அவன் போன படலை' என்பதாக இருக்கலாம். இந்த இருப்பு இருக்க வேணும்போல மனதுக்குத் தோன்றினால்........ அவள் இருக்கிறாள்.

'அவன் எங்கை வரப்போறான்? வரமாட்டான்......... வரமாட்........'

மனம்போன போக்கில் கட்டறுத்துச் ஜெபிக்கும் போது படலை திறந்து ஒரு பொடியன் வருகிறான், நேற்றுப் போல.

இந்தப் பொடியன்........?

'இவன் அவனல்ல மேனல்ல'

அவனுக்கு சீப்புக்குப் படியாத சுருள் சுருளான பம்பை மயிர்.

நாசிக் கொழுந்தின் கீழ் இன்னும் மீசைக் கறுப்பு அரும்பாத தங்க முகம்.

காற்சட்டையும் சேட்டும் அணிந்த பள்ளிப் பொடியனின் துள்ளிக் குதிக்கும் வேக நடை.

தோற்றத்தில் அவன் தகப்பனின் வார்ப்பு.

'அதுதான் தேப்பனை இந்த வயதிலை திண்டவன்'

இவன் .. தலையில் நன்றாக ஒட்ட வெட்டின மயிர்.

முகத்தில் எடுப்பான மீசை.

மெல்லிய நீலநிற முரட்டுத் துணியில் தொள தொளத்த சட்டை.

அந்தச் சட்டைக்கு வெளியே கழுத்தில் லேசாகத் தெரியும் கறுத்தக் கயிறு.

அரையிலே ஒரு பூவாளிச் சாரம்.

சற்றும் பதற்றமில்லாத நிதான நடை.



வைரம் பாய்ந்து இறுகின முகம்.

தீட்சண்யமான பார்வை.

மெல்லச் சிரிக்கிறான், அவள் எதிரில் வந்து நின்று.

அந்தச் சிரிப்பு, பழைய ஆரவாரிப்பு எதுவுமற்ற அசுரக் கடையில் தெளியும் ஒரு மெல்லிய புன்னகை.

'அம்மா........' இதயம் நெகிழ்ந்து ஆர்வம் குழைந்தெழும் பூங்குரலாக ஒலிக்கிறது.

இவன் அவன்தான், மகன் தான்.

அவன் அமிழ்ந்து கிடக்கும் மோன சோகம் கலைகிறது.

ஆனந்த பரவசம் அலை அலையாக எழுந்து உள்ளமும் உடலும் எங்கும் புல்லரிக்க, மடிக் குழந்தையாக அவனை வாரி அணைத்துக் கொள்கிறான். ஜென்ம சாபல்யம் அக்கணமே அடைந்துவிட்டதான பூரிப்பில். 'அப்பு...... என்ரை அப்பு...... என்ரை ராசா...... எங்களை விட்டிட்டு எங்கை அப்பு போனனீ!' என்ற வார்த்தைகள் வாயிலிருந்து வழுவ குழந்தை முத்தக் கடலில் முழுக்காட்டுகிறான்,

முத்தத்தில் முழுக்காட்டும் அவள் வலது கரம், அவளை அறியாது நெற்றிக்குமேல் அவன் தலையின் மயிருக்குள்ளே நுழைந்து மெல்ல வருடி வருடி எதனையோ தேடுகிறது.

அந்தத் தேடல் அவனுக்குப் புரியாததல்ல.

கீழ் உதட்டில் மீண்டும் ஒரு நெளிவு.

'அம்மா, அக்கா எங்கை?'

ஆறு மாதங்களுக்கு முன் போனவன். போகும்போது அக்காவோடு கதை காரியம் இல்லாத நிலை.

இப்போது அக்காவையே கருத்தில் வைத்து எழுந்த முதல் விசாரணையில் அவள் கண்கள் சிவந்து, நம்பிக்கை ஒலி பிறக்கிறது.

●

நம்ப முடியவில்லைத்தான் இப்படியொரு மதிப்பா அவனுக்கு! அவ்வளவு பெரியவனா அவன்!

அவன் வந்திருக்கிறான் என்ற செய்தி எப்படித்தான் புகைந்ததோ, இந்தச் சனங்களுக்கு!

இரண்டு வார்த்தைகள் மனந்திறந்து அவன் பேசவில்லை அவளோடு. ஊரே திரண்டுவிட்டது அவனைத் தேடி.

உறவினர்கள், அயலவர்கள் என்று மாத்திரமா வந்தார்கள்? அந்த முற்றத்தில் கால் வைப்பதற்குக் கூசும் பெரிய மனிதர்கள், ஏறெடுத்தும் பார்க்காத இறுமாப்புப் பிடித்த தலைவந்தர்கள், சமூக ஆதிக்கமுள்ள ஆண்ட பரம்பரையினர், ஆண்கள், பெண்கள், முதியவர்கள், குழந்தைகள் என்னும் பேதமின்றி... அப்பப்பா! வந்து போய்க் கொண்டே இருக்கிறார்கள்.

கடன்பட்டுச் செலவாகும் வெற்றிலையும், தேநீரும் அவர்களுக்கெல்லாம் விருந்தாகின்றன.

அவனுக்கு மிக நெருக்கமானவர்கள் தாங்கள்தான் என்று காட்டிக் கொள்வதில் இந்தப் பெரியவர்களுக்கெல்லாம் இவ்வளவு அவசரமா?

ஆனால் அவன் குடும்பம் சிதைந்து இன்றுள்ள நிலைக்குத் தாழ்ந்து போவதற்குக் காரணமானவன் .... மனதில் வைராக்கியத்துடன் பெற்றவளையும் உடன் பிறந்தவர்களையும் கைவிட்டு அவன் ஓடிப்போவதற்குக் காரணமாக இருக்கின்றவன்......

அந்தக் குடும்பம் எவருமே இந்தப் பக்கம் தலைகாட்டவில்லை.

அவன் வீட்டை விட்டுப் போகும்போது தன் நண்பர்களுக்குச் சொல்லிக் கொண்டுதான் போனான்!

'என்ரை அக்காவைக் கெடுத்து, அந்த அவமானம் தாங்க முடியாமல் கழுத்திலை கயிறு போட்டு அப்பா தூங்கிச் சாகிறத்துக்குக் காரணமாக இருந்தவனை மண்டையிலை போடுறதுதான் திரும்பி வந்து என்ரை முதல் வேலை'

ஊரவர்கள் சிலர் அவர்கள் மீது கொண்ட அநுதாபத்தினால், 'இப்பதானே சுகமாகக் காரியம் முடிக்கலாம். பொடியளுக்குச் சொல்லி, ஆளைப்பிடிச்சு பொடிச் சிக்குக் கட்டிவையுங்கோவன்' என்று தகப்பனுக்கு அப்போதே சொல்லியுமிருக்கிறார்கள்.

'கலியாணம் எண்டது கட்டாயத்திலை நடக்கிற காரியமில்லை. பிழை என்ரை மேளிலுந்தான்' என்று சொல்லிக் கொண்டிருந்தவர், தான் மானஸ்தன் என்பதை நிலைநாட்டிப் போட்டுப் போய்விட்டார்.

தகப்பன் இறந்தது முதல் அவன் உள்ளம் கொதித்துக் கொண்டே இருந்தது.

அவள் சமாதானங்கள் பல சொல்லி அவனைச் சாந்தப்படுத்திக் கொண்டே வந்தாள்.

'மோனை நீ சின்னப்பிள்ளை. பள்ளிக்கூடத்திலை படிக்கிற வயது. படிக்கப்போ எண்டாலும் கொக்காவாலை வெட்கமாக கிடக்கெங்கிறாய். கொப்பா எங்களை நடுத்தெருவிலை விட்டிட்டுப் போனிட்டார். கொக்காள் வாயோடை வயிதோடை இருக்கிறாள். உனக்குக் கீழே அப்பு நாலு குஞ்சு குருமனுகள். அவன்களுக்குப் பணத் திமிரப்பு! நாங்களும் அனுசாரில்லாத நாங்கள்! உனனை அவங்கள் ஏதும் செய்து போடுவான்கள் மோனை!'

இந்தச் சமாதானங்களுக்கெல்லாம் செவிசாய்க்காமல் ஒரு நாள் அக்காவைக் கெடுத்தவனை நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்து விட்டது.

அந்தச் சந்திப்பு அவன் தலையைப் பிளந்தது. இழை போட்ட காயத்துடனேயே வீட்டிலிருந்து ஓடிப்போனான்.

அவன் திரும்பி வந்திருக்கிறான் என்றபோது ஊரில் ஒரே சலசலப்பு.

அக்காவும் இன்றைக்கோ, நாளைக்கோ என்று வயிற்றோடு இருக்கிறாள். இந்தச் சமயம் பார்த்து அவன் வந்து சேர்ந்திருக்கிறான்.

அவன் எடுத்த சபதம் நிறைவேறத்தான் போகிறது. ஊரில் எல்லோரும் மூச்சுவிடாமல் அதை எதிர்பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். இன்று அவனைத் தடுப்பதற்கு யார் இருக்கிறார்கள்? எந்த அதிகாரம், எந்தச் செல்வாக்கு. எந்தப் பணம் இன்று அவனுக்குக் குறுக்கே நிற்க முடியும்?

அவன் உள்ளத்திலும் பழி வாங்கியே தீரவேண்டுமென்ற அந்தரங்கமான வஞ்சந்தீர்க்கும் ஆசை. அந்தநாளை அவள் உள்ளம் ஆவலுடன் எதிர்பார்த்துக் கறுவிக் கொண்டிருக்கிறது.

●

ஆறு தினங்கள் கழிந்து விட்டன, அவன் வீட்டுக்கு வந்து.

அவன் தன் தோழர்களுடன் சேர்ந்து இன்று மாலையில் மீண்டும் இங்கிருந்து போக இருக்கிறான்.

திரும்பி எப்போது மீண்டும் வருவானோ? அல்லது……… !



சந்தா
செலுத்தி
விட்டீர்களா?

மரணத்தையே தாலியாகக் கழுத்திலே கறுத்தக் கயிறாகக் கட்டிக் கொண்டவனல்லவா அவன்!

நேற்றுமுதல் அவன் வீட்டில் தங்கி நிற்க நேரமில்லை. தான் நேரில் சென்று கண்டு சொல்ல வேண்டியவர்களுக்கெல்லாம் பயணம் சொல்லிக்கொண்டு வருகிறான்.

அவன் எங்குபோய் யார் யாரைச் சந்திக்கப் போகிறேன் என்ற விபரங்கள் எல்லாம் அவளிடம் சொல்லிக் கொண்டுதான் வெளியே சென்று வருகிறான்.

ஆனால், இப்போது அவன் போன இடமே அவளுக்குத் தெரியவில்லை.

மாலைப் பொழுது கருகி மறையும் வேளை.

தெருப்படலையில் வந்து நிற்கிறது, அந்த வெள்ளை வான்.

இருவர், அவன் தோழர்களாகத்தான் இருக்க வேணும். சொந்த வீட்டுக்குள் நுழைவது போல உள்ளே உரிமையுடன் வருகிறார்கள்.

அவளும் பிள்ளைகளும் அவர்கள் வந்திருப்பதை அறிந்து முற்றத்துக்கு வருகிறார்கள்.

'அம்மா, சுபாஸ் எங்கே?' வந்தவர்களுள் ஒருவன் கேட்கிறான்.

'சுபாஸா……?' அவளுக்குப் புரியவில்லை.

'உங்கட மகன்……. சாந்தகுமார்'

'குமார்… அவன்…' எங்கே என்று சொல்வது? அவளுக்குந்தான் அது தெரியவில்லையே!

'என்னம்மா, உங்கடை மகன் உங்களுக்குச் சொல்லாமல் வெளியிலே போகமாட்டார். அது எங்களுக்குத் தெரியும்.

நெஞ்சில் அவளுக்கு ஒருபுறம் ஆச்சரியம், மறுபுறம் பெருமையாகவும் இருக்கிறது.

ஆறு மாதங்களுக்கு முன்பு ஒருதடவை சொல்லாமல் போனவன், பிறகு இன்றுதான்.

'எங்கை போயிருப்பான்? எனக்கு இப்ப நம்பிக்கை வந்திட்டுது போனவன் திரும்பி வந்திட்டான். எதுக்காகப் போனவனோ அதை இண்டைக்கு முடிச்சுப் பாட்டுத்தான் போகப் போறான் சபதம் நிறைவேற்றப் போயிருக்கிறான். அதுதான் எனக்குச் சொல்லாமல் போனவன். அவன் வர்த்தறிஞ்சு அவர் தலைமறைவாகிவிட்டார். பொடியன்களுக்கும் ஒளிக்கேலுமே! என்ரை பொம்பிளைப் பிள்ளை இருந்து பெருமூச்சுவிட, அவர் இன்னொரு கலியாணம் கட்டவோ போறார்.

அவள் உள்ளம் உள்ளுக்குள் பேசிக் கொள்ளுகிறது.

'இஞ்சினைதான் தம்பி நிற்பர் வாறன்… நில்லுங்கோ………!'

அவள் தெருவுக்கு வருகிறாள்.

அப்போது அவன் சயிக்கிள், அவள் நிற்கும் திசையை நோக்கி வேகமாக வருகிறது. அவனுக்கு முன்புறம் ஒருவன் சயிக்கிளில் குந்தி இருக்கிறான். மிக வேகமாகப் பறந்து வரும் சயிக்கிள்

அவனைச் சடர்ந்து செல்லும் போதே, சயிக்கிளில் முன்புறம் குந்தி இருக்கின்றவனை அவள் கவனிக்கின்றாள்.

அவள் செய்த முடிவிலே தப்பில்லை,

தலைமறைவாக இருந்து வரும் அந்தக் கயவனைத் தேடிப் பிடித்து அவன் வீட்டுக்கு முன்வைத்தே செய்ய வேண்டியது செய்யப் போகிறான்.

அவளுக்கு நெஞ்சு நிறைந்த வன்மமும், அடுத்த விநாடி நடக்கப் போவது எண்ணிப் படபடப்பும் பதற்றமும் தோன்றுகிறது. ஆனாலும், அவர்களையே வெறியோடு பார்த்துக் கொண்டு நிற்கிறாள்.

நான்கு வீடுகள் தள்ளி அவன் வீட்டுக் கேற்றில் சயிக்கிள் போய்த் தரிக்கிறது. அவனைச் சயிக்கிளிலிருந்து கீழே இறக்குகிறான்.

அவள் விழிகள் தம்மை அறியாமல் பட்டென்று மூடிக் கொள்ளுகின்றன.

செவிகளில் பயங்கரமான ஒரு வெடிச்சத்தம். அதைத் தொடர்ந்து ஒரு மூனகல் ஓசை. கண்களில், தலையிலிருந்து குபு குபு என்று பெருகி ஓடும் குருதி வெள்ளம். தரையிலே சாய்ந்து விழுந்து கால் கைகளை அடித்தடித்து உயிருக்காகத் துடிக்கும் அவலம்.

முதலில் அந்த வெடிச்சத்தம் கேட்க வேண்டுமே!

அவள் விரைந்து விழிகளைத் திறக்கிறாள்.

அவன் சிரித்துப் பேசி, மகிழ்ச்சியோடு விடை பெற்றுக் கொண்டு கேற்றைத் திறந்து போகிறான் உள்ளே.

அவள் விழிகள் தழலாய் எரிகின்றன.

சயிக்கிளை மடக்கித் திருப்பிக் கொண்டு வேகமாக அவள் முன் வந்து நிற்கிறான் மகன்.

அவளுக்கு வாயில் வார்த்தைகள் வரவில்லை. நரம்புகள் புடைத்தது. உடல் நடுங்குகிறது.

'அம்மா!'

பதிலில்லை.

'அம்மா!' மீண்டும் அழைக்கிறான்.

'என்னடா அம்மா!'

'ஏனம்மா கோவிக்கிறாய்?'

'அவனை ..... உன்ரை அக்காவைக் கெடுத்தவனை?'

அவன் பற்கள் நெறு நெறுக்கின்றன.

'அம்மா. அக்காவுக்கு எல்லாம் தெரியும். இண்டைக்கு எத்தினையோ அக்காமார், அம்மாமார், தங்கச்சிமார் தினமும் பலவந்தமாக மானபங்கப் படுத்தப் படுகினம், கற்பழிக்கப் படுகினம், கொலை செய்யப் படுகினம். இதையெல்லாம் செய்து கொண்டு இருக்கிறவன்கள் தானம்மா எங்கடை எதிரிகள். அவன்களைத்தான் அழிக்க வேணுமெண்டு நான் துடிக்கிறன்'

அவன் மிக நிதானமாகச் சொல்லிக் கொண்டு அவளை நெருங்கி ஆதரவாகத் தலையை ஒருதடவை தடவிக் கொடுக்கிறான்.

உள்ளே நின்ற அவன் தோழர்கள் அப்போது தெருவுக்கு வருகிறார்கள்.

அந்த வெள்ளை வான் இரைந்து கொண்டு வீறுடன் விரைந்து செல்கிறது. ●





## அ. செ. மு. வின்
# மனிதமாடு வெளியீட்டு விழா

நெல்லை க. பேரன்

கடந்த மாதம் பிற்பகுதியில் மறுமலர்ச்சி எழுத்தாளர் அ. செ. முருகானந்தன் அவர்களின் 'மனிதமாடு' சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா, நல்லூர் கலாசார மண்டபத்தில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது. யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவை இலக்கியக் குழுவினரின் வெளியீடான இந்நூலின் மகத்தான வெளியீட்டு விழாவுக்கு யாழ் அரச அதிபரும், கலாசார பேரவைத் தலைவருமான திரு. வை. மு. பஞ்சலிங்கம் தலைமை வகித்தார். இவர் தமது தலைமையுரையின்போது 'சுமார் 50 ஆண்டுகளாக எழுதிவரும் ஒரு பழம்பெரும் எழுத்தாளரைக் கௌரவிப்பதையிட்டு நான் உண்மையிலேயே பெருமைப் படுகின்றேன்' என்றார்.

திரு. சி. சரவணபவன் (சிற்பி) வரவேற்புரை நிகழ்த்துகையில், 'மனம் எனும் வயலை எழுத்தாணியால் உழுது, அன்பு நீர் பாய்ச்சி, அழகு. இன்பம் என்ற அறுவடை செய்து எழுதுவதே எழுத்தாளர் பணி. எமது இலக்கியக் குழுத் திட்டத்தில் எதிர்காலத்தில் சி. வைத்தியலிங்கம், அ. ந கந்தசாமி, தி. சம்பந்தன் ஆகியோரது சிறுகதைத் தொகுதிகளையும் எழுத்தாளர் விபரத் தொகுப்பையும் வெளியிடும் நோக்கம் உண்டு' என்றார்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் வாழ்த்துரை வழங்குகையில், 'சிங்கள எழுத்தாளர்கள், கலைஞர்களுக்குக் கிடைக்கும் கௌரவங்கள் எமது எழுத்தாளர்களுக்குக் கிட்டாமல் போவது கவலைக்குரியது. இன்றைய விழா அக்குறையை ஓரளவு போக்குகிறது. மூத்த எழுத்தாளரும், நவீன இலக்கிய முன்னோடியும் சிந்தனைச் செல்வருமான அ. செ. முவின் கதைகளில் சில முற்போக்கு எழுத்தாளர்களுக்குப் பொருந்துவனவாகும்' என்றார்.

வாழ்த்துரை வழங்கிய மறுமலர்ச்சி எழுத்தாளர் வரதர் பேசுகையில், 'இருட்டுக்குள் இருந்த அ. செ. முவை 'மனிதமாடு' வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளது. எழுத்தாளர்கள் மொழியை வளர்க்க வேண்டும். சிதைக்கக் கூடாது' என்றார்.

வெளியீட்டுரை நிகழ்த்திய பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் பேசுகையில், 'யாழ் மாவட்ட மக்களுடைய ஏகோபித்த முடிவாக அ. செ. முவின் இத்தொகுதி வெளியிடப்பட்டது. அளவெட்டிக் கலைப் பாரம்பரியங்களை இக்கதைகளில் அதிகம் காணலாம்' என்றார்.

நூல்களை வழங்கிய இலக்கியக் குழு உறுப்பினர் திரு. டொமினிக் ஜீவா, 'இந்த மண்ணைப் பசளையாக்கி என் போன்றவர்களைப் பேனா பிடிக்க வைத்த அ. செ. மு. அவர்களே!' என்று ஆரம்பித்து முழங்கினார். 'சென்னை அல்லையன்ஸ் கம்பனியால் வெளியிடப்பட்ட கதைக் களஞ்சியத்தில் அ. செ. முவைத் தரிசித்தேன்.

இன்றும் மறுமலர்ச்சிப் பரம்பரை வாழ்கிறது' இந்தத் தொகுதி 40 ஆண்டுகளுக்கு முன்பே வெளியிடப்பட்டிருக்க வேண்டும். உண்மையில் எனது முதலாவது சிறுகதை வெளிவந்த நாளைவிட இன்றுதான் மகிழ்ச்சியடைகிறேன்' என்றார். மூத்த சகோதர எழுத்தாளருக்கு இவர் காட்டிய அன்பும், மரியாதையும் இவரது பேச்சில் உணரக்கூடியதாக இருந்தது.

முதற் பிரதிகளை திரு. டொமினிக் ஜீவாவிடம் இருந்து திரு. நா. பொன்னுத்துரை (நிப்பொன் ரெலிதுட் ரவல்ஸ்), செல்வி வீணா பஞ்சசுரரூபன் (மஞ்சசரன் அன் வெற்றிவேல்) பட்டயக் கணக்காளர் அ. சோமசுந்தரம்பிள்ளை, திரு. து. சீனிவாசகம் (ஈழநாடு), திரு. ஈ. சரவணபவன் (உதயன் — சஞ்சீவி — ஷபிரு இயக்குநர்), திரு. மு சிவராசா (ஆளுநர் நாயகம் முரசொலி), திரு. பூ. ஸ்ரீதரசிங் (பூபாலசிங்கம் புத்தகசாலை) ஆகியோர் பெற்றுக் கொண்டனர். தர்க்சா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அனுப்பிய வாழ்த்துமடலும், காசோலையும் அ செ. மு. விடம் கையளிக்கப்பட்டன.

நாதஸ்வர கலாநிதி, கலாசூரி என். கே. பத்மநாதன் அ. செ. மு. விற்குப் பொற்கிழி வழங்கினார். 'ஈழமுரசு' நிறுவன சார்பில் திரு சண்முகலிங்கம் அ. செ. முவிற்கு ஆளுயர மலர்மாலை அணிவித்துக் கௌரவித்தார்.

ஆய்வுரை நிகழ்த்திய பேராசிரியர் ந. சிவஞானசுந்தரம் (நந்தி) பேசுகையில், 'விமர்சகர்களுக்குச் சமீப காலமாக வரவேற்பு இல்லை எழுத்தாளர்கள் அவர்களைப் பொது சுகாதாரப் பரிசோதகர்களைப் போலப் பார்க்கிறார்கள். அல்லது பொலிஸ்காரர்களாக நினைக்கிறார்கள். 1967 முதல் அ செ மு. என் மனதில் இடம் பெற்றுவிட்டார் இவரது 'மனிதமாடு' எதிர்கால விமர்சகர்களுக்குத் துணை நூலாக இருக்கும்' என்றார்.

திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) விமர்சிக்கையில், 'அளவெட்டிக் கிராமத்தின் சூழல், சவாரி மாடுகள், வண்டில் பிரயாணம், இசை வேளாளர் வாழ்க்கைகள் போன்றவற்றை மிகவும் அழகாக இவரது கதைகள் சொல்கின்றன' என்றார்.

திரு. அ செ. முருகானந்தன் தமது பதிலுரையின் போது தாம் கௌரவிக்கப்பட்டமைக்காக மிகவும் நன்றி தெரிவித்தார்.

யாழ் மாவட்ட கலாசாரப் பேரவைச் செயலாளரும், உதவி அரசாங்க அதிபருமான திரு.ச. பொ. பாலசிங்கம் நன்றி தெரி தெரிவித்துப் பேசினார். கதையிலேயே தமது நன்றியுரையை இவர் தெரிவித்தமை பாராட்டிற்குரிய ஒன்றாகும் இலக்கிய ரீதியாகவும் தகுதிவாய்ந்த ஒருவரே கலாசாரப் பேரவைச் செயலாளரராக இருப்பதை இச்சம்பவம் உணர்த்தியது.

குடாநாட்டில் பலதரப்பட்ட எழுத்தாளர்களும் நேரில் சென்று அ. செ. முவை வாழ்த்தியும் அவரது நூலில் ஒப்பமிடுவித்தும் விடை பெற்றுச் சென்றார்கள். வரதர் கூறியது போல அ. செ. மு. வை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த யாழ் மாவட்ட கலாசாரப் பேரவைக்கும் இலக்கியக்குழு உறுப்பினர்களுக்கும் ஈழத்து இலக்கிய உலகம் நன்றி சொல்ல வேண்டும்.

●



ஒரு சிறந்த ஆக்க இலக்கிய நூல்

# சலதி

— வரதர்

வால்மிகி முனிவர் இராமாயணத்தை வடமொழியில் எழுதினார். அதைத் தமிழில் தந்த கம்பன் தமிழ் வாசகர்களுக்கு ஏற்ற முறையில் அதைப் பக்குவம் செய்து தந்தார்.

இளங்கோ அடிகள் தமிழ் மொழியிலேயே இயற்றிய சிலப்பதிகாரத்தை இன்றைய தமிழ் வாசகர்களுக்காக 'சலதி' என்ற பெயரில் திரு. 'சொக்கன்' தந்திருக்கிறார்.

'சலதி'யைப் படித்து நான் மிகவும் பூரித்துப் போனேன்.

ஆயிரம் சிறுகதைகள் மலரலாம். ஐந்நூறு கவிதைத் தொகுதிகள் வரலாம். ஐந்நூறு குறு நாவல்களும், இருநூறு நாவல்களும் எம்மிடையில் தோன்றலாம்.

ஆனால் இத்தனைக்கும் நடுவே 'சலதி' போன்ற நூல் ஒன்று தான் வெளிவர முடிகிறது. அதையும் இலக்கியச் செல்வர் சொக்கனே தரமுடிகிறது.

பழைய 'கோவலன் மாதவி' கதைதான். அதற்குப் புதிய உருவம் கொடுத்திருக்கிறார் சொக்கன்.

'சலதி' என்று குறிப்பிடப்படுபவள் மாதவியேதான். மாதவியை முக்கிய பாத்திரமாகக் கொண்டு சொக்கனின் கதை செல்கிறது.

'கோவலன், கண்ணகி' கதைகளில் இதுவரை நாம் பார்த்திராத இரண்டு யவனர்கள், யூறிப்பிடிஸ். மினசிலோக்கன் வருகிறார்கள். இந்த இரண்டு பாத்திரங்களும் தேவை நோக்கி மிக அற்புதமாகப் படைக்கப்பட்டு, கதையோடு நன்கு இணைந்து கொண்டன.

இந்த நூலின் அறிமுக விழாவிலே பேசிய ஒருவர், கோவலனை மிகக் கீழ்த்தரமாகப் படைத்திருப்பதாகக் குறிப்பிட்டது நினைவு வருகிறது. நான் படித்து உணர்ந்த வகையில், கோவலன் பாத்திரம் அப்படி ஒன்றும் கீழே இறக்கப்படவில்லை. மாதவியும், கண்ணகியும், யவனர்களும், ஏன் கௌசிகனும் கூட மிக உயர்ந்த இடத்

தில் வைத்துப் போற்றப்படுகிருர்கள்தான். கோவலனுக்கு அப்படி ஒரு உயர்ந்த இடம் கிடைக்காவிட்டாலும், அவன் சாதாரண மான ஒரு நல்ல மனிதனுகவே காணப்படுகிருன்.

'கணிகையர்' என்று ஒரு குலமே படைக்கப்பட்டிருந்த அந்தக் காலத்தில் வாழ்ந்த கோவலனின் நடத்தை மிகக் கீழ்த்தரமான தென்று சொல்லலாகாது. அவனிடம் இரக்கம், ஈகை முதலிய நற் குணங்கள் பல இருந்ததையும் சொக்கன் எடுத்துக் காட்டியுள்ளார்.

யவனக் கலைஞன் மாதவியின் கரங்களைப் பற்றிப் பாராட்டிய போதும், அவனுடைய பாராட்டுக்களையும், பரிசினையும் மாதவி பெரிதாக எடுத்துக் கொண்டபோதும், கோவலனுக்கு ஏற்பட்ட மனக் கொதிப்பு, எந்த ஒரு சராசரி மனிதனுக்கும் அந்தக்காலத் தில் ஏற்படக் கூடியதே.

இது எப்படியிருப்பினும், சொக்கன் தந்துள்ள இந்த 'சலதி' தமிழுக்குக் கிடைத்துள்ள ஒரு அருமையான ஆக்க இலக்கியம்.

கல்லூரியிலும், பல்கலைக் கழகங்களிலும், தமிழ் கற்கும் மாண வர்களும், தமிழை ஆள நினைக்கும் எழுத்தாளர்களும் இந்நூலை அவசியம் படிக்க வேண்டும். தமிழிலே வழக்கொழிந்து கொண்டி ருக்கும் அனேக நல்ல தமிழ்ச் சொற்களை சிறிது சிரமப்பட்டேனும் அறிந்து கொள்ள வேண்டும்.

இந்த நூலை எழுதியமைக்காக 'சொக்கன்' என்ற எழுத்தா ளர் பெரிதாகப் பாராட்டப்பட வேண்டும். ●

---

## மல்லிகைப்பந்தல்

மல்லிகை இதழ்களில் வெளிவந்த ஐம்பதுக்கு மேற்பட்ட கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்தளிக்கும்—

"மல்லிகைக் கவிதைகள்"

முருகையன் முன்னுரையுடன்

தயாராகி வருகின்றது.

தேவையானவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

மற்றும் எமது வெளியீடான அட்டைப்பட ஓவியங்கள், ஆகுதி, என்னில் விழும் நான் ஆகிய புத்தகங்களைப் பெற விரும்புவோர் எம்மை அணுகலாம்.

இம் மூன்று புத்தகங்களின் விலை; ரூபா 54|-

---



# லெனின்கிராடில் திராவிடவியல் ஆராய்ச்சிகள்

ரஷ்யாவில் இந்திய மொழி கள் பற்றிய ஆராய்ச்சி செயின்ட் பீட்டர்ஸ் பர்க் (இன்றைய லெனின் கிராடு) பல்கலைக் கழகத் தில் 9ஆம் நூற்ருண்டின் மத்தி யில் தொடங்கியது. முதலில், மேற்கு ஐரோப்பாவில் செய்த தைப்போலவே, இந்தியா மற்றும் இந்தியக் கலாசாரத்தின் பால், முதன்மையாக பண்டைய மொழி களின்பால் பிரதான கவனம் செலுத்தப்பட்டது. என்ருலும், இந்தியவியல் பற்றிய ரஷ்ய ஆராய்சியின் நிறுவகராக இவான் பாவ்லோவிச் மினயேவ் ('840–1890) வழக்கில் இருந்துவரும் இந்திய மொழிகளை ஆராய வேண்டியதுப் அவசியம் எனச் சுட்டிக் காட்டினர்.

திராவிட மொழிகள் மற்றும் தென்னிந்திய இலக்கியங்கள் மற் றும் கலாசாரத்தின் செல்வங்க ளும் சுயத்தன்மையும் சிறுகச் சிறுக உலகின் ஏனைய பகுதிகளி லும் கவனத்தைக் கவர்ந்தன. அவற்றை ஆராயவேண்டிய அவ சியம் ரஷ்யாவில் 20ஆம் நூற் ருண்டின் தொடக்கத்திலேயே உணரப்பட்டது. தனது 200ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் முகமாக, மனித வர்க்கவியல், மனித இனப் பரப் பியல் காட்சிக் கூடம் (இந்தக் காட்சிக் கூடம் நிறுவப்பட்டது). இந்தியாவுக்கு அனுப்பிய பிரத் தியேக ஆராய்ச்சிப் பயணக் கோஷ்டியின் பிரதான நோக்கங் களில், தென்னிந்திய மனித இனக் குழுக்களை முழுமையாக ஆராய் வதும் ஒன்ருக இருந்தது இந்த ஆராய்ச்சிப் பயணக் கோஷ்டியில் லியூத்மில்லா, அலெக்சாந்தர் மெர்வர்த் ஆகிய இளம் தம்பதி களும் இடம் பெற்றிருந்தனர்.

இவர்கள் முதன்முதலில் விஜயம் செய்த நகரம் சென்னை யாகும். இந்த அறிஞர்கள் இந்தி யாவில் நான்கு ஆண்டுகள் தங்கி, அதன் தெற்கிலும் வடக்கிலும் பயணங்களை மேற்கொண்டு, பல கலாசாரக் கேந்திரங்களுக்கும் சென்று, நகர்ப்புற மற்றும் கிரா மப்புற வாழ்க்கையைக் கவனித் தனர். அவர்கள் தமிழர்கள், மலையாளிகள் மற்றும் பிற திரா விட இன மக்களின் அன்ருட வாழ்க்கை மற்றும் கலைகள் சம் பந்தப்பட்ட பல மரபு வழிவந்த பொருள்கள் உட்பட, சுமார் 5,000 பொருள்களைச் சேகரித் தனர்.

தென்னிந்தியாவில் இந்த ஆராய்ச்சிப் பயணிகள் அங்குள்ள வாழ்க்கை முறை, கலாசாரம், மற்றும் மொழிகளை ஆராய்ந்த னர். அலெக்சாந்தர் மெர்வர்த் (1884—1932) தமிழ் மொழியில் முதல் ரஷ்ய நிபுணராக மாறி ஞர். அவரது முயற்சியின் பய ஞக, தமிழ்மொழி ஆராய்ச்சி பல்கலைக் கழகத் திட்டங்களில் இருபதாம் ஆண்டுகளின் மத்தி யில் இடம்பெற்றது. 1929-ல் அவர் வழக்குத் தமிழ் இலக்கணம் என்ற நூலை வெளியிட்டார்.

இந்நூல் இன்னும் தனது மொழியியல் மதிப்பை இழந்து விடவில்லை. இவர் மணிமேகலை காப்பியத்தையும் ரஷ்யனில் மொழிபெயர்த்தார்.

1930ஆம் ஆண்டுகளில் லெனின் கிராடுப் பல்கலைக் கழகத்தின், இந்திய மொழியியல் பிரிவின் பாடத்தில் வழக்கில் இருந்துவரும் ஹிந்தி, மராத்தி, உருது, வங்காளி ஆகிய மேலும் சில மொழிகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. ஆராயப்பட்டு வந்த மொழிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால் இரண்டாம் உலகப் போரின் விளைவாக, இந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை.

பல ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர், பல்வேறு மொழிகளின் போதனையையும் அடியிலிருந்து தொடங்கவேண்டியிருந்தது. இலக்கியத் தமிழ், பேச்சு வழக்குத் தமிழ் ஆகிய இரண்டின் போதனைக்கும் ஏற்பாடு செய்ததன் மூலம், செம்யோனூதின் லெனின்கிராடில் நிகழ்ந்துவந்த இந்தியவியல் ஆராய்ச்சியின் திராவிட மொழிப் பிரிவில் புதிய உயிரைப் புகுத்தினார். மொழியியல் காட்சியுண்மைகள் மற்றும் நியதிகள் சம்பந்தப்பட்ட அவரது ஆராய்ச்சிக் கட்டுரைகள் சுயமான கருத்துக்களைக் கொண்டவையாக இருப்பது அவற்றின் தனிச்சிறப்பாகும். இதனை 1973-ல் வெளிவந்த அவரது முக்கிய நூலான தமிழ் மொழியின் சொல் வடிவ அமைப்பியல் என்ற நூலில் தெள்ளத்தெளிவாகக் காணலாம்.

லெனின்கிராடில் திராவிட மொழிகளைப் போதிப்பதில் சென்னையைச் சேர்ந்த பேராசிரியை எம். ஆதிலட்சுமியும் (1933—1962) ஒரு முக்கிய பாத்திரத்தை வகித்தார். இவரை லெனின் கிராடுப் பல்கலைக் கழகம் இந்திய மொழியியல் பிரிவில் வந்து பணியாற்றுமாறு ஐம்பதாம் ஆண்டுகளின் இறுதிவாக்கில் அழைத்திருந்தது. இவர் தமிழ் மொழியை போதித்து வந்தார். தெலுங்கிலும் ஒரு பாட வகுப்பைப் புகுத்தினார். பேராசிரியை ஆதிலட்சுமி தமது பட்ட மேற்படிப்பு மாணவர் நிகிதா குரோவை தெலுங்கு மொழியில் பயிற்றுவித்தார்.

பேராசிரியை ஆதிலட்சுமி மிகவும் சுவையான விரிவுரைகளை நிகழ்த்தினார்; அவை லெனின் கிராடுப் பல்கலைக் கழகத்தின் கீழை நாட்டியல் ஆராய்ச்சிப் பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் பலரையும் கவர்ந்தன.

துர்ப்பாக்கியவசமாக, இந்த அருமையான நண்பர்கள் இன்று நம்மிடையே இல்லை. எனினும் அவர்களது உன்னதமான பணிகள் கண்கூடான பயன்களை விளைவித்துள்ளன. அவர்கள் தமது விஷய ஞானத்தை எங்களுக்கு வழங்கியுள்ளனர். அவர்களது நூல்களும் கட்டுரைகளும் எங்கள் வசம் உள்ளன. அவர்களது மாணவர்கள் பல்வேறு துறைகளில் மொழிபெயர்ப்பாளர்களாகவும், ஆசிரியர்களாகவும், வானொலி அறிவிப்பாளர்களாகவும், ஆராய்ச்சி ஊழியர்களாகவும் பணியாற்றி வருகின்றனர். பேராசிரியை ஆதிலட்சுமியின் முன்னாள் பட்ட மேற்படிப்பு மாணவரான நிகிதா குரோவ் இன்று பிரபலமான அறிஞராக விளங்குகிறார். அவர் இந்திய மொழியியல் பிரிவில் தொடர்ந்து தமிழையும் தெலுங்கையும் போதித்து வருகிறார்.



# இரண்டாம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்துள்ள ஆங்கில நாளிதழ் —

# ஹிந்து

— பெரு. கணேசன்

இந்த இருபதாம் நூற்றாண்டில் ஒவ்வொரு மனிதனுக்கும் அரசியல் ஏதோ ஒரு விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதேபோல இன்றைய அரசியல் போக்கை இட்டுச் செல்வதற்கும், மக்களுக்கும், அரசுகளுக்கும் தொடர்புகளை ஏற்படுத்துவதுடன் பலதரப்பட்ட மாற்றங்களையும் விளைவுகளையும் உண்டு பண்ணும் ஊடகமாகப் பத்திரிகைகள் விளங்குகின்றன. சில நாடுகளில் பத்திரிகைத்துறை, அந்நாடுகளின் அரசியலை நிர்ணயிக்கும் சுதந்திர பாராளுமன்றமாகவோ அல்லது செனட்சபை போன்றோ விளங்குவது கண்கூடு.

இந்த நிலையில் எந்நேரமும் அதிக கவனத்தைப் பெறும் நாடளாவிய ரீதியில் மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியிலேயே கருத்துக்களை. செய்திகளை ஆவலுடன் மக்கள் எதிர்பார்க்கின்ற பத்திரிகைகள் சில உள்ளன. சில நாட்டின் அரசியலைப் படம் பிடித்துக் காட்டி உலகுடன் அந்நாட்டு இராசதந்திர அணுகுமுறைகள் எந்தளவுக்கு ஒத்துழைக்கின்றதெனவும் அது போகின்ற, அணுகுகின்ற தவறான திசைகளை இப்பத்திரிகைகள் தீர்க்க தரிசனத்துடன் எடுத்துரைத்து, திருப்பங்களையும் சர்ச்சைகளையும் ஏற்படுத்தி வைக்கின்றன.

எமது நாடு அண்டை நாடான தமிழகத்துடன் பாரம்பரிய கலை, கலாசார, அரசியல், பொருளாதாரத் தொடர்புகளை உடையது. அதேபோல அந்நாட்டுச் சிறப்புகளில் சில எம்மையும் பெருமை கொள்ள வைக்கும் சந்தர்ப்பங்களும் உள்ளன. அந்த வகையில் உலகில் குறிப்பிடத்தக்க பத்திரிகைகளுள் இந்தியாவின் 'ஹிந்து' பத்திரிகையும் ஒன்று என்பதால் பெருமைப்படுகின்றோம்.

எமது துன்ப துயர நிலைகளை உலகுக்கு எடுத்துக்காட்டி எமது தமிழ் மக்களின் அவல நிலையையும், எமது அரசாங்கத்தின் அராஜக நடவடிக்கைகளையும் சற்றும் தயங்காமல் சத்ய வேட்கையுடன் உலகறியச் செய்து வரும் ஹிந்துவின் வரலாற்றை சற்று மேலோட்டமாகவேனும் அறிந்து கொள்வது நமது ஒவ்வொருவருக்கும் களிப்பைத் தரும்.

இந்த ஹிந்துவின் சூடான, உண்மையான செய்திகளும் கருத்துக்களும் நமது நாட்டு அரசியலில் எத்தனையோ சலசலப்புகளை, சர்ச்சைகளை, பயங்களை, கண்டனங்களையெல்லாம் ஏற்படுத்தச் செய்துள்ளது. இதனை சமகாலத்தில் நாம் நிதர்சனமாக உணர்ந்திருக்கின்றோம்.

இந்த நேர்மையான செய்தித்தாள் என்ன சொல்லப் போகின்றதோ என மறுநாள் வரை ஏக்கத்தில் நமது ஆட்சியாளர்கள் கலங்குவதும் உண்மை. இதற்கெல்லாம் காரணம் பத்திரிகை நேர்மை, உலக சமாதானம், தனிமனித சுதந்திரம் போன்ற ஜனநாயக அம்சங்களை வழுவாது கடைப்பிடிக்கும் ஹிந்துவின் பத்திரிகையாசிரியர்கள்தான்.

இந்தப் பத்திரிகையைப் போல நமது நாட்டில், வயது முதிர்ந்த பத்திரிகைகளோ இதே தரத்திலுள்ள பத்திரிகைகளோ இல்லை. ஏனெனில் நமது நாட்டு அரசியலுடன் இவ்வாறான பத்திரிகைகள் நின்றுபிடிக்க மாட்டாது. அதாவது சர்வதேச தரமுள்ள பத்திரிகைகள் தோன்றுவதற்கு நமது நாடு அன்று தொட்டு உசிதமான நிலையைக் கொண்டிருக்கவில்லை. இருப்பினும், ஹிந்துவின் வளர்ச்சி பற்றி அறிவதால் பயனுண்டு. ஏனெனில் ஆங்கிலேயர் இந்தியாவை ஆக்கிரமித்திருந்த காலத்திலேயே ஹிந்து பிறந்தது. இன்று இது தனது நூற்றாண்டு விழாவை திருப்தியோடு கொண்டாடி நடைபயில்கின்றது, இரண்டாவது நூற்றாண்டு விழாவைக் காண.

இந்த ஆங்கிலச் செய்தித்தாளை ஆரம்பித்தவர் அமரர் ஜீ. சுப்பிரமணிய ஐயர் என்னும் பெரியார் ஆவர். அவர் ஓர் தமிழர் என்பதால், தென்னகம் மட்டுமல்ல தமிழ் ஈழமும் பெருமிதம் அடையத்தான் செய்கின்றது. அக்காலத்தில் இது ஒரு வார ஏடாகவே ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு வார வியாழனன்றும் இது வெளிவரத் தொடங்கியது. இதனைச் செய்வதற்கு ஜீ. சுப்பிரமணிய ஐயர் பட்ட கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. வெளியாகும் பத்திரிகை விற்பனையாகுமோ, கடன் தந்த முதலாளிகள் கடன் வசூலிப்புக்கு வந்து விடுவார்களோ என்றெல்லாம் பயம். ஒவ்வொரு இதழிலும் ஆங்கிலேயருக்கு எதிராக தலையங்கம் எழுதி மக்கள் மனதைக் கவர வேண்டும், நல் மதிப்பைப் பெறவேண்டும் என இன்னோரன்ன பிரச்சனைகள் அவருக்கு. இடர்கள் மலைபோல் வந்தாலும் தமது சொந்த வருமானத்தையும் செலவிட்டு பத்திரிகை வெளியிட்டார். இவரது முயற்சிக்கு நண்பர்கள் ஒரு சிலரும் ஊக்கம் கொடுத்தார்கள்.

இப்பத்திரிகையை தோற்றுவிக்க வேண்டுமென ஐயர் அவர்கள் எண்ணுவதற்கு இன்னொரு காரணம், அக்காலத்தில் ஆங்கிலேய ஆட்சியை ஆதரித்து வெளிவந்த 'மதராஸ் டைம்ஸ்', 'மதராஸ் மெயில்' என்பன மக்களை தவறாக வழிநடத்துகின்றன என்ற ஆதங்கம் என்றால் மிகையில்லை.

அக்காலத்தில் திருவல்லிக்கோணியில் இலக்கிய சங்கம் என்ற ஒரு சங்கம் இருந்தது. அது சமகால அரசியலின் நிலை பற்றி விவாதித்து வந்தது. மிகவும் பிரபல்யமானது இச்சங்கம். இச்சங்கத்தின் உறுப்பினர்களுள் முக்கியமானவர் ஜீ சுப்பிரமணிய ஐயர். இந்தச் சங்கம் உருவாகியதால்தான் இந்தப் பத்திரிகை உருவாகியது எனலாம். ஆங்கிலேயரின் ஊதுகுழலான மதராஸ் மெயிலும், மதராஸ் டைம்ஸும் ஹிந்துவுக்கு நேரெதிரானவை.

அச்சமயம் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டசேர் டி. முத்துச்சாமி ஐயர் அவர்கள்தான் முதல் இந்திய நீதிபதி. இதனை எதிர்த்து மேற்படி ஆங்கிலேயரின் செய்தித்



தாள்கள் செய்தி வெளியிட்டன. இந்த எதிர்ப்புக்கு மாற்றுக்குரல் கொடுக்க ஒரு வழியும் இல்லையே என ஏங்கினார் ஜீ. சு. ஐயர் அவர்கள்.

அவர் மட்டுமல்லாது ஐயரின் நண்பர் வீரராகவாச்சாரியார் என்பவருக்கும் இதே கவலைதான். நீதிபதி முத்துசசாமி அவர்கள் ஆங்கிலேய நீதிபதிகட்கு சற்றும் குறைந்த தததியுடையவரல்ல, ஒரு நீதிபதிக்குரிய சகல தகைமையும் உடையவரே என சுதேசிகளுக்கும், உலகிற்கும் எடுத்துக் காட்ட தம்மிடம் ஓர் ஊடகமும் இல்லையே என ஏங்கினார்கள். இதற்கு முற்றுப்புள்ளி வைக்க சுதேசியப் பெயர் ஒலிக்கும் வகையிலேயே 'ஹிந்து' பிறந்தது. நண்பர்களின் கவலையும் தீர்ந்தது. பத்திரிகை உலகின் அந்தப் பொன்னான நாள் 20 – 9 – 1878-ம் வருடம் இதனை ஆரம்பித்த இவர்கள் பச்சையப்பன் கல்லூரியின் ஆசிரியர்கள் (விரிவுரையாளர்கள்) என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை ஆரம்பிக்கும் போது உதவிய மேலும் இரண்டு நண்பர்கள் சிறிது காலத்தில் விலகிக் கொண்டார்கள். இவர்கள் சென்னையில் வழக்குரைஞர்களாக இருந்தார்கள். இலாபமில்லாததே இவர்கள் விலகக் காரணம். ஹிந்து ஒவ்வொரு வியாழனன்றும் ஆசிரியர் ஜீ. சு. ஐயரின் சுதேசிய பிரக்ஞைபூர்வமான தலையங்கங்களுடன் வெளியாகிக் கொண்டிருந்தது. ஹிந்து வெளிவந்தபோது பிரதிகள் மொத்தம் எண்பதே என அறியும் போது வாயில் கைவைக்காமல் இருக்க முடிவதில்லை, இதனைக்கூட அவர்கள் சந்தைப்படுத்தப் பட்ட கஷ்டம் சொல்லற்கரியது. இன்னும் கூறுவதாயின் ஏழ்மை மிகவும் கொடுமை செய்தது. இந்நிலையில் பத்திரிகைக்கென தனியான ஓர் கட்டிடம் உருவாக வாய்ப்பில்லை. இதனால் 'கறுப்பர் டவுன்' என்ற இடத்தில் ஓர் அச்சகத்தில் இதனை அச்சிட்டனர்.

1883ம் ஆண்டு ஹிந்துவுக்கு ஓர் நல்ல ஆண்டு. விற்பனையாகும் தொகை கூடிவிட்டாலும் சுதேசியர்களின் கவனத்தை பெருமளவு கவர்ந்ததைக் காண முடிந்தது. இதேவேளை ஹிந்துவின் காரியாலயம் திருவல்லிக்கேணியிலிருந்து 100, பவுண்ட் ரோட்டிற்கு வந்தது. அதனைத் தொடர்ந்து வாரம் மூன்று இதழை வெளியிட்டுவிட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டு செயற்பட்டார்கள் இந்த அறிஞர்கள். 1883 அக்டோபர் தொடக்கம் இது வெற்றியாக நடைமுறைப் படுத்தப்பட்டது. இத்தருணத்தில் மக்கள் ஹிந்துவை பூரணமாகப் புரிந்து கொண்டார்கள். ஹிந்துவின் சேவை நாட்டுக்குத் தேவை என்ற நிலை உருவாகியது. எங்கு பார்த்தாலும் ஹிந்துவுக்குப் பாராட்டுக்கள், ஹிந்து வெற்றிக் கம்பத்தை அடைந்தே விட்டது. இந்நிலையில் பொது மக்களின் மனம் கவர்ந்த சுதேசிய பற்றுள்ள ஹிந்து, பணக் கஷ்டத்தால் தனக்கென ஒரு காரியாலயம் இல்லாதிருந்ததை உணர்ந்த விஜயநகர மகாராசா, ஹிந்துவின் வாடகைக் கட்டிடத்தைச் சொந்தக் கட்டிடமாக்கிக் கொடுத்தார். இதே போல் கட்டட மேதை எஸ். சுப்பிரமணிய ஐயர் என்னும் ஒருவர் ஹிந்துவுக்குச் சொந்தமாக ஓர் அச்சகத்தை நிறுவிக் கொடுத்தார்.

1889ம் ஆண்டு தனது 11ம் வயதில் ஹிந்து நாளிதழாய் மலர்ந்தது. இந்தியாவின் முக்கிய நகரங்களிலெல்லாம் ஹிந்துவுக்கு நிருபர்கள் நியமிக்கப்பட்

டார்கள். ஹிந்துவின் நிருபர்கள் செயலூக்கத்துடன் உழைக்க அவர்கட்கு வேதனத்தை ஒழுங்காகக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் ஜீ சு. ஐயரிடம் இருந்தது. அதற்கமைய நிருபர்களைப் பராமரித்தார்.

ஜீ. சு. ஒரு சாதாரண பத்திரிகையாசிரியர் மட்டுமல்ல, சிறந்த முற்போக்குக் கருத்துடைய சமூக சீர்திருத்தவாதி. அந்நாளில் இந்தியாவில் கொழுந்து விட்டெரிந்த சமூகக் கொடுமைகளைப் பத்திரிகையால் அடித்து நொருக்கினுர். தீண்டாமை, வரதட்சணை, விதவை மணம் எதிர்ப்பு என்பவற்றை நெருப்பால் கொழுத்துவதுபோல தாக்கினுர். தமது மகளுக்கே விதவாவிவாகம் செய்து வைத்தார், 1885ம் வருடம். இவ்வாருன செயல் வீரர்கள் உண்மையில் எம்மால் மதிக்கப்பட வேண்டியவர்கள். இச்செயல்களால் இந்நல்லறிஞருக்கு சுதேசப்பற்று எவ்வளவுக்கிருந்தது என உணர முடிகிறது. அது மட்டுமல்ல பத்திரிகைத் தர்மத்தைக் கடைப்பிடிக்காது முகஸ்துதிக்காகப் பத்திரிகை வெளியிடுபவர்கள் போன்ருேருக்கு இந்த அறிஞர் ஒரு பாடமாக விளங்குகின்ருர்.

ஜீ. சு. வின் காரசாரமான எழுத்துக்களால் சமூகத்திலுள்ள சில பிற்போக்குவாதிகள் ஹிந்துவை வெறுத்தார்கள். அதனுல் ஹிந்துவின் விற்பனை குறைந்தது அதனைப் பலர் ஐயருக்குச் சுட்டிக் காட்டினுர்கள். இதில் முக்கியமானவர் ஆசிரியரின் நண்பர் வீரராகவாச்சாரியார். இவர் வெளியீட்டு ஆசிரியராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஜீ. சு, வின் நேர்மையான நோக்கில் வெறும் பத்திரிகை விற்று பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணமும் அவருக்கில்லை. சுதந்திர தாகத்தை மக்களுக்கு ஏற்படுத்துவதே நோக்கமாக இருந்த ஐயர், விற்பனை குறைவதைக் கண்டு, தன் கருத்துக்களை, கண்டனங்களை வெளியிட அஞ்சவில்லை. இவர் தமது நண்பர்களுக்கும் மற்றும் அனுதாபிகளுக்கும் பதில் கொடுத்தார். தாம் கொடுமைகளை அராஜகங்களை மக்களுக்கு மறைக்கப் போவ:தில்லை எனருர்.

நாட்டைச் சீர்கெடுக்கும் கும்பலை, சமூகத்தைப் பிளவுபடுத்தும் கிருமிகளை அழிக்க என் பத்திரிகையைப் பயன்படுத்துவேன்’ என ஆவேசமான பதில் கொடுத்தார். பொய்களை எழுதி மக்களை வழிதவற வைப்பதற்கோ, பணம் உழைக்கவோ அவர் விரும்பவில்லை. உக்கிரமான போக்காக இவரது போக்கு இருந்தமையால் வெளியீட்டாசிரியர் வீரராகவாச்சாரியாருடன் கருத்து முரண்பாடு உண்டாகி, ஜீ. சு. ஐயரின் ஹிந்துவிலிருந்து அந்நியமாகின்ருர். அன்னுர் இல்லையேல் இன்று உலகம் போற்றும் ஹிந்து பிறந்திருக்குமா என எண்ணும்போது அவரது பெருமையை உணர முடிகிறது. இந்தப் பெரியரை எண்ணும்போது மகாகவி சுப்பிரமணிய பாரதியாரே நினைவில் வருகிருர். பாரதியார் போன்ற பெரியாரே இவரும் என்பது மறுப்பதற்கு முடியாதது. ஹிந்துவிலிருந்து விலகிய ஐயர் தாம் முன்னரே நடாத்தி வந்த சுதேசமித்திரனுக்கு ஆசிரியராஞர். எனவே அவரது கொள்கை மக்களுக்குத் தங்கு தடையின்றி போய்க் கொண்டுதான் இருந்தது. அதனை எண்ணும்போது ‘வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்’ என்ற மரபுத் தொடர் நமக்கு ஞாபகம் வருகின்றது.



ஹிந்துவுடன் இவர் இருந்த காலத்திலே அரசு பல சுதந்திர வீரர்களைக் கைது செய்தது. இதற்கு எதிராக இவர் எழுதிய எழுத்துக்கள் மெய்சிலிர்க்க வைப்பன. சுதேசமித்திரனிலும் இந்தப் போக்குத் தொடர்ந்தது. இதனுல் ஐயர் அவர்களின் மனவுறுதி மக்களுக்கு நன்கு புலனுகியது. சுமார் இருபது ஆண்டுகள் ஹிந்துவின் ஆசிரியராக இருந்து வளர்த்தார், ஜீ. சு. அவர்கள். ஜீ. சு. பத்திரிகைத் துறையில் மட்டும் இருக்கவில்லை. அரசியல் கட்சிகளையும் உருவாக்கப் பாடுபட்டார். தேசிய இயக்கம், காங்கிரஸ் போன்ற கட்சிகள் உதயமாக இவரும் ஒரு பிரதான காரண கர்த்தாவாக இருந்தார்.

ஹிந்துவின் பொருளாதாரத் துறைக்கு மூலதனமிடத் தனியொருவர் எவரும் முன்வரவில்லை. இதனுல் இதனைக் கம்பனியாக மாற்ற ஆசிரியர்கள் முயன்ருர்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய ஆங்கிலேயர்கள் கம்பனியாக மாற்ற அரசு அனுமதியை வழங்காது ஹிந்துவை அழித்துவிட எண்ணினர். விபத்திலும் வெற்றி பிறக்கும் என்பதுபோல், இந்த நய வஞ்சகச் சூழ்ச்சியை அறிந்த கஸ்தூரிரங்க ஐயங்கார் என்னும் வழக்குரைஞர் இதனைச் சொந்தமாக்க முடிவு செய்தார். இவர் தமது இந்த எண்ணத்தை அறிஞர்கள் சபையொன்றில் வெளியிட்டார். இதற்குப் பெரும் ஆதரவும் கிடைத்தது. எனவே காலக்கிரமத்தில் கஸ்தூரிரங்க ஐயங்கார் ஹிந்துவை சொந்தமாக்கிக் கொண்டார்.

1905ம் வருடம் ஹிந்து ஒரு பணக்காரக் குடும்பத்திற்குச் சொந்தமாகியது. நலிவு மெலிவுகள் எடுபட்டு ஹிந்து செழித்து வளர உதவினுர், கஸ்தூரி ஐயங்கார். அவரே இதன் ஆசிரியருமானுர்.

இதுவரை காலமும் ஒரு சதமேனும் இலாபத்தை ஈட்டாத ஹிந்து, கஸ்தூரிரங்க ஐயங்காரிடம் மாறியவுடன் சிறிது லாபத்தைக் கண்ட நிறுவனமாகி விட்டது. இவர் பதினெட்டு ஆண்டுகள் ஆசிரியராய் இருந்தார். எனினும் பதினேழாயிரம் பிரதிகளுக்கு மேல் விற்பனையை அடையவில்லை. எனினும் ஹிந்துவின் செய்தியென்ருல் அது உண்மை என்கின்ற நிலையை மக்கள் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த நம்பிக்கையை ஏற்படுத்தியவர் கஸ்தூரிரங்க ஐயங்கார் அவர்களே. இவரது சேவையும், இலாபமும் சமபங்கை அடைந்தன. வாசிப்பவன் திருப்தியடைவதுடன் உழைப்பவனும் திருப்தியுடன் உழைக்கச் செய்தார் கஸ்தூரிரங்க ஐயங்கார். இவருக்குப்பின் இவரது மருமகன் எஸ். ரங்கச்சாமி என்பவர் ஆசிரியரானுர். இவர் காந்தியின் கொள்கைகளை ஹிந்துவில் பரப்பி வந்தார். இதன் பின் ஆறு ஆண்டுகள் ஏ. ரங்கசாமி என்பவர் ஆசிரியரானுர். இவர் சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் ஆசிரியராக இருந்து தொண்டாற்றினுர். இந்த நீண்ட காலகட்டத்தில் ஹிந்து வெளியூர்களிலும் தன் கிளைகளை ஓச்சி வேர்களையும் நீட்டிக் கொண்டது. இவர் ஓர் தூய்மையான தேசியவாதி எனக் கூறப்படுகின்ருர். இந்த வேளையிலேயே ஹிந்து உலக தரத்திலுள்ள பத்திரிகை உலகில் தன் பெயரையும் புகுத்திக் கொண்டது. இன்றுவரை ஹிந்து அசைக்க முடியாத உலகதரம் வாய்ந்த இந்தியாவின் ஆங்கில நாளேடாகப் பெருமை சேர்க்கின்றது,

இவ்வாறு நோக்குமிடத்து ஹிந்துவுக்குக் கிடைத்த ஆசிரியர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் குறைந்தவர்கள் அல்லர். அதேபோல திடமான ஒரு கொள்கையை ஹிந்து தொடர்ச்சியாகத் தன்னுள் வளர்த்துக் கொள்ள இந்த ஆசிரியர்கள் நம்பிக்கையோடு செயலாற்றி இருக்கின்றார்கள். அதாவது ஆரம்பம் தொட்டு இன்றுவரை இவர்கள் அனைவரும் ஏதோவொரு இறுக்கமான கொள்கையை உடையவர்கள் என உணர முடிகின்றது. இதற்கு வித்திட்டவர் ஜீ. சு. ஐயர் என்பது உறுதியாகக் குறிப்பிடத்தக்கது.

இவ்வளவு இருந்தும் இப்பத்திரிகை விளம்பரதாரர்கட்கு மதிப்பளித்து, தனது மூலதனத்தைக் காத்து வந்தது. இக்கால கட்டத்தில் முதல் பக்கத்தில் வெறும் விளம்பரங்களே வெளியாகின. ஹிந்துவின் ஆசிரியராக வந்த கே. சீனிவாசனின் காலத்தில் மகாத்மா காந்தி கொலை செய்யப்பட்ட செய்தி கூட ஹிந்துவில் இரண்டாம் பக்கத்தில் வெளியாகியது என்றால் விளம்பரங்களுக்கிருந்த முக்கியத்துவம் எத்தகையது என உணர முடிகிறது. எனினும் 195 ல் சீனிவாசன் விளம்பரங்களை முதல் பக்கத்தில் வெளியிடும் நிலையை மாற்றி, முக்கியமான செய்திகளையே முதல் பக்கத்தில் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தினார்.

இதன் பின்னர் நிருவாக திறமை மிக்கவராக ஜீ. நரசிம்மன் என்பவர் ஆசிரியரானார். 1959ம் வருடம் இவரது பொறுப்பில் வந்த ஹிந்து உடனுக்குடன் செய்தி ஏந்தி உலகமெல்லாம் போக வேண்டுமென ஆசைப்பட்டார். இவரது காலத்தில் நிறுவனம் மிகுந்த லாபத்தை ஏற்படுத்திக் கொண்டது. தனக்குள்ள குறைகளை வருமானத்தால் சரி செய்து கொண்டது, ஹிந்து. இந்நிலையிலே ஹிந்துவுக்குச் செந்தமான விமானம் தேவைப்பட்டது. எனவே ஆசிரியர் நரசிம்மன் தனது விருந்பத்தை நிறைவேற்றத் துணிப்தார். 1962-ம் ஆண்டு ஹிந்து விமானத்தில் ஏறி உலகம் பூராவும் பரவியது. இச்செயலுக்கு நரசிம்மன் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர். ஆசிரியர் நரசிம்மன் காலத்திலே ஹிந்துவுக்கு நான்கு விமானங்கள் சொந்தமாகின. இவரது காலத்துக்குப் பின்னர், எஸ். பார்த்தசாரதி என்பவர் ஆசிரியர் ஆனார். இவர் ஹிந்துவின் ஆரம்பகர்த்தாவான ஜீ. சுப்பிரமணிய ஐயர் போன்று ஆணித்தரமாகவும், துணிச்சலுடனும், தீர்க்கதரிசனத்துடனும் தலையங்கங்களை வெளியிட்ட ஆசிரியர் எனலாம். இவ்வாறு ஹிந்துவின் ஆசிரியர்கள் திறமை சாலிகளாக இருந்து வருகின்றார்கள்.

ஹிந்துவின் நாளாந்த விற்பனை இன்று பத்துலட்சத்துக்கும் அதிக பிரதிகளாகும். விமானத்தைவிட சுலபமாக உள்ளூரின் பிரதான நகருக்குள் விநியோகிக்கும் ஒரு முறை தற்போது நடைமுறையிலுள்ளது. சென்னையில் அச்சிடும் பிரதியை, அந்நேரம் பெங்களூர், ஹைதராபாத், கோயம்புத்தூர், மதுரை போன்ற நகரங்களிலும் அச்சடிக்கும் புதிய தொழில் நுட்ப முறையே அது (ஃபேசிமிலி) இதனால் பத்திரிகையை விமானத்தில் ஏற்றி மேற்படி நகரங்களுக்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை. சென்னையில் வெளியாகும் செய்தி உள்ளூர் நகரங்களில் (பிரதான) உடனே வெளியாகி வருகின்றது. இத்துடன்



அந்நகரப் பிராந்தியச் செய்திகள் வேறாக அச்சிடப்பட்டு இணைக்கப்படுகின்றன.

1965ல் இருந்து பிரதான ஆசிரியராக இருக்கும் கே. சீனிவாசனின் பெருமகன் ஜீ. கஸ்தூரி அவர்கள். ஹிந்துவின் நூற்றாண்டுப் பெருவிழாவைக் கொண்டாடிய ஆசிரியர் என்ற பெருமையைப் பெற்றார். ஒரு தேசில செய்தித்தாள் இத்தகு மகத்தான சாதனை செய்து பெருமை தேடிவிட்டது. தமிழ் நாட்டுக்கு விசேட பெருமைதான். கஸ்தூரி ரங்க ஐயங்காரின் காலத்தில் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் கொண்டு வந்த செய்தித் தணிக்கைக்கு இவர் இடம் கொடுக்காது உண்மைகளை மறைக்காது வெளியிட்டுச் சாதனை செய்தார் எனலாம்.

1978ம் ஆண்டு ஹிந்துவின் நூற்றாண்டு விழா சென்னை சர்வகலாசாலை மண்டபத்தில் பாரத ஜனாதிபதியின் தலைமையில் கொண்டாடப்பட்டது என்றால் ஹிந்துவுக்கும் இந்திய அரசியலுக்குமுள்ள நெருக்கம் எத்தகையது என உணர முடிகின்றது. இதனை நினைக்கையில் ஒருபுறம் பெருமையும் மறுபுறம் நமது நாட்டில் தமிழர்கள் ஏன் அப்படியொரு சரித்திரம் படைக்கும் பத்திரிகையொன்றை உருவாக்கத் தவறினார்கள் எனக் கவலைப்படுகின்றோம். இப்போதுள்ள நம் நாட்டுச் செய்தித்தாழ்கள் இதுபோல ஒரு வரலாற்றைப் படைக்குமாவென எண்ணுகின்றோம். செய்தித் தாழ்கள் என்ன ஓர் இலக்கிய, ஒரு ஏதுவானாலும் இவ்வாறான சரித்திரத்தைப் படைத்து விட்டாலே போதும்.

இவ்வாறான சாதனைகள் படைப்பதற்கு இலட்சியம், நேர்மை, அஞ்சாமை, உண்மை, பொறுமையற்ற போட்டி என்பன அடிப்படைக் காரணங்கள் என்றால் மிகையில்லை.


**மல்லிகை**

**86-ம் ஆண்டுத் தொகுப்பு**

86-ம் ஆண்டுக்கான தொகுப்பாக மல்லிகை தொகுக்கப்பட்டுள்ளது. நூல் நிலையங்கள், ஆராய்ச்சி மாணவர்கள், பல்கலைக் கழகங்கள் இதைக் கவனத்தில் எடுத்து எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

**தொகுப்பின் விலை**

**ரூபா 60/-**


நமது இன்னல்களையெல்லாம் உலகறியச் செய்துவரும் ஹிந்துவுக்கு நன்றி கூற வேண்டியது நமது கடன். அத்துடன் ஹிந்து பல நூற்றாண்டு விழாக்களைக் காணவேண்டும். ஏனைய உலகப் பத்திரிகைகளுக்கு இது ஓர் வழிகாட்டியாய் அமைய வேண்டும் என ஆசைப்படுவதுடன் ஹிந்துவின் எடுத்துக்காட்டான நடவடிக்கைகளை சந்தர்ப்பத்திற்கு தக்கவாறு நம்நாட்டு நாளிதழ்களும் பின்பற்ற வேண்டுமென எண்ணுகிறோம். பல ஆயிரம் ஆண்டுகள் வாழ ஹிந்துவுக்கு வாழ்த்துக்கள்.

ஆமாம் நாம் செலுத்தும் புகழுரைகளும் நன்றிகளும் ஹிந்துவுக்கென்றால் அது ஹிந்துவைப் பெற்று வளர்த்த ஆரம்ப காலப் பெருந்தகைகளுக்கே.

# காட்டுத் தீயால் கருகிய குருவி

— மு. சடாட்சரம்

மூங்கில், புளியை, முதிரை, நிழல்வாகை,
தீங்கனிப் பாலை, திசையெல்லாம் முட்செடிகள்,
சேர்ந்தடர்ந்த காட்டில் சிறுபறவைக் கூட்டமாய்
வாழ்ந்து வருகின்றோம் வழமைப் பிரகாரம்
தாய்தந்தை முன்னோரும், தங்கி நெடுங்காலம்
வாயில்லாச் சீவனென வாழ்ந்துவந்தோம் இவ்விடத்தில்!

கல்லும் உருகிக் கரையும் வெயிற்போரில்;
நெஞ்சம் கருகி நெழிந்து கிடக்கையிலே.........

காட்டுத்தீ வைக்கும் கலைதேர்ந்த மேதைகளே;
கூட்டுக்குள் கத்துமெங்கள் குஞ்சுக் கிரைதேடி
தூரப் பறந்த துணைவன் உணவோடு
கூடு வரும்முன்னே கொல்லும் நெருப்பள்ளிப்
போடுவீர் என்று புரியவில்லை நீர்வைத்த
காட்டுத்தீ எம்மைக் கதிகலக்கி ஓர்நொடியில்
கூட்டைத் துறந்து குடல்நடுங்கப் பண்ணிற்றே!

கச்சான்காற் றோடு கனவேக மாயெழுந்து
உச்சமாய்ப் பொங்கி உலைவைத்திற் றெம்வாழ்வை!
தத்திப் படர்ந்து தடதடெனப் பாய்ந்ததீ
மிச்சமெதும் இன்றி மிகநாசம் செய்திற்றே!
என்ன சுகத்தை இதயத்தில் கண்டீரோ?

பன்நாளாய் எங்களது பல்லால் கடித்திழுத்து
செய்த கூடெல்லாம் சிறுநொடியில் சாம்பராய்
ஆக்கு வதற்கா அறிவை வளர்த்தீர்கள்........?

மண்டை கிழிந்து மயானப் பெருவெளியாய்
பூமி கிடக்கப் புளகம் உறுவதற்கா
சிந்தனைச் செல்வம் சிறப்பாகச் சேர்த்தீர்கள்... ...?
விந்தை எனக்கின்னும் விளங்க முடியவில்லை?

மாரிக் கெனச்சேர்த்த மாணிக்க நெல்மணிகள்
கூதலுக் கென்றுவைத்த குச்சிவகை கொஞ்சமுமே,
ஆருக்கு மின்றி அநியாய மாயிற்றே?

என்துணையும் குஞ்சுகளும் எங்குபோய்ச் சேர்ந்தாரோ?
பொங்கிப் புகைமயமாய்ப் பூத்த சுவாலைக்குள்,



வெந்து மடிந்தாரோ வெறியாளர் கையாலே;
சுட்டுப் பொசுக்கிச் சுடலைக்குள் தின்றாரோ?
தீனூட்ட ஆளின்றி தேன்குஞ்சும் செத்திற்றோ?
வானுலகு போனாரோ வாயில்லாச் சீவன்கள்?

எங்களுக்கு நீதி எவருள்ளார் கேட்கவென்று
பங்கப் படுத்திப் பதைபதைக்கக் கொன்றாரோ?
நாலைந்து நாளாக நானுணவு கொள்ளாமல்
மூலையிலே குந்தி முகம்சோர்ந்து வாடுகிறேன்!

இந்த நிலையை எமக்குக் கொடுத்தாரை
சந்திக்கப் போகேன் சகவாசமும் கொள்ளேன்!
வெந்து மனம் புண்ணாய் வேகும்போ தென்றும்
விருந்தும் விளையாட்டும் வேண்டாதென் உள்ளம்!
துரும்பெடுத்துத் தூணாய்த் தொடுத்தமைத் தங்கே
குடிபுக வேண்டும்! குருவிகளைத் தேடி
இடம் பிடிக்க வேண்டும் இனி!

---

# காற்றில் இருந்து புரோட்டீன்கள்

புரோட்டீன் பிரச்சனை இன்று அனைவரையுமே கவலைக்குள்ளாக்கி வருகிறது. ஆனால் நியூகினியாவைச் சேர்ந்த பாபுவா மக்களுக்கு மட்டும் இது ஒரு பிரச்சனையாகவே இல்லை.

எந்த அளவு இயல்பாக நாம் புரோட்டீனை இழக்கிறோமோ அந்த அளவு புரோட்டீனை நாம் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என இதுவரை கருதப்பட்டு வந்தது.

ஆனால் நியூகினியா மக்கள் 20—30 கிராம் புரோட்டீனையே உணவில் சேர்த்துக்கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் இதைக்காட்டிலும் 1·5 மடங்கு புரோட்டீனை உடல் இயக்கத்துக்குச் செலவிடுகிறார்கள். அப்படியானால், மீதியுள்ள புரோடீனை அவர்கள் காற்றிலிருந்தா பெறுகிறார்கள்? ஆம், காற்றில் இருந்துதான் பெறுகிறார்கள்.

பெரும்பாலும் அவர்கள் சர்க்கரை வள்ளிக் கிழங்கையே உணவாக உட்கொள்ளுகிறார்கள். இதில் சர்க்கரையும், ஸ்டார்ச்சும் இருக்கிறது. ஆனால் புரோடீன் இதில் மிகக் குறைவு. இதனால் நிர்ப்பந்திக்கப்பட்ட இரைப்பையில் உள்ள பாக்டீரியாக்கள், காற்றில் உள்ள நைட்ரஜனைப் பயன்படுத்தி புரோட்டீனைத் தயாரிக்கின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காற்றில் இருந்து இலவசமாக புரோட்டீனைப் பெறலாம் என்பதைக் கேட்க ஆச்சரியமாக இருக்கிறது. புரோட்டீன் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு விஞ்ஞானத்தின் முன்பு பாதை ஒன்று தெரிகிறது.

# 'எயிட்ஸ் நோய்' போர்க் களமா?

எயிட்ஸ் வைரஸ் உயிரியல் போர் முறை பற்றிய ஆராய்ச்சியின் விளைவாக உருவாக்கப்பட்டதே என பலமுறை கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்தையே அண்மையில் மூன்று விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். அமெரிக்க விஞ்ஞானி ராபர்ட் ஸ்ட்ரெக்கர், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசைச் சேர்ந்த விஞ்ஞானி ஜேகப் செகல், பிரிட்டிஷ் விஞ்ஞானி ஜான் சீல் ஆகிய மூவரும் எயிட்ஸ் வைரஸ் பரிசோதனைச் சாலையில் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றே என்ற முடிவுக்குத் தனித்தனியே வந்துள்ளனர். இம் மூவரில் ஜான் சீல், எயிட்ஸ் நோய் ஆராய்ச்சியில் தலை சிறந்த நிபுணர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு பிரதேசத்தை மட்டும் பாதிக்கும் நோயாக இல்லாமல் உலகம் முழுவதையுமே பாதிக்கக்கூடிய பயங்கர நோயாக எயிட்ஸ் இருக்கிறது. அடுத்த 20-30 ஆண்டுகளில் உலக மக்கள் தொகையில் சரிபாதியை கொல்லக்கூடிய கொடிய நோய் இது.

இந்த வைரஸ் செயற்கை முறையிலேயே உருவாக்கப்பட்டிருக்கவேண்டும், இந்த வைரஸ் தவறுதலாக சோதனைச் சாலையிலிருந்து தப்பி வந்து விட்டதா அல்லது வேண்டுமென்றே பரப்பப்பட்டதா என்பது இன்னும் தெரியவில்லை. 1967-ல் வைரஸ் இயல் சோதனைச்சாலையில் இருந்து தப்பிய வைரஸ்களின் காரணமாக 'பார்பர்க்' எனப்படும் கொள்ளை நோய் பரவிய உதாரணம் இருக்கிறது.

அமெரிக்காவின் ஃபோர்ட் டெட்ரிக் சோதனைச் சாலையில், உயிரியல் யுத்தப் பரிசோதனைக்காக உருவாக்கப்பட்ட வைரஸ் தான் எயிட்ஸ் வைரஸ் என ஜிடிஆர் விஞ்ஞானி ஜேகப் செகல் கூறுகிறார். இந்த வைரஸ் மனித உடலைத் தாக்கி உடலின் பாதிப்பு இன்மை அமைப்பையே சீர்கெடச் செய்து மரணத்தைத் தோற்றுவிக்கிறது. ●

## மல்லிகை

**1987-ம் ஆண்டுச் சந்தா**

1987-ம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து புதிய சந்தா விபரம் பின் வருமாறு:

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | ரூபா | 3-50 |
| ஆண்டு சந்தா | ரூபா | 50-00 |

(தபாற் செலவு உட்பட)

தனிப்பிரதிகள் பெற விரும்புவோர் தகுந்த தபாற் தலைகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

**மல்லிகை**
234 B, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



# வாயு மண்டலத்தில் 'ஓசோன்' குறைவது எதனால்?

பூமியைச் சுற்றி வாயு மண்டலத்தில் மெல்லிய 'ஓசோன்' படலம் உள்ளது, சூரியக் கதிரியக்கத்தில் இருந்து பூமியில் உள்ள அனைத்தையும் பாதுகாப்பது இந்த ஓசேன் படலமே.

இப்போது இந்த மெல்லிய ஓசேன் படலம் மேலும் மேலும் மெல்லியதாகி மாறி வருகிறது. சில இடங்களில் ஓசேன் படலத்தில் 'இடைவெளியும்' ஏற்பட்டுள்ளது. தென் துருவத்துக்கு மேலே இத்தகைய 'இடைவெளி' ஒன்று தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஓசேன் படலத்துக்குச் சேதம் ஏற்படுவதால், நோய்கள் அதிகரித்தல், வெப்பநிலை உயர்தல், கரையோரப் பிரதேசங்களில் வெள்ளம் ஏற்படுதல், விவசாய உற்பத்தி பூகோளத்தில் மாறுதல்கள் போன்ற அபாயகரமான விளைவுகள் ஏற்படக்கூடும்.

ஓசேன் படலம் மெலிந்து வருவதற்கு விண்வெளிப் பயணங்கள் காரணம் எனச் சொல்லப்படுகிறது. ஆனால், விண்கலத்தை செலுத்தும் ராக்கெட்டுகள் இந்த ஓசேன் படலத்தைக் கிழித்துச் செல்வது ஓரிரு விநாடிகளில் சேர்ந்து விடுவதால் அதில் சிறு பகுதியே பாதிக்கப்படுகிறது. இதைக்காட்டிலும் சூப்பர்சானிக் விமானங்களே அதற்கு அதிகம் தீங்கு விளைவிக்கிறது. மேலும் எரிமலைக் கழிவுகள், தொழில்துறைக் கழிவுகளால் ஏற்படும் தூசி, உலோக மற்றும் மண் துகள்கள், வீட்டு உபயோகத்துக்கும் தொழிற்சாலைகளுக்கும் பயன்படுத்தப்படும் எரிவாயு ஆகியவற்றால் ஓசோன் படலம் பாதிக்கப்படுகிறது. எனவே வாயு மண்டலம் மாசடைவதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என சோவியத் விஞ்ஞானிகள் வலியுறுத்துகிறார்கள். ●

## சூரிய சமிக்ஞை

பகல் பன்னிரண்டு மணி,
வெகுஉக்கிர மாய்
பூமாவை புணர்கிறான்
சூர்ய ராஜன்.
ஆசை யாலோ?

ஆவேசத் தாலோ?
இல்லை —
மானுட இருப்பிற்கு
அர்த்தம் ஜனிக்கவோ?...

எப்படியோ —
'பழையன கழித்து
புதியன புகுத்த'லென்ற
வாய்பாட்டு மொழியல்ல;
சூரியனின்
சமிக்ஞை மொழி!

பழையன
பரிணாமம் பெறட்டும்;
புதியன 'கருக்கூட்டல்'
அடையட்டும்.

இதுதான்;
உச்சிப் பொழுது
புணர்ச்சியின் வீச்சு.

ஆம் ...
நவீனத்தின் அருட்டலும்
தேடலுமே மானுடத் தேவை.

—நவாஷ் ஏ. ஹமீட்



இளம் இலக்கிய நெஞ்சங்களுக்கு ஒரு வார்த்தை நேரிலும் கடித மூலமும் இலக்கியம் சம்பந்தப்பட்ட பல கேள்விகள் கேட்கிறீர்கள் அதை விடுத்து பலரும் அறியத் தக்கதாக — எனக்கும் புதிய அறிவு பெறக் கூடியதாக — கேள்விகளை எழுதி அனுப்புங்கள். பரஸ்பரம் கலந்துரையாடும் ஓர் இலக்கியக் களமாக இப் பகுதியைப் பயன் படுத்துவதால் பல தகவல்களை நாம் பெற்றுக் கொள்ள இயலும்.

# தூண்டில்

● இப்போதுகூட, பரீட்சையில் தோல்வி கண்டதற்காகத் தற்கொலை செய்யும் இளைஞர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

மு. பொன்னம்பலம்

வல்வெட்டித்துறை.

எப்பொழுதுமே தற்கொலை செய்பவர்களை நான் மதிப்பதில்லை. அப்படியாகத் தமது உயிரை வலுக்கட்டாயமாகப் போக்குபவர்களின் இறுதிச் சடங்குகளிலும் நான் பங்கு கொள்வதில்லை. இளைஞர்கள் எதையாவது சமுதாயத்திற்கு — தாம் பிறந்த மண்ணுக்குச் — சாதிக்க வேண்டும். கோழைகளைப் போல, உயிரைப் போக்கித் தப்பித்துக்கொள்ள முனைவது பேடித்தனம். பல அற்புதமான இளைஞர்களை எனக்குத் தெரியும். அவர்களது சாதனைகளைக் கேட்டு நான் பிரமித்துப் போயிருக்கிறேன். எனவே வாழ்வுக்கு நேருக்கு நேர் நின்று முகம் கொடுக்காதவர்களைப்பற்றி இங்கு கவலைப்படத் தேவையில்லை.

● இலங்கையின் பிரச்சினை தமிழ் நாட்டு எழுத்தாளர்களின் சிறுகதை, நாவல்களில் பிரதிபலித்துள்ளதா?

செ. லக்ஷ்மணராஜ்

வல்வெட்டித்துறை.

பல எழுத்தாளர்கள் பிரச்சினையின் மூலம் ஒன்றைப் புரிந்து வைத்துள்ளனர். பலர் அநுதாபப் படுகின்றனர். வேறு சிலர் சிந்திக்கின்றனர். மாலன் போன்ற ஒரு சிலர் சிறுகதைகளில் நமது பிரச்சினை பற்றிச் சொல்ல முயன்றுள்ளனர். இருந்த போதிலும் முழுமையான தாக்கம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஒருவேளை அப்படியான ஆக்கங்கள் எனக்குக் கிடைக்கப் பெறாமல் இருந்திருக்கலாம்.



● இலக்கியக் கூட்டங்களுக்கு அழைத்தால் வருவீர்களா?

மட்டுவில், சி. சதாசிவம்

இப்பொழுது நான் காற்றுடன் சண்டை போடுவதைக் குறைத்துக் கொண்டுள்ளேன். நிறைய வேலை உண்டு. ஆக்கபூர்வமான திட்டங்களைச் செயல் படுத்த முனைந்து காரியமாற்றுகின்றேன். முன்னர் மல்லிகை மாத்திரமே எனது பெரும் பொழுதை விழுங்கியது. இன்று மல்லிகைப் பந்தல் நிறுவனம் கிளை விட்டுப் படரப் பார்க்கின்றது. அதற்கு எனது உழைப்பு நிர் அவசியந் தேவை. எனவே அத்தியாவசியத் தேவை என்றால் தவிர மற்றும் கூட்டங்களில் கலந்து கொள்வதை மட்டுப்படுத்திக் கொண்டுள்ளேன்.

● உங்களது மனதைத் தொட்ட சம்பவம் ஒன்றைப் பற்றிக் கூற முடியுமா?

தையிட்டி, அ. ஜெகதீசன்

கடந்த மாதம் 7-ந் திகதி, சாயங்காலம் 6-30 வரை அலுவலகத்தில் நண்பர்களுடன் கதைத்துக்கொண்டிருந்துவிட்டு வெளிக்கிட்டுப் போனேன். வீடு போய்ச் சேர்ந்திருக்க மாட்டேன். நேரம் 6-40 இருக்கும். யாழ். கோட்டையில் இருந்து பஜாரை நோக்கிச் சரமாரியாக ஷெல் குண்டுகள் ஏவப்படும் சத்தம் கேட்டது. பின்னர் வின்ஸர் தியேட்டரடியில் பொது சனங்கள் கூண்டோடு செத்துக் கிடக்கிறார்களாம் என்ற தகவல் கிடைத்தது, வந்து பார்த்தால் 16 பேரின் உடல்கள் சிதறிச் சின்னாபின்னமாகக் காட்சியளித்தன. பலர் காயத்துக்குள்ளாகி அவலப்பட்டுக் கொண்டிருந்தனர். என் வாழ்க்கையிலேயே இப்படியொரு அவலக் காட்சியை இது வரை கண்டதில்லை. மல்லிகைக் காரியாலயத்திலிருந்து 40 யார் தூரத்தில்தான் இந்தச் சம்பவம் நடந்தது. (மல்லிகைச் சுவைஞர்கள் இதை மனசில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். எத்தகைய பயங்கரச் சூழ்நிலையில் இருந்து மல்லிகை வெளிவருகின்றது என்பதை அவர்கள் நெஞ்சார உணர்வது நல்லது) காலையில் நான் அலுவலகம். வரும்போது கவனிப்பேன், 16 பேர் இறந்த அந்த இடத்தில் ஒவ்வொரு நாளும் ஒரு புத்தம் புதுச் சிவப்பு பூ ஒன்று காட்சி தரும். இதைக் கவனிக்கும்போது என் நெஞ்சில் ஒரு மூலையில் இரத்தம் கசியும்.

● சில எழுத்தாளர்கள் சகோதர எழுத்தாளர்கள்மீது அபாண்டமாகக் கதை கட்டுகின்றரே, இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

சுன்னாகம், ப. தவசோதி

கையாலாகாத முன்னைநாள் எழுத்தாளர்கள்தான் இப்படிக் கதையடிப்பவர்கள். இவர்களைப் பற்றி நீங்கள் எந்தவிதமான அக்கறையும் காட்டத் தேவையில்லை. இப்படிக் கதைத்தாவது தாங்கள் இலக்கிய உலகில் இருப்பதைக் காட்ட முனைகின்றவர்கள் இவர்கள். இவர்களைப்பற்றிப் பேசாமல் விடுவதே இவர்களுக்கு நாம் கொடுக்கும் இறுதி மரியாதை யாகும்.

● பல புதிய புத்தகங்கள் சுடச் சுட வெளிவருவதாகப் பத்திரிகைகளில் படிக்கின்றேன். இவைகள் அத்தனையையும் பெற முடியவில்லை. எல்லாவற்றையும் ஒருங்கு சேரப் பெறுவதற்கு எந்த ஸ்தாபனத்தை நாடவேண்டும்.?

பசறை, அ. அருள்நேசன்

ஈழத்தில் வெளிவரும் சகல நூல்களையும் ஒருங்குசேரப் பெறக் கூடிய ஒரே நிலையம் இன்று இல்லை. அப்படியான ஸ்தாபனம் கூடிய சீக்கிரம் உருவாகும் என நம்புகின்றேன். இப்பொழுது நீங்கள் யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ள விரும்பினால் பூபாலசிங்கம் புத்தகக் கடையினருடன் தொடர்பு கொள்ளவும். கூடியவரை அவர்கள் உங்களது இலக்கிய ஆசையைப் பூர்த்தி செய்வார்கள்.

● உங்கள் நண்பர் முருகபூபதி வீரகேசரியை விட்டு விட்டாரே, இப்பொழுது அவர் என்ன செய்கிறார்?.

உடுவில், ஆர். மோகனதாஸ்

அவர் இப்பொழுது அவுஸ்திரேலியாவில் வசிக்கின்றார். அச்சகம் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்திருப்பதாகக் கடிதம் எழுதியுள்ளார்.

● நீங்கள் நீண்ட நாட்களாகத் தமிழகம் போகவில்லையே, சமீபத்தில் போகும் உத்தேசம் உண்டா?.

மன்னார், ம. முரளிதரன்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மார்ச் திங்கள் 23 — 24-ந் திகதிகளில் நடைபெற்ற 'தமிழ் எழுத்தாளர்களுக்கு வரவேற்பும் தமிழ் எழுத்தாளர் கருத்தரங்கும்' மகாநாட்டிற்கு அழைப்பு வந்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் ஆறு. அழகப்பன் எனக்கு அழைப்பு விடுத்திருந்தார். மார்ச் 4-ந் திகதி அனுப்பிய அழைப்பு எனக்கு 20-ந் திகதிதான் கிடைத்தது. ஒரு நல்ல சந்தர்ப்பம் தபால் தாமதத்தினால் தவறிப் போய்விட்டது. இருந்தும் கூடிய சீக்கிரம் தமிழகம் போகத் திட்டமிட்டுள்ளேன். அங்கு போய் வந்ததன் பின்னர் இலக்கியத் தகவல்களைத் திரட்டித் தர முயல்கின்றேன்.

● மல்லிகைப் பந்தல் வெளியீடுகள் தொடர்ந்து வெளிவருமா? எதை எதை வருங் காலத்தில் வெளியிட உத்தேசித்துள்ளீர்கள்?

கரவெட்டி, க. சிவநாதன்

மல்லிகையில் வெளிவந்த 51 கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து 'மல்லிகைக் கவிதைகள்' என்ற பெயரில் வெளியிட ஆவன செய்து வருகின்றேன், அடுத்து சில திட்டங்கள் போட்டுள்ளேன். ஒவ்வொரு நூலாக வெளிவரும். மல்லிகையைத் தொடர்ந்து படித்து வந்தால் எனது திட்டங்களின் வெளிப்பாடு புரியும்.

● இலங்கை அரசியல் எப்படிப் போகிறது?.

முல்லைத்தீவு, அ. தேவதாசன்

இந்த மண்ணில் இப்பொழுது அரசியலா நடைபெறுகின்றது! பேரினவாத எதேச்சாதிகாரமும் ராணுவக் கெடுபிடியுமல்லவா கோலோச்சுகின்றன. ஜனநாயக அரசியல் சூழ்நிலையே இன்று தறிகெட்டுப்போய்க் காட்சி தருகின்றது.

● '87-ம் ஆண்டு உங்களுக்கும் மல்லிகைக்கும் எப்படி?.

இணுவில், எஸ். சுந்தரம்

இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் இந்த ஆண்டு எப்படியோ அப்படியேதான், எனக்கும் மல்லிகைக்கும் இந்த ஆண்டு.

●●



ESTATE SUPPLIERS
COMMISSION AGENTS

VARIETIES OF
CONSUMER GOODS
OILMAN GOODS
TIN FOODS
GRAINS

THE EARLIEST SUPPLIERS
FOR ALL YOUR
NEEDS
Wholesale & Retail

Dial : 26587

TO

E. SITTAMPALAM & SONS

223, FIFTH CROSS STREET,
COLOMBO - 11.

(K. V. J. 68/News/87)

Registered as a News Paper at G. P. O. Sri Lanka 87 APRIL

Mallikai

Phone: 24629

With Best Compliments of:

Dealers in:

WALL PANELLING
CHIPBOARD & TIMBER



PL. S. V. SEVUGANCHETTIAR

140, ARMOUR STREET,
COLOMBO-12.

இச் சஞ்சிகை 234B காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். முகவரியில் வசிப்பவரும் ஆசிரியரும் வெளியிடுபவருமான டொமினிக் ஜீவா அவர்களினால் மல்லிகை சாதனங்களுடன் யாழ்ப்பாணம் ஸ்ரீ காந்தா அச்சகத்திலும், அட்டை விஜயா அழுத்தகத்திலும் அச்சிடப் பெற்றது.